
# சஞ்சீவி

விலை ரூபா 10-00

மலை 9: வள்ளுவர் ஆண்டு 2031 தை 15 சனிக்கிழமை(29-01-2000) SANJEAVY - Regenerative Tamil Weekly சிகரம்:35


# செஞ்.வழித் துணையுடன் பயணிகள் கப்பல் சேவை!



சேவையில் ஈடுபடவிருக்கும் இரண்டு கப்பல்களில் (Ferry) ஒன்றான 'லங்கா ராணி'யின் தோற்றம்.

## இருதரப்பிலும் இணக்கம்

யாழ்ப்பாணம்,ஜனவரி 29

**காங்கேசன்துறைக்கும் திருகோணமலைக்கும் இடையில் பயணிகள் கப்பல் சேவை ஒன்று செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் வழித் துணையுடன் விரைவில் ஆரம்பிக்கப்படவிருக்கின்றது.**

**செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கொடியுடனும் அக்குழு அதிகாரியின் பிரசன்னத்துடனும் இச்சேவையை நடத்துவதற்கு ஸ்ரீலங்கா அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் கொள்கை அளவில் இணக்கம் தெரிவித்துவிட்டதாக செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் யாழ் வதிவிடப் பிரதிநிதி நேற்றுத் தெரிவித்தார்.**

காங்கேசன்துறை - திருகோணமலை இடையே கப்பல் கூட்டுத்தாபனத்தின் இரு புதிய கப்பல்கள் மூலம் பயணிகள் சேவையை நடத்த அரசு தீர்மானித்திருப்பது தெரிந்ததே.

எண்பது கோடி ரூபா செலவில் - ஒவ்வொன்றிலும் 300 பேர் பயணம் செய்யக்கூடியதாக - சிங்கப்பூரில் புதிதாகக் கட்டப்பட்ட இந்த இரண்டு கப்பல்களில் ஒன்று கொழும்புக்கு வந்து சேர்ந்துவிட்டதாகத் தங்களுக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளதுூ என செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுப் பிரதிநிதி சொன்னார்.

முப்பது நொட் வேகத்துடன் சுமார் ஐந்து மணி நேரத்தில் திருமலை - காங்கேசன் சேவையை இக்கப்பல் பூர்த்திசெய்யும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டு தட்டு மற்றும் இரண்டு தளங்களைக் கொண்ட இக்கப்பலின் (Ferry) இரண்டாவது தளத்தில் கணிசமானளவு சரக்குகளும் ஏற்றக் கூடியதாக இருக்கும். அதன் இருக்

(8 ஆம் பக்கம் பார்க்க)

### வசாவிளான் ம.ம.வி. மாணவி கைது!

## பல பாடசாலைகளுக்கும் பகிஷ்கரிப்பு பரவுகின்றது!

யாழ்ப்பாணம்,ஜன.29

கடந்த செவ்வாயன்று குற்றப்புலனாய்வுப் பொலீஸாரால் தாய் மற்றும் சகோதரனுடன் கைது செய்யப்பட்ட வசாவிளான் மத்திய மகா வித்தியாலய மாணவி பிரியா ஸ்ரீஸ்கந்தராஜாவை விடுதலை செய்யக் கோரி மேற்படி பாடசாலை மாணவர்கள் நேற்றுமுன்தினம் ஆரம்பித்த பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் வலிகாமம் வலயத்தைச் சேர்ந்த பாடசாலைகள் பலவும் நேற்று இணைந்து கொண்டன.

இதேவேளை சம்பந்தப்பட்ட மாணவியை விடுவிக்கும் வரை பகிஷ்கரிப்புப் போராட்டம் தொடரும் எனவும் -

இந்தப் போராட்டத்தில் கலந்து கொள்ளுமாறு வடமராட்சி, யாழ்ப்பாணம் மற்றும் தீவகம், தென்மராட்சி வலயப் பாடசாலைகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகவும்-

வசாவிளான் மத்திய மகாவித்தியாலய மாணவர்கள் சார்பில் தெரிவிக்கப்பட்டது.

யாழ். நகரப் பாடசாலைகளான ஸ்ரான்லிக் கல்லூரி, வைத்தீஸ்வராக் கல்லூரி மாணவர்களும் நேற்று பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

இவ்விடயம் தொடர்பாக ஈ.பி.டி.பி. அமைப்பு 51ஆவது படையணியின் தளபதியுடன் நேற்றுத் தொடர்பு கொண்டது. ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா பாதுகாப்பு அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டுள்ளதாகவும் - தெரிவிக்கப்பட்டது. (உ-7-9-10-69-133)

### பாஸ் முறையை எதிர்த்து

## மட்டுநகரில் நேற்று பூரண ஹர்த்தால்

### ஈ.பி.டி.பி. ஏற்பாட்டில்!

மட்டக்களப்பு,ஜன.29

மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களில் இருந்து வெளியிடங்களுக்குச் செல்பவர்களுக்கு வழங்கவென உத்தேசிக்கப்பட்டிருக்கும் "பாஸ்" நடைமுறையை ஆட்சேபித்து மட்டக்களப்பு நகரில் ஈ.பி.டி.பி. அமைப்பின் ஏற்பாட்டில் முழு அளவிலான ஹர்த்தால் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

மாணவர்கள் வரவின்மையால் பாடசாலைகள் யாவும் மூடப்பட்டிருந்தன. அத்துடன் வர்த்தக நிலையங்களும் பூட்டப்பட்டிருந்தன. நேற்றுக் காலை நகரப்பகுதிக்கு வந்த பொலீஸாரும் இராணுவத்தினரும் பூட்டப்பட்டிருந்த வர்த்தக நிலையங்களைத் திறக்குமாறு கடுமையான உத்தரவு பிறப்பித்தனர் எனவும் -

திறக்காத கடைகளை உடைத்து திறந்துவிடப் போவதாக எச்சரித்தனர் எனவும் மேலும் கூறப்பட்டது.

மட்டக்களப்பு பஸ் நிலையத்துக்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## சந்திரானந்த ஓய்வு பெறுகிறார்

கொழும்பு,ஜன.29

பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் சந்திரானந்த டி சில்வா தமது சேவையில் இருந்து நாளை மறுதினம் ஓய்வுபெறுகின்றார்.

அவரது இடத்துக்கு யார் நியமிக்கப்படுவார்கள் என்பது குறித்து இன்னமும் முடிவு செய்யப்படவில்லை. (உ-3)

## பெருங் குண்டு கண்டுபிடிப்பு

மட்டக்களப்பு,ஜன.29

மட்டக்களப்பு நகருக்கு சமீபமாக நாவலடி - நாவற்குடாப் பகுதியில் நேற்று ரோந்து சென்ற படையினர் பதினைந்து கிலோ கிராம் நிறையுடைய பெரிய வெடி குண்டு ஒன்றை மீட்டுப் பின்னர் அதைச் செயலிழக்கச் செய்தனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-3)

## 36 தமிழர்கள் கண்டியில் கைது

கொழும்பு,ஜன.29

கண்டியில் நேற்றுமுன்தினம் இரவு முதல் நேற்றுக் காலை வரை மேற்கொள்ளப்பட்ட தேடுதலில் 36 தமிழர்கள் கைது செய்யப்பட்டனர்.

பல்லேவல பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தேடுதலில் 12 பேர் கைது செய்யப்பட்டனர் என்றும் -

அவர்கள் பருத்தித்துறை, வவுனியா ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

கண்டி நகரையும் அதனை அண்டிய பகுதிகளையும் சுற்றிவளைத்த படையினர் 24 தமிழர்களைக் கைது செய்தனர். (உ-3-150)

## மாணவனுக்கு மிரட்டல்

யாழ்ப்பாணம்,ஜன.29

கைதுசெய்யப்பட்டுள்ள வசாவிளான் ம.ம.வி. மாணவியை விடுவிக்கக் கோரி நடத்தப்பட்டு வரும் பாடசாலைப் பகிஷ்கரிப்பை அடுத்து அப்பாடசாலை மாணவன் ஒருவன் உரும்பிராய் கற்பகப் பிள்ளையார் கோயிலுக்கு சமீபமாக நேற்றுமுன்தினம் இரவு 7 மணி தொடக்கம் 8 மணி வரை சீருடையினரால் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார்.

உயர்தர வகுப்பு மாணவனான தான் பாடசாலைப் பகிஷ்கரிப்புத் தொடர்பாக விசாரிக்கப்பட்டு, மிரட்டப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டதாக அம்மாணவன் தெரிவித்தான்.

## கும்புறுப்பிட்டியில் 3 கடற்படையினர் உயிரிழப்பு

திருகோணமலை,ஜன.29

திருகோணமலை மாவட்டத்தில் கும்புறுப்பிட்டியில் அமைந்துள்ள 'டொச்சவெல' ஜேர்மன் வானொலி நிலையத்தில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த கடற்படையினருக்கு உணவு எடுத்துச் சென்ற கடற்படை அணி மீது நேற்று நண்பகல் 12.00 மணிக்கு விடுதலைப் புலிகள் தாக்குதல் ஒன்றை நடத்தினர்.

இந்தத் தாக்குதலில் மூன்று கடற்படையினர் உயிரிழந்தனர்; இரு கடற்படையினர் காயமடைந்தனர்.

## மரணச் சடங்குக்குச் செல்ல அவசரப் பயண வசதி

யாழ்ப்பாணம்,ஜன.29

கொழும்பில் நடைபெறும் தமது உறவினர்களின் மரணச்சடங்குகளில் கலந்து கொள்வோருக்கு விமானத்தில் அவசரமாகப் பயணம் செய்ய வசதி செய்யப்பட்டுள்ளதாக யாழ். சிவில் நிர்வாக அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

நாளாந்தம் இங்கிருந்து கொழும்புக்கு இரண்டு விமான சேவைகள் நடைபெறுகின்றன. மரணச்சடங்குகளுக்கு அவசரமாகச் செல்வோருக்காக மட்டும் ஒவ்வொரு சேவையிலும் நான்கு ஆசனங்கள் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் இந்தவகையில் ஒரு நாளைக்கு எட்டுப் பேர் அவசரமாகப் பயணம் செய்ய வசதி செய்யப்பட்டுள்ளதாகவும் சிவில் நிர்வாக அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மரணச் சடங்குகளில் கலந்து கொள்ள அவசரமாகப் பயணம் செய்யவிருப்போர் பாதுகாப்பு அனுமதி பெற்றிருப்பதோடு கொழும்பில் உறவினரின் மரணம் சம்பவித்ததை உறுதிப்படுத்தும் அங்கீகரிக்கப்பட்ட சான்றாதாரங்களையும் (பக்ஸ் செய்தி, தந்திச் செய்தி) கட்டாயம் சமர்ப்பிக்க வேண்டும். பாதுகாப்பு அனுமதியோ மரணச்சடங்கு சான்றாதாரமோ வைத்திருக்காதவர்களுக்கு அவசரப் பயண வசதிக்கு ரிக்கெட் வழங்கப்படமாட்டாது - என்றும் அந்த அதிகாரி தெளிவுபடுத்தினார்.

## சிறுவர்களைக் கைது செய்தால் பெற்றோர் முன் விசாரிக்குக!

### யாழ். செயலகக் கூட்டத்தில் தீர்மானம்

யாழ்ப்பாணம்,ஜன.29

குடாநாட்டில் கைதுசெய்யப்படும் 15 வயதுக்குட்பட்ட சிறுவர்களை அவர்களது பெற்றோர் முன்னிலையில் வைத்தே விசாரிக்கவேண்டும் என்று சர்வதேச அமைப்புக்களிடம் கோரும் தீர்மானம் ஒன்று யாழ். செயலகத்தில் நேற்று நடந்த கூட்டம் ஒன்றில் எடுக்கப்பட்டுள்ளது.

சிறுவர் பாதுகாப்பு கண்காணிப்புக் குழுவின் கூட்டம் யாழ். அரச அதிபர் க.சண்முகநாதன் தலைமையில் நடந்த சமயமே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

திருநெல்வேலிப் பகுதியில் ஆசிரியை ஒருவரால் தாக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டு யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ள வேலைக்காரச் சிறுமிக்கு பிரஸ்தாப ஆசிரியையிடம் இருந்து நஷ்டஈடு பெற்றுக் கொடுப்பது என்றும் அங்கு தீர்மானிக்கப்பட்டது. (உ-3-133)

### புதிய உயர்தரப் பரீட்சை:

## தனிப்பட்ட பரீட்சார்த்திகள் தோற்றுவதற்கு நிபந்தனை

புதிய கல்விச் சீர்திருத்தத்துக்கு ஏற்ப எதிர்வரும் ஓகஸ்டில் நடைபெறவிருக்கும் ஜி.சீ.ஈ. (உயர்தர) பரீட்சைக்கு தனிப்பட்ட பரீட்சார்த்திகள் நிபந்தனையுடன் தோற்றுவதற்கு அனுமதி அளிக்கப்படும் என்று கல்வியமைச்சுச் செயலாளர் அறிவித்துள்ளார்.

ஏற்கனவே பாடசாலை மூலமாகவோ அல்லது தனிப்பட்ட முறையிலோ உயர்தரப் பரீட்சைக்கு தோற்றவில்லை என்பதை உறுதிப்படுத்தினால் மட்டுமே அவர்கள் இந்தப் பரீட்சையில் தோற்ற அனுமதிக்கப்படுவர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தப் பரீட்சையில் மாணவர்கள் மூன்று பாடங்களுடன் சாதாரண பொதுஅறிவு என்ற வினாப்பத்திரத்துக்கும் தோற்றவேண்டும்.

இந்தப் பரீட்சைக்குத் தோற்ற விரும்புபவர்கள் அடுத்தமாதம் 5ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

அதே நேரம் வழமை போல் - பழைய பாடத்திட்டத்துக்கான பரீட்சைகள் இந்த ஆண்டும், அடுத்த ஆண்டும் மட்டும் நடத்தப்படும்.

## சுகாதார அதிகாரி மீது தாக்கு: கோண்டாவிலில் ஒருவர் கைது

கட்டாக்காலி நாய்களை நஞ்சூட்டி அழிக்கும் பணியில் ஈடுபட்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஒருவர் கடந்த புதனன்று கோண்டாவில் பகுதியில் வைத்துத் தாக்குதலுக்கு உள்ளான சம்பவம் தொடர்பாக இராசா மனோகரன் என்பவரை சுன்னாகம் பொலீஸார் கைதுசெய்துள்ளனர்.

இத் தாக்குதல் சம்பவத்தைக் கண்டித்து நல்லூர் பிரதேச சபை ஊழியர்கள் நேற்று பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

இச்சம்பவம் தொடர்பாக ஒருவர் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து தாம் நடத்தவிருந்த வேலை நிறுத்தப் போராட்டம் கைவிடப்பட்டதாக வடபிராந்திய சுகாதார சேவைகள் அமைப்பின் தொழிற்சங்கம் அறிவித்துள்ளது. (உ-7-9-180-69)

## அன்புடன் நன்றி நவில்கின்றேன்

எனது அன்பான சகோதரி *அகத்தம்மா பிறாஸ்பிள்ளை* அவர்களின் மரணச் செய்தி அறிந்து வீட்டிற்கு வந்து ஆறுதல் சொல்லி அஞ்சலி செலுத்திய அருட் தந்தையர்கள், அருட் சகோதரிகள், நண்பர்கள், புனித ஜோன் பொஸ்கோ அதிபர் ஆசிரியர்கள், மற்றும் சில்லையூர் மக்கள் ஆகிய அனைவருக்கும், கடிதமூலம் அனுதாபங்கள் தெரிவித்த அன்பர்களுக்கும் அடக்க நாள் அன்று திருப்பலி ஒப்புக்கொடுத்த அருட்தந்தையர்களுக்கும், பங்குகொண்ட அனைத்து அன்பர்களுக்கும், இரங்கல் உரைகள் ஆற்றிய பெரியார்களுக்கும் சிறப்பாக எல்லா நிகழ்வுகளும் ஒழுங்காகவும், சிறப்பாகவும் அமைய முழு ஒத்துழைப்பையும் நல்கிய சில்லாலை பங்குத்தந்தைக்கும், என்னோடு உடன் இருந்து உதவிய அன்பு உள்ளங்களுக்கும் எனது மனம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தகவல்:
அன்புடன்
அருட். சகோதரி ஸ்ரனிஸ்லாஸ் மேரி, அ.கா.
ஹோர்து மடம்,
கோவில் வீதி,யாழ்ப்பாணம்

(73172)

# இளைஞர் உலகக் கிண்ணம் இந்தியாவுக்கு!

கொழும்பு,ஜன.29

இலங்கை - இந்திய அணிகளுக்கு இடையில் நேற்று நடைபெற்ற இளைஞர் உலகக் கிண்ணத்துக்கான இறுதியாட்டத்தில் வென்று கிண்ணத்தை தனதாக்கியது இந்திய அணி.

கொழும்பு எஸ்.எஸ்.ஸி மைதானத்தில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. இலங்கை அணியின் ஆரம்பம் மிகமோசமாக அமைந்த போதிலும் பின்னர் ஒருவாறு சுதாகரித்து தன்னை ஸ்திரப்படுத்த முயன்றது. இருப்பினும் 48.1 ஓவர்களில் இலங்கை அணி தனது சகல விக்கெட்டுக்களையும் இழந்து 178 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

தொடர்ந்து துடுப்பெடுத்தாட களமிறங்கிய இந்திய அணி 40.4 ஓவர்களிலேயே வெற்றிக்குத் தேவையான ஓட்டங்களைப் பெற்றது.

இந்த உலகக் கிண்ணத்தை கைப்பற்றியதன் மூலம் புதிய ஆயிரமாம் ஆண்டின் முதலாவது கிண்ணத்தை தனதாக்கிய பெருமையை இந்திய கனிஷ்ட அணிபெற்றுள்ளது.

## கண்ணீர் அஞ்சலி

இலங்கை மின்சார சபையின் வடமாகாண
பிரதிப் பொது முகாமையாளராக இருந்து
தற்போது மேலதிகப் பொது முகாமையாளராக
எமது தலைமை அலுவலகத்தில்
கடமையாற்றும் திரு வே.இராஜேந்திரனின்
அன்புப் பாரியார்

**திருமதி சகுந்தலாதேவி இராஜேந்திரன்**

அவர்கள் காலமானதையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களை அன்னாரின் குடுபத்தினருக்குத் தெரிவிக்கின்றோம். துடிதுடிக்கும் அன்னாரின் குடும்பத்தவர்களின் ஆறாத்துயரில் நாமும் பங்கு கொள்கின்றோம்.

உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்
பிரதிப் பொது முகாமையாளர் (வடக்கு)
அலுவலகம்,
இலங்கை மின்சார சபை,
யாழ்ப்பாணம். (C/10847)

## தலையாழி அருள்மிகு ஞானவைரவர் ஆலய அறநெறிப்பாடசாலை

### பரிசளிப்பு விழா – 2000

இடம்:- ஆலய முன்றில்
காலம்:- 29.01.2000 இன்று மாலை 4 மணி
தலைமை:- திரு.க.மகேஸ்வரன். (ஆலய தொண்டர் சபைத் தலைவர்)
முதன்மை விருந்தனர்:- திரு.பா.செந்தில்நந்தனன் *(பிரதேச செயலர், நல்லூர்.)*
சிறப்பு விருந்தினர்:- திரு.கோ.சி. வேலாயுதம் *("வலம்புரி" பிரதம ஆசிரியர், முன்னாள் கல்விப்பணிப்பாளர்)*
இசையமுதம் - வண்ணை இளைஞர்கள்

அனைவரையும் அழைக்கின்றோம்!

அதிபர், ஆசிரியர், மாணவர்,
ஆலய தொண்டர்சபை,
ஆலய பரிபாலனசபை.

(73158)

## ராஜா

யாழ்ப்பாணம்
ரசிகர்களே!
கடைசிவாரமாக
**அஜித் ~ சிம்ரன்**
மற்றும் பலர் நடித்த
அவள் வருவாளா?
*10.30, 2.00, 5.00*
(C/10845)

## நாகம்ஸ்

சுன்னாகம்
சரத்குமார்
தேவயாணியின்
**சூரியவம்சம்**
(ரீல்ஸ்)
காட்சிகள்: 11.00, 2.30
(புதிய நேரம்)
(C/10843)

## லிபேட்டி

அச்சுவேலி
விஜயகாந்த்
(இரட்டைவேடம்)
மீனா, பிரபுதேவா
நடித்த
வானத்தைப் போல
(புதிய வெளியீடு)
காட்சிகள் 10.30, 2.30
T.P 070 – 212223
070 – 212678
(73044)

## கண்ணீர் அஞ்சலி

மல்லாகம் ஈஸ்வரி மர அரிவு ஆலை
உரிமையாளர்
திரு வே.உதயகுமார் (தம்பி)
அவர்களின் அன்புத் தந்தையார்

**அமரர் இளையவி வேலுப்பிள்ளை**

அவர்களது மறைவு குறித்து எமது கண்ணீர் அஞ்சலிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

உரிமையாளர்,
ஈஸ்வரி மரக்காலை (அன்) தொழிலகம்,
பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி.
(73173)

# கண்ணீர்க் காணிக்கை

இலங்கை மின்சார சபையின் முன்னாள் வடமாகாண பிரதிப் பொது முகாமையாளரும் தற்போதைய இலங்கை மின்சாரசபை மேலதிக பொது முகாமையாளருமாகிய

**திரு.வே.இராஜேந்திரன்** அவர்களின் பாசமிகு துணைவியார்

## திருமதி சகுந்தலாதேவி இராஜேந்திரன்

அவர்களின் திடீர் மறைவால் அதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையும் அடைந்து துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவர்களின் துயரிலும் பங்குகொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*எஸ்.ஜே.எலெக்ரிக்கல்ஸ் ஸ்தாபனத்தார்,*
**யாழ்ப்பாணம்-கொழும்பு**

(73171)



கோப்பாய் தெற்கு இளஞ்சுடர் இளைஞர் கழகத்தினால் கடந்த 20 ஆம் திகதி நடத்தப்பட்ட நடமாடும் பயிற்சிநெறிக் கண்காட்சியினை யாழ் மாவட்ட தேசிய இளைஞர் சேவை மன்ற உதவி இயக்குநர் த.சிவதட்சனா மூர்த்தி நாடாவினை வெட்டி திறந்து வைப்பதனையும் அருகில் வலி.கிழக்கு பிரதேசசெயலர் க.கேதீஸ்வரனும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் நிற்பதையும் இப்படத்தில் காணலாம்.

*படம். பொ.இராஜேஸ்வரன்.*

## மீன் வியாபாரியை வாளால் வெட்ட முயற்சி

வலி.கிழக்கு.ஜன.29

மீன் வியாபாரம் செய்து கொண்டிருந்த ஒருவரை வாளால் வெட்ட முயன்றவர் படையினரிடம் சிக்கினார். அவரிடம் இருந்து வாளை பறிமுதல் செய்தபோதும் அவர் பின்னர் தப்பிச் சென்றுவிட்டதாகக் கூறப்படுகிறது.

இச்சம்பவம் கடந்த புதனன்று கல்வியங்காடு சந்தைப் பகுதியில் இடம்பெற்றது.

வாளால் வெட்ட முயன்ற நபரிடம் இருந்து பிரஸ்தாப மீன் வியாபாரி ஒருவாறு தப்பிக்கொண்டார்.

தப்பியோடிய நபரை பொலீஸார் தேடிவருகின்றனர். (ஐ-180)

## ஒடியோ நிகழ்ச்சித் தொடரில்

சதானந்தசரஸ்வதி சுவாமிகளின் விரிவுரைகள் அடங்கிய ஒடியோ நிகழ்ச்சித் தொடரில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 5.15 முதல் 6.15 மணிவரை 'சங்கரரின் வாழ்க்கை' எனும் தலைப்பிலான விரிவுரை ஒலி பரப்பப்படும்.

இலக்கம் 48, கோவில் வீதி என்னும் முகவரியில் உள்ள இல்லத்தில் இந்நிகழ்ச்சி நடைபெற்று வருகின்றது. (க)

## வெளிவாரி கலைப் பரீட்சை

பேராதனைபல்கலைக்கழகத்தின் வெளிவாரிப் பட்டப் பரீட்சைக்கான கலை இறுதித் தேர்வுகள் பெப்ரவரி மாதம் 19ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெறவுள்ளன.

இருபது பாடங்களைக் கொண்ட மேற்படி பரீட்சையில் 17 பாடங்கள் நடைபெற்று முடிந்த வேளையில் ஜனாதிபதித் தேர்தல் காரணமாக மிகுதி 3 பாடங்களும் பிற்போடப்பட்டன.

மிகுதி 3பாடங்களுக்குமான பரீட்சைகள் யாழ். பல்கலைக்கழகத்தில் பெப்ரவரி 19ஆம் 20ஆம் 26ஆம் 27ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

அரசியல் விஞ்ஞானம் 19ஆம் திகதியும் -

தத்துவவியல் 20ஆம் 26ஆம் திகதிகளிலும் -

புவியியல் 27ஆம் திகதியும் - காலை 9.00 மணிக்கு ஆரம்பமாக உள்ளதாக யாழ். பல்கலைக்கழகப் பதிவாளர் தெரிவித்துள்ளார். (ஐ-10)

## இவ்வாண்டு அபிவிருத்திக்கு
# பிரதேச செயலகங்களுக்கு 25 லட்சம் ரூபா நிதி

வலி.கிழக்கு.ஜன.29

யாழ்.மாவட்டத்தில் இவ்வருட பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் பிரதேச செயலகங்களுக்கு தலா 25 லட்சம் ரூபா ஒதுக்கப்பட உள்ளது.

இந்நிதி மூலம் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தித் திட்ட முன்மொழிவுகளை அனுப்பி வைக்குமாறு பிரதேச செயலகங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

திட்ட முன்மொழிவுகளை யாழ். செயலகம் கோரியதை அடுத்து கிராம அலுவலர்கள் மூலம் அபிவிருத்தி வேலைகள் தொடர்பான விவரங்களை பிரதேச செயலகங்கள் திரட்டி வருகின்றன.

(ஐ-180)


## மகாலட்சுமி ஸ்ரோர்ஸ்

உள்நாட்டு, வெளிநாட்டுக்குரிய வீடியோ கசட்டுகள் துரிதகெதியில் அனுப்பிவைக்கப்படும்.

**மகாலட்சுமி ஸ்ரோர்ஸ்,**
**212, ஸ்ரான்லி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

தொலைபேசி இல: 2025
2024.

(C/10840)



## கொழும்புத்துறை சிறுவர் பாதுகாப்பு நிதிய சிறுவர் கழக நிர்வாக உறுப்பினர்கள், மருராணி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்க நிர்வாக அங்கத்தவர்களுக்குமான

## அறிவித்தல்

தற்போதைய சூழ்நிலையில் சிறுவர் கழகத்தின் தொடர் செயற்பாடுகள் பற்றி கலந்துரையாட இருப்பதனால் றெசாரியோ, அன்னை வேளாங்கன்னி, வைஷ்ணவன் வைஷ்ணவி சிறுவர் கழக நிர்வாக உறுப்பினர்கள், ஆற்றுப்படுத்தல் பயிற்சி நெறியில் பங்குபற்றுவோர், சிறுவர் நாடக அரங்கக் குழு உறுப்பினர்கள் மற்றும் மருராணி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்க நிர்வாக உறுப்பினர்கள் ஆகியோரை 2.1.2000 புதன்கிழமை பி.ப. 2.30 மணிக்கு சிறுவர் பாதுகாப்பு நிதிய அலுவலகத்திற்கு சமுகமளிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

மாவட்ட இணைப்பாளர்,
சிறுவர் பாதுகாப்பு நிதியம்.

146, கோவில் வீதி,
நல்லூர்.

(73153)



## திரிஸ்ரல் சென்ரர்

நெல்லியடி

2000 A/L

"கிரயக்கணக்கு"

by - பாலா

ஆரம்பம் - 28 - 01 - 2000

முடபாமணி

(73152)



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

வெளிவாரி பதிவுகள் பரீட்சைகள் அலகு
வெளிவாரிப் பரீட்சைகள்

1. **நுண்கலைமாணி முதற் தேர்வு - 1997/98**
(கர்நாடக சங்கீதம்/பரதநாட்டியம்/வயலின்/வீணை/மிருதங்கம்)

2. **நுண்கலைமாணித் தேர்வு, பகுதி I - 1997/98**
(கர்நாடக சங்கீதம்/பரதநாட்டியம்/வயலின்/வீணை/மிருதங்கம்)

3. **நுண்கலைமாணித் தேர்வு, பகுதி II - 1997/98**
(கர்நாடக சங்கீதம்/பரதநாட்டியம்/வயலின்/வீணை/மிருதங்கம்)

4. **நுண்கலைமாணித் தேர்வு பகுதி III - 1997/98**
(கர்நாடக சங்கீதம்/பரதநாட்டியம்/வயலின்/வீணை/மிருதங்கம்)

**மேற்குறிப்பிட்ட பரீட்சைகள் யாவும் 2000 மார்ச் மாதம் முற்பகுதியில் நடைபெறவுள்ளன. எனவே இப்பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் பரீட்சார்த்திகள் யாழ். பல்கலைக்கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கிக் கிளையில் ரூபா 15/- இனைச் செலுத்தியமைக்கான பற்றுச் சீட்டினை வெளிவாரி பதிவுகள் பரீட்சைகள் அலகில் சமர்ப்பித்து விண்ணப்பப் படிவத்தினைப் பெற்றுக்கொள்ளலாம்**

* வவுனியா வளாகத்தில் மேற்குறிப்பிட்ட பரீட்சைகள் நடைபெறமாட்டாது என்பதனைப் பரீட்சார்த்திகள் கவனத்தில் கொள்ளவும்.

* நுண்கலைமாணித் தேர்வு, பகுதி II, IIIற்கு ஏற்கனவே விண்ணப்பித்த பரீட்சார்த்திகள் தற்போது விண்ணப்பிக்கத் தேவையில்லை.


பரீட்சார்த்திகளிடமிருந்து பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள், வெளிவாரி பதிவுகள் பரீட்சைகள் அலகு அலுவலகத்தில் 2000.02.18 ஆம் திகதிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

பதிவாளர்,
யாழ். பல்கலைக்கழகம்.

26.01.2000. (C/19836)



## இரு பரமேறியோர் அன்புசூர் நாளும் ஓராண்டு பூர்த்தி நாளும்
## 29.01.2000



**போதகர் ஞா. அலோசியஸ்**
(யாழ்தூர சுவிசேஷ சபை, யாழ்ப்பாணம்)

காலமோ சென்றாலும் வாலிபம் மறைந்தாலும் நாள்களோ குறுகியிருந்தாலும் தம் இளவயதில் தம் ஓட்டத்தை நன்றாக ஓடி ஆண்டவரின் மடியில் இளைப்பாறும் ஞானப்பிரகாசம் அலோசியஸ் அவர்கட்கு எமது அன்பின் ஞாபக மலர்கள் உரித்தாக வேண்டுகின்றோம்.

பெற்றோர், சகோதரர்கள்,
மனைவி, பிள்ளைகள்.

இல. 12/6, செம்மணி வீதி,
நாயன்மார்கட்டு,
யாழ்ப்பாணம்.

(73143)



## MINE ACTION ASSISTANCE GROUP (MAGG) - JAFFNA

(A corporation between Goverment Agent, Jaffna and the UNOPS - JRRP)

# SIX - VACANCIES

## Bush Clearer

**Job Description :- Duties to include**

- Collection & positioning of pegs
- Digging pits for dumping metal fragments
- Assist in the establishment of the Control point each day
- Assist with minefield fencing
- Cut and prepare pegs for safe lanes
- Act as sentries during demolition in the field

**Hours of work:**

- Mon. to Fri. 06.00 till 14.00
- Sat. 06.00 till 12.30

**Eligibility Requirements:**

- Must have basci working knowledge of English
- Expected to make his own way to work site

**Probation period:**

✓ One month

Please send your applications to reach the office before February 2nd, 2000 to:

**Mine Action Officer,**
Secretariat,
Jaffna.

(73142)

## சின்னஞ்சிறு விளம்பரம்

### இறைச்சிக்கோழி

இறைச்சிக்கோழி புறோயிலர் விற்பனைக்குண்டு. சுத்தம் செய்தல் இலவசம். தொடர்பு:- மான்பாடசாலை வீதி, உடுவில், சுன்னாகம். (72981)

இறைச்சிக்கோழி (Broilers) கல் பேட்ஸ் என்பன விற்பனைக்குண்டு. தினமும் சுத்தம் செய்து கொடுக்கப் படும். தொடர்பு:- 40, கோயில்வீதி, யாழ்ப்பாணம். (72901)

இறைச்சிக்கோழி (Broiler) விற் பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து வேண்டிய நிறைகளில் பெற் றுக்கொள்ளலாம். தொடர்பு:- இல.15, 6ஆம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம். (சின்னக்கடைஅருகில்). (73085)

புறோயிலர், கல்பேட்ஸ் இறைச் சிக்கோழிகள் சுத்தம் செய்து (பாதிக் கோழிகள் உட்பட) பெற்றுக் கொள் ளலாம். 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) முத்திரைச் சந்தையடி நல்லூர். (73014)

### யாழ்ப்பாணம்

கொழும்பில் ஒரு வீடு நாடகம் கேட்டீர்களா? அதை எழுதிய அரா லியூர் ந.சுந்தரம்பிள்ளையின் நூல் கள் 1. யாழ்ப்பாணம் சிறுகதைகள் 2.யாழ்ப்பாணமா? கொழும்பா? நாடக நூல் 3. நாடகம் எழுதுவது எப்படி? 4. யாழ்ப்பாணத்தில் அந்த ஆறு மாதங்கள் ரூபா50/- (73046)

### சோதிடம்

கணனி மூலம் தமிழில் ஜாதகங் களை துல்லியமாக கணிப்பதற்கும் பலனை அறிவதற்கும் எண்சோதிடம் பார்ப்பதற்கும் பிறந்தநேரம், ஊர், பெயர் இவற்றுடன் தொடர்பு கொள் ளும் முகவரி க.கிருபாணந்தக் குருக் கள் பருத்தித்துறைவீதி, கிராம்புவில், சாவகச்சேரி.
T.P & Fax 070 - 212300 (73020)

### மரக்கன்றுகள் விற்பனை

மா, பலா, தோடை,தேசி, நல்லின குறோட்டன், றோஸ், செவ்வரத்தை மற்றும் பூங்கன்றுகள், பூச்செடிகள் பெற்றுக்கொள்ளலாம். இல.19, முரு கேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச்சந் தையடி, நல்லூர். (73071)

### விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள 12" சீவல் பட்டடையும், குபேட்டா என்ஜி னும் உடன் விற்பனைக்கு உண்டு. எந்த நேரமும் பார்வையிடலாம். தொடர்பு:- து.தேவராசா கோட்டைக் காடு, மல்லாகம். (72744)

அமெரிக்காவில் இருந்து தருவிக் கப்பட்ட புத்தம் புதிய ஜப்பான் Panasonic plain Paper Fax Kx-EP 250C, ஸ்பீக்கர் Phone ஓட்டோ மட்டிக் Fax Phone Swich, பல தரப்பட்ட கொப்பி 99 வரை, பெரி தாக்க சிறுப்பிக்கக் கூடிய வசதிகள் உடையது. தொடர்பு:- ஆனந்தன் (கனடா), ஆனந்தபவன் 5, மஞ்ச வனப்பதி வீதி, கொக்குவில் மேற்கு (மஞ்சவனப்பதி ஆலயம் அருகில்.) (73105)

4 Head Multi Digital Converter 110v - 240v ஓட்டோ வோல்ட்டேஜ் PAL/NTSC SECAM உட்பட சகல நாடுகளின் பிரதி களும் செய்யக் கூடியதும் வேகத் தை குறைத்தும் அதிகரித்தும் கட்டம் கட்டமாக படம் பார்க்கக் கூடியதும் வெளிநாட்டு கொப்பி றெக்கோடிங்கிற்கு ஏற்றதும், புத்தம் புதிய அதி நவீன ஜப்பான் தயாரிப்பு Stereo Video Casette Recorder . ஆனந்தன் (கனடா) இல. 5 மஞ்ச வனப்பதி வீதி, கொக்குவில் மேற்கு. (73104)

Honda C 70 எலெக்ரோனிக் எக்கனோமி - 12v பற்றறி 29,000 Km மட்டும் பாவித்த புதிய மோட் டார் சைக்கிள், சிவப்பு நிறம், (அதி உயர்ந்த நிலையில்) அத்துடன் B.S.A மோட்டார் சைக்கிளும் விற் பனைக்குண்டு. ஆனந்தன் (கனடா) ஆனந்தபவன், இல 5, மஞ்சவனப் பதிவீதி, கொக்குவில் மேற்கு (மஞ்ச வனப்பதி ஆலயம் அருகில்) •(அல் லது பாலன் சலூன் அருகில்) கொக் குவில் மேற்கு (73103)

நல்ல நிலையில் உள்ள யமகா - 80 மோட்டார் சைக்கிள் (நியூஸ் மேற்) உடன் விற்பனைக்கு உண்டு. (2000ஆம் ஆண்டு வரிகட்டியுள்ளது) தொடர்பு சோ.சிவராஜா 97.பிறவுண றோட், யாழ்ப்பாணம். (73092)


# யாழ். பல்கலைக்கழகத்தில் 'கல்விமானி' கற்கை நெறி

யாழ்ப்பாணம், ஜன.29

யாழ். பல்கலைக்கழகத்தில் கல்விமானி கற்கை நெறி ஒக்ரோபர் மாதத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது என்று யாழ். பல்கலைக்கழக பதில் துணைவேந்தரும், கலைப்பீடாதிபதி யுமான செ.பாலச்சந்திரன் தெரிவித் தார்.

இந்தக் கற்கை நெறிக்கு 50 பேர் சேர்த்துக் கொள்ளப்படவுள் ளார்கள் என்றும் - 4 வருடங்களைக் கொண்ட இந்தக் கற்கை நெறியை பூர்த்தி செய்பவர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்படும் என்றும் -

அவர் கூறினார்.

வேலைவாய்ப்பு வழங்குவது குறித்து மாகாணக்கல்வி அமைச் சின் செயலாளர் சுந்தரம் டிவகலாலா உறுதியளித்துள்ளார் என்றும் அவர் கூறினார். (ஐ-5-10)


## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 20 - 11 - 1938

மறைவு 25 - 01 - 1995

அமரா பொன்னையா சிவலிங்கம்
(மருந்தாளர் - மாநகரசபை கொழும்பு)

திதி:- 29-01-2000

ஐந்தாண்டுகள் உருண்டோடினதே ஐயா அன் புத் துணைவராய் பாசமிகு தந்தையாய் எமக்கு எல்லாம் நல்வழி காட்டிய அன்புத் தெய்வமே!

நீங்கள் எம்மைவிட்டுப் பிரிந்து ஐந்து ஆண்டு கள் சென்றாலும் உங்கள் அன்பு நினைவலைகள் எம்மை விட்டு நீங்காது ஐயா.

பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள் பேர்த்தி.

18, இலந்தைக்குளம் வீதி,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

(73089)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 23 - 09 - 1931

உதிர்வு 30 - 12 - 1999

அமரர்
இளையதம்பி நாகேந்திரம்
(ஓய்வுபெற்ற திறைசேரி உத்தியோகத்தர் - முன்னாள் ஸ்தாபன முகாமையாளர், பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ.சங்கம், உரிமையாளர்: கலாஜோதி புத்தக நிலையம், சங்கானை)

பாசத் திருவுருவே எங்கள் அப்பா
எம் வாழ்வில் ஒளி ஏற்ற உம் வாழ்வை அர்ப்பணித்தீர்
ஊக்கத்தால் உயர்வு தந்து உள்ளன்புடன் உறவாடினீர்
உயிர்கள் இங்கு துடிக்குதப்பா உம் நினைவில் வாடுதப்பா
பாசத்திற்கு தினம் ஏங்கிப் பரிதவிக்கிறோம் நீங்கள் இன்றி

தங்கள் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல
இறைனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

பிரிவால் வாடும்
மனைவி, மக்கள்
மருமகன், பேரப்பிள்ளைகள்.

7 ஆம் கட்டை, சண்டிலிப்பாய்.
கலாஜோதி புத்தக நிலையம்,
சங்கானை.

(C/10795)

## சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்

### வருடாந்தப் பொதுக்கூட்டம்

காலம் :- 29 - 01 - 2000 சனிக்கிழமை

நேரம் :- நண்பகல் 12.00

இடம் :- சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் பிரதான மண்டபத்தில்.

நண்பகலுடன் வணிக நிலையங்களைப் பூட்டி அங்கத்தவர்கள் தவறாது சமுகமளித்து மதிய போசனத்திலும் பங்குபற்றவும். அங் கத்தவர்கள் கொழும்பு சென்றிருந்தால் முகாமையாளர்கள் பங்கு பற்றலாம்.

புலமைப் பரிசில் நிதி:- தென்மராட்சியில் 5ஆம் ஆண்டுப் புலமைப் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவர்க ளுக்கு 'அமரர் ச.நமசிவாயம்' புலமைப் பரிசில் நிதி கையளித்தல்.

2000ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாக தெரிவு.

கைத்தொழில் வணிகர் மன்றம்,
சாவகச்சேரி.

செயலாளர்.

(C/10831)

## நீங்கா நினைவுகளில் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 19 - 07 - 1927

மறைவு 09 - 02 - 1999

அமரர் கணபதிப்பிள்ளை சுந்தரமூர்த்தி
(முன்னாள் ஆசிரியர் - யா/மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலயம்)


ஆண்டு ஒன்றோடி மறைந்தாலும்
உங்கள் நினைவுகள் எம்மை விட்டு
எக்காலமும் நீங்காதையா!
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

இல.04, பாரதி வீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(73133)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் அருணாசலம் மகாதேவா
(இலங்கை மின்சாரசபை, சாவகச்சேரி)

அன்னை மடியில்
1948 - 01 - 05

ஆண்டவன் அடியில்
1997 - 01 - 29

அன்பின் திருவுருவாய் பண்பின் சிகரமாய்
பாசத்தின் உறைவிடமாய் எம்மையெல்லாம்
வாழ்வாங்கு வாழவைத்த அன்புத் தெய்வமே
ஆண்டுகள் மூன்று ஓடி மறைந்தாலும் - உங்கள்
நினைவுகள் எக்காலமும் நீங்காதப்பா!

கற்குழி,
முதலாம் ஒழுங்கை,
சாவகச்சேரி.

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்.

(C/10830)

## சுவீடன் அதிகாரிகள் விஜயம்

அண்மையில் குடாநாட்டுக்கு. விஜயம் செய்திருந்த சுவீடன் நாட்டு அதிகாரிகள் குழு மனிதஉரிமைகள் ஆணைக்குழுவின்யாழ். அலுவலகத்துக்கும் சென்றிருந்தது.

'சீடா' அனைத்துலக அபிவிருத்திக்கான கூட்டுறவு முகவர் நிலைய பிரதிநிதிகளான டேவிட் வைல்கிங், ஈவா மெல்கிரெம் மற்றும் இலங்கைக்கான சுவீடன் தூதரக அதிகாரி ஸ்ரீனோ கால்ரன் ஆகியோரே ஆணைக் குழு அலுவலகத்துக்கு விஜயம் செய்தனர். ஆணைக்குழு அதிகாரி என். ஜீவேஸ்வராவைச் சந்தித்து உரையாடிய இவர்கள் குடாநாட்டில் இடம்பெறும் கைதுகள், மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான தகவல்களை அறிந்து கொண்டனர். (ஜ-9)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

**30 -12- 1999ல் இறைவனடி சேர்ந்த சங்கானை வர்த்தக சங்க நிர்வாக உறுப்பினரும், கலாஜோதி புத்தக நிலைய உரிமையாளருமாகிய**

### அமரர் இளையதம்பி நாகேந்திரம்

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

*வர்த்தகர்களின் சார்பில்*
*சங்கானை வர்த்தக சங்கம்.*

(73137)

## மருத்துவசேவை இடமாற்றம்

### சஞ்சீவி சிகிச்சை நிலையம்
### SANJEEVI MEDICALS

### நாவற்குழி சிகிச்சை நிலையம்

மேற்படி பெயருடன் தாவடி, அம்பலவாண வேத விநாயகர் ஆலயத்துக்கு அண்மையாக, பாடசாலை வீதியில் இயங்கி வருகின்றது.

வைத்திய கலாநிதி
*சி. சிவசுப்பிரமணியம்*

(73097)



# யாழ். ஆஸ்பத்திரி சூழலை பாதுகாப்பு வலயமாக்குக!

## வைத்திய அதிகாரிகள் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜன.29

யாழ். போதனாவைத்தியசாலை பிரதேசத்தை செஞ்சிலுவைச் சர்வ தேசக் குழுவின் பொறுப்பில் பாது காப்பு வலயமாகப் பிரகடனம் செய் யுமாறு அரசாங்க வைத்திய அதி காரிகள் சங்கத்தின் யாழ்.கிளையி னர் சுகாதாரஅமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த டிசெம்பர் மாதம் முதல் யாழ். குடாநாட்டில் நிலவும் அசாதா ரண சூழ்நிலையைத் தொடர்ந்தே டாக்டர்கள் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் ஏற்படும் பதற்ற மான சூழ்நிலைகளின்போது டாக்டர் கள் தமது கடமைகளைச் செய்வ தற்கு பாதுகாப்பு இல்லை என்பதை கடந்தகால அனுபவங்கள் மூலம் உணரமுடியும். எனவே டாக்டர்க ளின் பணிதொடர வைத்தியசாலைப் பிரதேசம் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் பொறுப்பில் ஒப்படைக்கப் பட்டு டாக்டர்கள் மற்றும் நோயாளர் கள், ஊழியர்களின் பாதுகாப்பு உறு திப்படுத்தப்படவேண்டும் என்று இது தொடர்பாக சுகாதார அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ள கடிதத்தில் தெரி விக்கப்பட்டுள்ளது. (ஐ-5)

# இடைக்கால நிர்வாக சபை திட்டம் கைவிடப்பட்டது

கொழும்பு,ஜன.29

இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வை உள்ளடக்கிய அரசமைப்புத் திருத்தச் சட்டத்தை அரசு மூன்று மாதங்களுக்குள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க திட்டமிட்டிருப்பதால் வடக்கு - கிழக்கு மாகாணத்துக்கான இடைக்கால நிர்வாகசபை அமைக் கும் யோசனை கைவிடப்பட்டுள்ளதா கத் தெரியவருகின்றது.

இடைக்கால நிர்வாகசபை ஜன வரி மாதம் முதல் செயற்படத் தொடங்கும் என ஜனாதிபதி சந்தி ரிகா குமாரதுங்க ஏற்கனவே அறி வித்திருந்த போதிலும் இதுவரை இடைக்கால நிர்வாகசபை அமைக் கப்படவில்லை.

இடைக்கால நிர்வாகசபைஅமைக் கப்பட்டாலும் கூட அது செயற்பட ஆரம்பிக்கப் பல மாதங்கள் செல்ல லாம் என்பதால் இடைக்கால நிர் வாகசபை சாத்தியப்படாது என அர சுத் தொடர்பு வட்டாரங்கள் தெரிவித் தன.

இடைக்கால நிர்வாக சபைக்கான செலவுக்காக ஏழு கோடி 50 லட்சம் ரூபாவை வடக்கு - கிழக்கு மாகா ணசபை திறைசேரியிடம் கேட்டிருந் தது. இந்த நிதி வழங்கப்படாத நிலையில் இடைக்கால நிர்வாக சபை அமைக்கும் திட்டமும் கைவி டப்பட்டுள்ளது.

அதேவேளை - அரசமைப்புச் சீர் திருத்தம் தொடர்பாக ஆராய்ந்து வரும் ஜனாதிபதி தலைமையிலான குழு அடுத்தவாரம் முதல் தமிழ் அரசியல் கட்சியின் பிரதிநிதிகளு டன் ஆலோசனை நடத்தவுள்ளது. (இ-3-4)





| | 180மிலீ | 375மிலீ | 750மிலீ |
|---|---|---|---|
| றொக்லண்ட் பழைய சாராயம் 34% | 90/= | 165/= | 320/= |
| றொக்லண்ட் பழைய சாராயம் 29% | 85/= | 155/= | 295/= |
| திரீ ஸ்டார் அதிசக்தி | 70/= | 122/= | 220/= |

இப்போது கீழ்காணும் எமது ஏக விநியோகத்தர்களிடம் கிடைக்கும்.

வாமாஸ் 148/11, ஸ்டேன்லி வீதி, யாழ்ப்பாணம்.

ROCKLAND

றொக்லண்ட் டிஸ்றிலறிஸ் லிமிட்டெட்

ஏழு தசாப்தத்திற்கும் மேலான சிறந்த தரம்!


## 173 ஆவது ஆண்டு நிறைவு விழா

யாழ்ப்பாணம்,ஜன.29

கிறிஸ்தவ கவியரசர் மகா வித்து வான் ஹென்றி ஆல்பிரட்டு கிருஷ்ண பிள்ளையின் 173 ஆம் ஆண்டு நிறைவு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அதிவண. கலா நிதி எஸ்.ஜெபநேசன் தலைமையில் யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் அமைந் துள்ள யாழ்ப்பாணக் கல்லூரி வெளி வாரிப் பட்டதாரிப்பிரிவு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக பேராசிரியர் எஸ்.சிவலிங்கராசா, திருமதி கே.பவ சிங்கம் ஆகியோர் சிறப்புரை ஆற்று வர். (ஐ-க-10)

## பரிசளிப்பு விழா

வலி.வடக்கு,ஜன.29

தலையாளி ஞானவைரவர் ஆலய அறநெறிப்பாடசாலை பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு தலைவர் க.மகேந்திரன் தலைமையில் நடைபெறும்.

இந்தவிழாவில் பிரதம விருந்தி னராக நல்லூர் பிரதேச செயலாளர் பா.செந்தில்நந்தனன் கலந்து கொள் வார். (க-86)

## சான்றிதழ் வழங்கும் வைபவம்

யாழ்ப்பாணம்,ஜன.29

டி.சி.எஸ். கணனி தொழில்நுட்பக் கல்லூரியின் 98-99 ஆண்டுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். இளங்கலைஞர் மன்ற மண்டபத்தில் நடைபெறவுள் ளது.

இந்த நிகழ்விற்கு பிரதமவிருந்தி னராக ஐ.நா. அபிவிருத்தித் திட்டத் தின் கருத்திட்டப் பணிப்பாளரைன் பிரையுவன்பெல்ட்டும் கௌரவ விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக பொருளியல் பீடத் தலைவர் வி.பி. சிவநாதனும் கலந்துகொள்வர்.

நிகழ்வின் சிறப்பு அம்சமாக 'அருணா' இசைக்குழுவின் இசை நிகழ்ச்சியும் இடம்பெறவுள்ளது. (ஐ-10)

## சுகவாழ்வு உளவள பயிற்சி ஆரம்பம்

வலி.வடக்கு,ஜன.29

பெண் உளவளத் துணையாளர் களுக்கான பயிற்சி வகுப்பு ஆரம்ப வைபவம் இன்று சனி காலை ஆஸ் பத்திரி வீதியில் அமைந்துள்ள சுக வாழ்வு நிலையத்தில் நடைபெறவுள் ளது.

'சுகவாழ்வு' நிலையத் தலைவர் கே.ஸ்ரீபதி தலைமையில் நடை பெறும் இந்த நிகழ்வில் யாழ்.பல் கலைக்கழக மருத்துவபீட உளவி யல் விரிவுரையாளர் வண.பிதா டேமியன் வகுப்புகளை நடத்த உள் ளார். (ஐ-86)

## மனையியல் நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம்,ஜன.29

யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபை யினால் நடத்தப்படும் மனைப் பொரு ளியல் அடிப்படைப் பயிற்சிநெறிக் கான நேர்முகப் பரீட்சை அடுத்த மாதம் 2ஆம் திகதி பி.ப.2.30மணிக்கு மாவட்டக் கூட்டுறவுச் சபை மண்ட பத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் பயிற்சி நெறியில் தையல், மனையியல், பூ வேலை, ஐசிங், முதலுதவி மற்றும் கூட்டுற வுத் தலைமைத்துவம் ஆகிய பயிற் சிகள் இலவசமாக வழங்கப்படவுள் ளன. (ஐ-10)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜன.29

யாழ். மாவட்ட பயிற்றப்படாத ஆசிரியர் சங்கத்தின் கலந்துரையா டல் இன்று காலை 9 மணிக்கு புதிய உயர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக அதன் செயலா ளர் தெரிவித்துள்ளார். (ஐ-10)



உரும்பிராய் சந்தியில் புதிதாக நிறுவப்பட்ட பஸ் தரிப்பிடம் அண் மையில் திறந்து வைக்கப்பட்டது.

உரும்பிராய் வடக்கைச் சேர்ந்த திருமதி 'தனபாக்கியம் சுப்பிரமணியம் என்பவரால் அமைத்து வழங்கப்பட்ட இந்த பஸ்தரிப்பு நிலையத்தின் தோற்றத்தையும், அதன் வாயிலை வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பொது முகாமையாளர் வீ.எஸ். சொக்கலிங்கம் திறந்து வைப்பதையும் படத்தில் காணலாம். (ஐ)




யாழ். மருத்துவபீட மாணவர்கள் அண்மையில் தெல்லிப்பழை உளநல சிகிச்சைப் பிரிவுக்கு தொலைக்காட்சி, வீடியோ டெக் மற்றும் உபகர ணங்களை அன்பளிப்பாக வழங்கினர். யாழ்.வர்த்தகர் சங்கம், நியூ சயன்ஸ் ஹோல் கல்வி நிலையம், சந்திரவதனி தச்சுத் தொழிலகம் ஆகியவற்றின் உதவியுடன் இப்பொருள்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட உளநலத்துறை பேராசிரியர் தயா சோமசுந்தரம், பிரதி மாகாண சுகாதாரப் பணிப்பாளர் செல்வி உமா சிவபாதசுந்தரம், தெல்லிப்பழை மாவட்ட வைத்திய அதிகாரி, யாழ். வர்த்தக சங்கத் தலைவர் மற்றும் உதவி வழங்கிய வர்த்தகப் பிரதிநிதிகளை படத்தில் காணலாம். (ஐ)



யாழ்ப்பாணம் உள்ளூராட்சித் திணைக்களமும், பருத்தித்துறை பிரதேச சனசமூக நிலையங்களின் இணையமும், பருத்தித்துறை பிரதேச சமூக பொருளாதார அபிவிருத்திக் குழுவும் இணைந்து நடத்திய 'பருத்தித்துறை பிரதேச மலர்' வெளியீட்டு விழா அண்மையில் பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட, யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந் தரம்பிள்ளை நூலை வெளியிட்டு வைக்க, அதன் முதல் பிரதியை மக்கள் வங்கி வடபிராந்திய முகாமையாளர் கிங்ஸ்லி இராசநாயகம் பெற்றுக் கொள்வதை படத்தில் காணலாம்.

*(படம்: நெல்லியடி செய்தியாளர்)*




யாழ்நகர் மைய றோட்டறக்ட் கழகத்தின் பதவிஏற்பு வைபவமும், ஆரம்ப விழாவும் கழகத்தின் நூல் வெளியீட்டு விழாவும் கடந்த திங்கட் கிழமை கழகமண்டபத்தில் நடைபெற்றன.

கழகத்தினரால் வெளியிடப்பட்ட 'அச்சாணி' என்னும் நூலின் முதல் பிரதியினை கழக உறுப்பினரிடம் இருந்து யாழ்.றோட்டறிக் கழகத்தின் முன்னாள் தலைவர் ஏ.பஞ்சலிங்கம் பெற்றுக்கொள்வதைப் படத்தில் காண லாம். *(படம்: வலி.கிழக்கு செய்தியாளர்)*

# இளங்கலைஞர் மன்றத்தில் மீண்டும் இசை நிகழ்வுகள்

நல்லூர் இளங்கலைஞர் மன்றத் தில் மீண்டும் மாதாந்தம் கலை நிகழ்ச்சிகள் மற்றும் இசை வகுப்புக் களை நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

கடந்த 27ஆம் திகதி சோ.பத்ம நாதன் தலைமையில் நடைபெற்ற விசேட கூட்டமொன்றில் இந்த நிகழ் வுகளை விரைவில் நடத்துவது பற் றித் தீர்மானிக்கப்பட்டது. மாதாந்தம் கலை நிகழ்வுகளை மன்றத்தில் வெகுசிறப்பாக கொண்டாடப்படுவ தோடு வயலின், மிருதங்கம், வீணை, புல்லாங்குழல், வாய்ப்பாட்டு போன்ற இசை வகுப்புக்களை மன்றத்தில் நடத்தவும் முடிவு செய்யப்பட்டது. அத்துடன் இசைநிகழ்வுகளைநடத்து வதற்கு இசைக் கலைஞர்கள், கலா ரசிகர்கள் ஆகியோர் போதிய அக் கறை காட்டுவதில்லை எனவும் கூட் டத்தில் கவலைதெரிவிக்கப்பட்டது. (ஐ-17)

# அதிரடி அரங்கு

யாழ்ப்பாணம் இராசாவின் தோட்டம் வீதியில், றக்கா வீதிச் சந்திக்கு அண்மையில் சில தினங்களுக்கு முன் நடந்த சம்பவம் இது:-

'ரியூஷன்' வகுப்பு முடிந்து சென்ற மாணவிகளை இளைஞர் குழு ஒன்று கலைத்து சென்றதையும் -

எல்லை மீறும் அளவுக்குச் சென்றதையும் - கண்ட ஆசிரியர் ஒருவர் அக்குழுவை அவ்விடத்தில் வழி மறித்து நீண்ட நேரம் அறிவுரை கூறினார். அதனைக் கேட்டு அந்தக் குழுவில் இருந்த இருவர் அவ்விடத்தை விட்டுக் கலைந்துசென்றனர்.

ஆனால் மூன்று இளைஞர்கள் இந்த அறிவுரையைக் கூற நீ யார் என்று கேட்டு ஆசிரியரைத் தாக்கத் தொடங்கினர். தன்னைக் காப்பதற்காக ஆசிரியரும் தனித்து நின்று பதில் தாக்குதல் நடத்த வேண்டியதாயிற்று.

தாக்கிய இளைஞர்களில் ஒருவர் அந்தப் பகுதியைச் சேர்ந்தவர் என்று கூறப்படுகின்றது. போதாக் குறைக்கு அந்த இளைஞனின் பெற்றோரும் சேர்ந்து ஆசிரியரை ஒரு "பிடி பிடித்த"தாகக் கேள்வி.

"யாழ்ப்பாணத்தில் எல்லா இடத்திலும் இப்ப பொடியங்கள், பெட்டைகள் மீது பகிடிகள், சேஷ்டைகள் விடுகின்றனர், நீர் எல்லா இடத்திலும் சென்று இதனைத் தடுக்கலாமே?", "எங்கட பிள்ளையள் என்னவும் செய்யுங்கள். அதைக் கேட்க நீ யார்?" என்றெல்லாம் "பொறுப்பு மிக்க" பெற்றோர் கேள்விகளைத் தொடுத்தனராம்; ஆசிரியரைத் தாக்கவும் முனைந்தனராம்.

அப்போது அங்கு நின்ற அயலவர்கள் தலையிட்டு ஆசிரியரை அனுப்பிவைத்தனர். ஆசிரியரின் நல்ல முயற்சியையும் அவர்கள் மெச்சிப் பாராட்டினர்.

"இதை எல்லாம் பார்க்க, கேட்க, விசாரிக்க, நடவடிக்கை எடுக்க இந்த மண்ணிற்குரியவர்கள் இல்லாததுதான் காரணம்" என்று கூறி மனம் நொந்தபடி - வாங்கிய அடிகளோடு - புறப்பட்டார் அந்த ஆசிரியர்.

பிள்ளைகளின் தவறுகளுக்கு உதவிபுரியும் இத்தகைய பெற்றோர், தங்கள் பிள்ளையின் எதிர்காலத்தை மட்டுமல்ல, சமூகத்தின் எதிர்காலத்தையும் நாசமாக்குகின்றார்கள் என்பதை மறந்துவிடக்கூடாது.

* * *

கொழும்பு வெள்ளவத்தையில் உள்ள தமிழர் ஒருவரின் சாப்பாட்டுக் கடை ஒன்று அண்மையில் சிங்கள தீவிரவாதக் கும்பல் ஒன்றினால் அடித்து நொறுக்கப்பட்டது. அந்தச் சாப்பாட்டுக் கடைக்காரர் செய்த ஒரேயொரு தவறு சாப்பாட்டுக் கடைக்கு தனது பெயரை வைத்ததுதான்!

அவரின் பெயர் வேலு. அசைவ ஹோட்டல் முதலாளி. பொதுவாக அசைவ உணவுகள் பரிமாறும் ஹோட்டலை 'மிலிட்டரி ஹோட்டல்' என்று அழைப்பது வழமை. அந்த வகையில் தமது ஹோட்டலுக்கு 'வேலு மிலிட்டரி ஹோட்டல்' என்ற பெயரை வைத்து அவர் வியாபாரம் நடத்திவந்தார்.

விவரம் புரியாத சிங்களப் பத்திரிகையாளர் ஒருவரின் கண்ணில் இந்தக் கடையின் பெயர்ப் பலகை பட்டுவிட்டது.

'வேலு' என்பதை 'வேலுப்பிள்ளை' (தலைவர் பிரபாகரனின் தந்தையின் பெயர்) என்ற பெயருடனும், 'மிலிட்டரி ஹோட்டல்' என்பதை 'இராணுவ ஹோட்டல்' என்ற அர்த்தத்துடனும் தொடர்புபடுத்தி ஒரு முக்கிய - முன்பக்க - செய்தியை சிங்களத் தீவிரப் போக்குடைய தமது பத்திரிகையில் பிரசுரித்துக்கொண்டார்.

'பிரபாவின் பெயரில் இராணுவ ஹோட்டல் ஒன்றை கொழும்பில் நடத்த அனுமதிப்பதா? அதிகாரிகள் என்ன தூங்கிக்கொண்டிருக்கின்றார்களா?' - என்றெல்லாம் தமது செய்தியில் கேள்வி எழுப்பியிருந்தாராம் அதிமேதாவியான அந்தப் பத்திரிகையாளர்.

பாவம் வேலு! விடயம் எதுவும் புரியாதவர்.

பத்திரிகையாளரின் செய்தியால் சீற்றமுற்ற சிங்களத் தீவிரவாதக் கும்பல் திடீரென வந்து கடையை அடித்து நொறுக்குவதைப் பார்த்துக் கொண்டிருப்பதைத் தவிர அவருக்கு வேறு வழியிருக்கவில்லை!

* * *

வலிகாமம் கிழக்கின் வட எல்லையில் உள்ள பிரபல பாடசாலை ஒன்றில் இரண்டு கால் பெருச்சாளிகள் புரிந்த திருட்டுக் குறித்து கடந்த 8 ஆம் திகதிய சஞ்சீவியில் இதேபகுதியில் குறிப்பிட்டிருந்தோம்.

அதிபரின் அறையைத் திறந்து, அங்கிருந்த திறப்பை எடுத்து, அதிபரின் மேசை லாச்சியைத் திறந்து, அதற்குள் இருந்த திறப்பைக் கொண்டுபோய் கம்பியூட்டர் அறையைத் திறந்து, அந்த அறைக்குள் ஓரிடத்தில் வைக்கப்பட்டிருந்த திறப்பை எடுத்து அங்குள்ள அலுமாரியைத் திறந்து பெறுமதிமிக்க பொருள்கள் சுருட்டப்பட்டன.

திறப்புகள் எங்கெங்கே வைக்கப்படுகின்றன என்பது குறித்து பாடசாலை உயர்மட்டத்தில் பலருக்கும் பரிச்சயமான நடைமுறையைத் திருடன் கையாண்டிருக்கின்றான். பாடசாலை உயர்மட்ட அலுவலர்களே இந்தத் திறப்புகளைக் கையாள்பவர்கள்.

ஆனால் பொருள்கள் காணாமல்போனதற்கு பகல் - இரவு காவல் கடமைகளில் ஈடுபடும் அப்பாவிக் காவலர்களின் மேல் பொறுப்பு சுமத்தப்பட்டு, அவர்கள் இருவரிடம் இருந்தும் அப்பொருள்களின் பெறுமதிக்கு பணம் அறவிடப்பட்டு, பொருள்கள் புதிதாக வாங்கப்பட்டு, அந்தந்த இடங்களில் வைக்கப்பட்டுள்ளன.

இத்திருட்டுச் சம்பவம் குறித்து பொலீஸ்க்கோ, கல்வித்திணைக்களத்துக்கோ அறிவிக்கப்படவில்லை. காதும் காதும் வைத்தாற்போல - மாதம் சுமார் ஆயிரத்து ஐந்நூறு ரூபா சம்பளம் பெறும் - காவலர்களிடம் சுமார் 8 ஆயிரம் ரூபாவரை அறவிடப்பட்டு பொருள்கள் வாங்கப்பட்டுள்ளன.

பொருள்களைச் சுருட்டிய இரண்டு கால் பெருச்சாளிகள் சந்தோசமாக நடமாட, பாவம், காவலர்கள் தமது சக்திக்கு மேல் பணத்தை அழுது, தமது வேலையைத் தக்கவைத்துக்கொண்டுள்ளனர்.

* * *

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தின் அவலம் குறித்தும், இந்த மாவட்டத்தின் தலைநகரின் மத்திய பஸ் நிலையத்தில் பயணிகள் இயற்கைக்கடன் கழிப்பதற்குக் கூட அடிப்படை வசதி இல்லாதது குறித்தும் பத்திரிகைகள், வெகுஜனத் தொடர்பு சாதனங்கள் பலதடவைகள் குரல் எழுப்பியாகிவிட்டது. ஆனால் விடயம் நகருவதாக இல்லை.

அதிகாரிகள் மற்றும் பொறுப்பானவர்களிடம் கேட்டால் எல்லோரும் கைவிரிக்கின்றார்கள். அவர்கள் ஒட்டுமொத்தமாகக் கூறும் ஒரே பதில் "பொதுமக்களிடமிருந்து ஒத்துழைப்புக் கிடைப்பதில்லை" என்பதுதான்.

"பஸ்நிலைய அலுவலகத்துக்கு நல்ல கட்டடத்தை அமைக்கவும், பஸ்நிலையத்தைத் திருத்தவும் மேலிடத்தில் நிதி தரத் தயாராக இருக்கின்றார்கள். ஆரம்பக் கட்டச் செலவுக்காக ஒதுக்கிய சுமார் 25லட்சம் ரூபா நிதி கூட பயன்படுத்தப்படாமல் கடந்த இரண்டு வருடமாகத் தேங்கிக்கிடக்கின்றது" - என்று கூறினார் சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர்.

பணம் ஒதுக்கி, அதிகாரிகள் முயன்றும் யாழ். மத்திய பஸ் நிலைய அலுவலகக் கட்டடத்தைக் கட்ட முடியாதிருப்பது ஏன்?

பஸ் நிலையக் கட்டடம் அமைய வேண்டிய பகுதியை சட்டவிரோதமாக ஆக்கிரமித்திருக்கும் குட்டிக் கடைக்காரர்களின் அடம்பிடிப்புத்தான் காரணம் என்கின்றார்கள் அதிகாரிகள்.

அவர்கள் சட்டவிரோதமாக அமைத்திருக்கும் கடைகளை அகற்றுகின்றார்கள் இல்லை. சில அரசியல்வாதிகளின் துணையோடு முரண்டு பிடிக்கின்றார்கள் என்றும் கூறப்பட்டது.

நாம் நேரில் சென்று விசாரித்துப் பார்த்ததில், தமக்கு பெரும் பின்னணிப்பலம் உண்டு எனத் தங்களைக் கருதும் ஒரு சில கடைக்காரர்களைத் தவிர, ஏனையோர் பிடிவாதமாக இருப்பதாகத் தெரியவில்லை.

'தாங்கள் கடை அமைத்திருப்பது சட்டரீதியான இடத்தில் அல்ல. அது ஆக்கிரமிப்பு. அத்துமீறல்' என்பது அவர்களில் பலருக்குப் புரிந்திருக்கின்றது.

அப்படி இருந்தும் கூட தங்களை அங்கீகரித்து நகர மத்தியில் வேறு இடத்தில் புதிதாகக் கடை அமைக்க தங்களுக்கு இடம் தருவதற்கு யாழ். மாநகரசபை நிர்வாகம் முன்வந்திருப்பதை பெரும் கௌரவமாக - உரிய நிவாரணமாக - அவர்கள் கருதுகின்றார்கள். மாநகரசபை வற்புறுத்தினால் தற்போதைய இடத்தை கைவிட்டு புதிய இடத்துக்குச் செல்லவும் அவர்கள் தயாராக இருக்கின்றார்கள்.

ஆனால் ஒரு சில ஆக்கிரமிப்புக்காரர்களின் 'தடித்த' போக்கினால் பஸ் நிலையம் கட்டப்படுவது தள்ளிப் போகின்றது.

போகிற போக்கில், யாழ். மாநகரசபை நிர்வாகமும், யாழ். பஸ்நிலைய நிர்வாகமும் வேறு வழியின்றி கடும்போக்கை நாடும் அல்லது அதற்காக தேவையற்ற தரப்பினரின் தலையீட்டை அழைக்கும் நிலைக்குத் தள்ளப்படலாம்.

முழு வசதிமிக்க பஸ்நிலையம் அமைக்கப்படுவது நகர மக்களின் உரிமை. அதனால் குடாநாட்டு மக்கள் எல்லோருக்கும் நன்மை. சட்டவிரோத நில உடைமையாளர்கள் அந்த உரிமைகளைப் பறிப்பது முறையற்றது; அடாத்தானது; கண்டனத்துக்குரியது. சட்டம் தனது கடமையை நீதிமன்றம் ஊடாக ஆற்றுவதற்கு தகுந்த சூழ்நிலை இல்லை என்பதைச் சாதகமாக வைத்துக்கொண்டு எல்லோரும் தமது நலனையே கொண்டாட நினைக்கக்கூடாது. கடைசியாக பொது மக்கள் திரண்டு முடிவுகாணவேண்டிய விடயமாக மாறலாம். அதற்கு முன்னர் சம்பந்தப்பட்டோர் பொறுப்புணர்வுடன் செயற்பட்டு பிரச்சினைக்குத் தீர்வுகாண முன்வரவேண்டும்.

அடாத்தாக - விடாப்பிடியாக - நின்றுவிட்டு, யாழ். மாநகரசபை நிர்வாகம், வலு சூடாக முடிவெடுத்துச் செயற்படும் நிலை வந்த பின்னர், அந்த நிர்வாகத்தின் மீது குற்றம் சுமத்துவதில் பயனில்லை என்பதை சம்பந்தப்பட்டோர் உணர்வது நல்லது.

**-மின்னல்**

## மென்பந்து கிரிக்கெட் போட்டிகள்

வலி.வடக்கு,ஜன.29

வலி.வடக்கு பிரதேச செயலகத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான மென்பந்து கிரிக்கெட் போட்டிகள் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை மல்லாகம் ஸ்ரீ பாஸ்கரன் விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

இந்தப்போட்டிகளில் வலி.வடக்கு பிரதேசசெயலர் பிரிவிற்குட்பட்ட 12 விளையாட்டுக் கழகங்கள் விளையாடவுள்ளன.

(ஐ-8-4-86)


## யாழ். மாநகரசபை .
## பள்ளக் காணியினை நிரவும் வாய்ப்புத் தொடர்பான அறிவித்தல்

யாழ். மாநகரசபையினால் தினமும் அகற்றப்படும் குப்பை கூழங்களை மாநகரசபை எல்லைக்குள் உள்ள தங்களின் சொந்தப் பள்ளமான அல்லது தாழ்ந்த காணிகளில் போட்டு நிரப்புவதற்கு விருப்பம் உடையவர்கள் மாநகரசபை அலுவலகத்துடன் தொடர்புகொள்ளவும்.

சூழல் சுகாதாரத்துக்கு எந்தவிதமான பங்கமும் இல்லாத வகையில் இந் நடவடிக்கை செயற்படுத்தப்படும்.

மாநகர ஆணையாளர்,
யாழ். மாநகரசபை.

(C/10849)



## நீங்களும் "ஓவியம்" வரையலாம்!

ஓவியராகவோ ஓவியஆசிரியராகவோ ஆகலாம்.

விவரங்களுக்கு

S.S.யசோதரன் ஆட்ஸ்,
185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(வின்சர் தியேட்டர் முன்பாக)

(73175)



## விற்பனைக்கு

வெங்காயம், உருளைக்கிழங்கு பொதிசெய்யும் நெற் பேக்குகள், மரப்பெட்டிகள், குளிர்சாதன பெட்டிக்குரிய காஸ் சிலிண்டர், ஐஸ்பழக் குச்சிகள், ஐஸ்கிறீம் கோண், கலண்டர் வகைகள், டயறி வகைகள், என்பனவற்றை, மலிவு விலையில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

நாதன் களஞ்சியம்
213C, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி
தொலைநகல் } 2916

(73177)


# மரண அறிவித்தல்கள்

## நாகலிங்கம் குமாரசாமி

கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் இணுவில் கிழக்கை வதிவிடமாகவும்கொண்ட நாகலிங்கம் குமாரசாமி 25/01/2000 அன்று சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற செல்லையா, கனகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் இராஜேஸ்வரியின் அன்புக் கணவனும் சுப்ரமணியம் (மதிப்பீட்டாளர், கொழும்பு), காலஞ்சென்ற புஸ்பேந்திரன் (ராசன்), வேலாயுதபிள்ளை ( ரவி - இத்தாலி), கதிர்காமநாதன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சர்வசொருபி (கொழும்பு), திருச்செல்வி (இத்தாலி) ஆகியோரின் அன்பு மாமனும் அபிராமி (கொழும்பு இராமநாதன் இந்துக்கல்லூரி), விசாகன் (கொழும்பு றோயல் கல்லூரி), பவித்திரா (கொழும்பு இராமநாதன் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேரனும் துரைச்சாமி காலஞ்சென்ற இராமநாதபிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரனும் சரஸ்வதி, மதியாபரணம், இலகுநாதன், காலஞ்சென்ற சிவாநந்தன், நாகேஸ்வரி, மகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் அப்பையா அவர்களின் அன்புச் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் 28/01/2000ஆம் ஆண்டு வெள்ளிக்கிழமை (நேற்று) பிற்பகல் 2.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:
கு.சுப்ரமணியம் (மகன்)
செ.மதியாபரணம், செ.இலகுநாதன் (மைத்துனர்)

இணுவில் கிழக்கு.

(73163)

## திருமதி சகுந்தலாதேவி இராஜேந்திரன்

இலங்கை மின்சார சபையின் முன்னாள் பிரதிப் பொதுமுகாமையாளரும் (வடக்கு), தற்போது மேலதிக பொது முகாமையாளராகக் கடமையாற்றும் திரு.வே.இராஜேந்திரனின் அன்புப் பாரியார் திருமதி சகுந்தலாதேவி இராஜேந்திரன் 27.01.2000 வியாழக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் ரமேஸ்(லண்டன்), சர்மிலா(யாழ்.பல்கலைக்கழகம், பௌதிகப் பிரிவு, 3ஆம் வருட மாணவி), ஜெனா(கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.01.2000) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கல்கிசை மயானத்தில் நடைபெறும் என்பதை அறியத்தருகிறேன்.

தகவல்:
வே.இராஜேந்திரன் (கணவர்)

34,பாடசாலை அவெனியு,
தெஹிவளை.
தொலைபேசி இல. 729381.

(C/10846)

## திருமதி அன்னம்மா நாகராசா(குணம்)
### (ஓய்வு பெற்ற ஆசிரியை, கொழும்பு)

சாவகச்சேரி வடக்கு ஐயா கடையடியை பிறப்பிடமாகக் கொண்டவரும், ஆஸ்திரேலியாவை வசிப்பிடமாகக்கொண்டவருமாகிய திருமதி அன்னம்மா நாகராசா 27.01.2000 வியாழக்கிழமை ஆஸ்திரேலியா மெல்போர்ணில் காலமானார்.

அன்னார் ஓய்வுபெற்ற முல்லைமாவட்டக் கல்வி அதிகாரி ச.அ.நாகராசா அவர்களின் அன்புமனைவியும், டாக்டர் தேவமனோகரன் (லண்டன்), திருமதி சத்தியபாமா, ஸ்ரீதரன்(B.Sc., ஆஸ்திரேலியா), டாக்டர் சதீஸ்கரன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், கு.வி.மகாலிங்கம், முத்துலிங்கம், சுந்தரலிங்கம், ஆகியோரின் அன்புச் சகோதரியும், டாக்டர் திருமதி கமலாம்பிகை தேவமனோகரன் (U.K) திரு.ஸ்ரீதரன் Phd. (ஆஸ்திரேலியா) திருமதி மீரா சதீஸ்கரன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஆஸ்திரேலியா மெல்போர்ணில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

Mr. S.A.NAGARAJAH,
2, Neera Court,
Clen Waverley,
Victoria 3150,
Australia.
T.P. (03) 98025029

தகவல்:
திரு. வி.முத்துலிங்கம் (சகோதரன்)
ஐயா கடையடி,
மீசாலை.

(73174)

## சாரணியப் பயிற்சி

சிரேஷ்ட பெண் சாரணியருக்கான பயிற்சிப் பாசறை யாழ்ப்பாணம் திருக்குடும்ப கன்னியர்மடம் ஆங்கிலப் பாடசாலையில் இன்றும் நாளையும் நடைபெறவுள்ளது.

இதில் பங்குபற்றுவோர் சகல ஏற்பாடுகளுடனும் இன்று காலை எட்டு மணிக்கு சமுகந்தரும்படி மாவட்ட ஆணையாளர் கேட்டுள்ளார். (உ-4)

## கண்காட்சி

யாழ். விஞ்ஞான சங்கம் பாடசாலைகளுக்கிடையில் ஏற்பாடு செய்துள்ள விஞ்ஞான வினாவிடை மற்றும் பேச்சுப் போட்டிகளும் கண்காட்சிப் போட்டிகளும் இன்றும் நாளையும் காலை 9.00 மணி முதல் யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளன. (உ-3-10)

## மெய்வல்லுநர் போட்டிகள்

நயினாதீவு ம.வியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று பிற்பகல் 2.00 மணிக்கு அதிபர் சொ.பகீரதன் தலைமையில் வித்தியாலய மைதானத்தில்நடைபெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தீவகக் கல்வி வலயத்தின் கல்வி நிர்வாகத்துக்கான உதவிக் கல்விப் பணிப்பாளர் ஜி.பி.இராதாகிருஷ்ணனும் சிறப்பு விருந்தினர்களாக திட்டமிடல் உதவிக்கல்விப் பணிப்பாளர் சி.மகேஸ்வரன், வேலணைப் பிரதேச சபைத் தலைவர் ந.கருணாகரகுருமூர்த்தி மற்றும் தீவகக் கல்விவலய இந்து சமய பாடத்துக்கான ஆசிரிய ஆலோசகர் செல்வி மு.கி.ஜெயலட்சுமி ஆகியோரும் கலந்துகொள்வர். (ஐ-7-8)

## நினைவுநாள்

கொக்கட்டிச்சோலையில் 1987 ஆம் ஆண்டு 86 தமிழ் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தின் 13ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு நேற்று மட்டக்களப்பு மகிழடித்தீவு பிள்ளையார் ஆலயத்தில் விசேட பூசை ஒன்று நடத்தப்பட்டது. (உ-4)

## மட்டுநகரில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குச் சென்ற படையினர் பஸ் சேவையை கட்டாயமாக நடத்த வேண்டுமென கடுமையான உத்தரவு பிறப்பித்தனர் எனவும் -

இதனை அடுத்து ஒருசில பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டன எனவும் -

எனினும் தனியார்பஸ்கள் எவையும் சேவையில் ஈடுபடவில்லை எனவும் - தெரியவந்தது.

மக்கள் நடமாட்டம் இல்லாததால் மட்டக்களப்பு நகரப்பகுதி வெறிச்சோடிக் காணப்பட்டது.

கடந்த பத்து வருடங்களுக்குப் பின்னர் மட்டக்களப்பு நகரில் அரசாங்கத்துக்கும் படையினருக்கும் எதிராக நடத்தப்பட்ட ஹர்த்தால் இது என வெளிநாட்டுச் செய்தி நிறுவனங்கள் தெரிவித்தன. (உ-7-3)

## செஞ்.வழித்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி

கைகள் பயணிகள் விமானங்களின் இருக்கையை ஒத்ததாகவும் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கொடியுடன் - குழுவின் அதிகாரியின் பிரசன்னத்தில் - இந்தச் சேவையை நடத்துவதற்கு உதவுமாறு அரசாங்கம் தங்கள் அமைப்பைக் கேட்டதாகவும் -

பயணிகள் போக்குவரத்துக்கு உதவும் மனிதாபிமானப் பணி என்ற அடிப்படையில் இந்தக் கோரிக்கையை ஏற்றுச் செயற்பட தமது அமைப்பு முன்வந்ததாகவும் -

செஞ்சிலுவை சர்வதேசக் குழுப் பிரதிநிதி சொன்னார்.

"இந்த விடயம் குறித்து அரசுடனும் விடுதலைப் புலிகளுடனும் பேச்சு நடத்தி இணக்கமான நிலை ஒன்றை ஏற்படுத்தும் முயற்சியில் நாம் ஈடுபட்டோம்.

"இந்தச் சேவை பொதுமக்களுக்கு மட்டும் நடத்தப்படவேண்டும்; வேறு தேவைகள் எதற்கும் பயன்படுத்தப்படக்கூடாது என்ற நிபந்தனையுடன் அதனை நடத்துவதற்கு புலிகள் கொள்கை அளவில் இணக்கம் தெரிவித்துள்ளனர்" - என்றார் அந்தப் பிரதிநிதி.

"இது விடயத்தில் இரு தரப்புக்கும் இடையில் அடிப்படை விவகாரங்களில் இணக்கம் காணப்பட்டுவிட்டது. தொடர்ந்து பேச்சுக்கள் நடத்தி வருகின்றோம். நடைமுறை ஏற்பாடுகள் குறித்து முடிவு எடுக்கவேண்டியுள்ளது. அதில் இணக்கம் காணப்பட்டதும் - அனேகமாக இன்னும் ஒருமாத காலத்துக்குள் - இந்தக் கப்பல் சேவை ஆரம்பமாகும் என எதிர்பார்க்கலாம்" - என்றும் அவர் குறிப்பிட்டார். (உ-3)

# இந்திய எம்.பிக்கள் குழுவை இலங்கைக்கு அனுப்புங்கள்!

## டாக்டர் ராமதாஸ் கோரிக்கை

ஈழத்தமிழர்களின் பிரச்சினைக்கு தீர்வு காண நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொண்டகுழு ஒன்றை இலங்கைக்கு அனுப்பவேண்டும் என்று மத்திய அரசை பாட்டாளி மக்கள் கட்சி நிறுவுநர் டாக்டர் எஸ். ராமதாஸ் கேட்டுள்ளார்.

கன்னியாகுமரியில் செய்தியாளர் மத்தியில் பேசுகையிலேயே அவர் இந்தக் கோரிக்கையை வெளியிட்டார். இலங்கைக்கு அனுப்பப்படும் எம்.பிக்கள் குழு ஈழத்தமிழர் பிரச்சினை குறித்து அங்கு ஆய்வுகளை மேற்கொள்ள ஏற்பாடு செய்யவேண்டும் என்றும் தாம் கோரியுள்ளதாக அவர் சொன்னார்.

தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகளைத் தாம் ஆதரிக்கவில்லை என்றும் -

தனித் தமிழீழம்ஒன்றே இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வாகும் என்றும் - அவர் மேலும் தெரிவித்தார்.


## மரண அறிவித்தல்

### சின்னக்குட்டி குண்டுமணி

(கமலமணி பூட்ஸ் வெயர்)

உடுப்பிட்டி இமையாணனைச் (புளியடி) சேர்ந்த சின்னக்குட்டி குண்டுமணி 27-01-2000 வியாழக்கிழமை இரவு காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னக்குட்டி - பாறுபதி தம்பதிகளின் அன்பு மகனும் கமலம் அவர்களின் அன்புக்கணவரும் புஷ்பராணி, கலைதாஷன் (சுவிஸ்), கமலமணி (சுவிஸ்), கலாராணி, அனுசாராணி ஆகியோரின் அன்புத் தந்தையாரும் செல்வநாதனின் (ஆசிரியர்) அன்பு மாமனாரும் தமிழ்க்குமரனின் பாசமிகு பேரனும் சுந்தரம், முத்தம்மா, குழந்தைவேலு, கிருஷ்ணபிள்ளை,காலஞ்சென்ற செல்லாச்சி ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (28-01-2000) வெள்ளிக்கிழமை நண்பகல் அளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வல்லை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி.

(C/10851)

தகவல்:
குடும்பத்தினர்.
கலாராணி குண்டுமணி (மகள்)



*The Board of Directors*
*Of*
*DCS College of Computer Technology (Pvt) Ltd.*
*Cordially Invites*

*Students, Parents and Well - Wishers*
*For the*
*Ceremonial Award of Certificates*
*On Sunday 30th January 2000*
*At 9.00 am (new time)*

At the **ILAMKALAIGNAR MANRAM**
Sattanathar Veethi, Jaffna.

*Chief Guest*

MR. RAINER FRAUENFELD
Project Officer
UNOPS,
UNDP,
Jaffna.

*Guest of Honour*

Mr. V.P.SIVANATHAN
Head, Dept. of Economics,
University of Jaffna.

**DCS (Pvt) Ltd.**
**124/2, Palaly Road,**
**Thirunelvely,**
**Jaffna.**

DCS Pioneers In Information Technology And Computing (73120)




# Institute of Informatics Studies (IIS)

**No. 100 Clock Tower Road, Jaffna.**

**(Affiliated with *IMIS*, UK)**

**Telephone No. : 21-2831** **E-Mail : iis@sltnet.lk**

புதிய கணனிக் கற்கை நெறிகள் ஆரம்பம் 05/02/2000
பகல் 10.00 மணி



**Personality leads to pride of success**



**Finest and the latest best equipped laboratory admired by one and all**



**Appearance proves a milestone in success**

கிளை நிறுவனங்கள் :
* IIS நெல்லியடி, கரவெட்டி.
* IIS பிரதான வீதி, சங்கானை.
* IIS நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி.

## Diploma Courses

* Advanced Diploma in Applied Computer Science
* Diploma in Software Engineering
* Diploma in Computer Programming
* Diploma in Personal Computer Specialist
* Technician Diploma in Computer Hardware
* Diploma in Microsoft Office 2000
* Diploma in Internet & E-Mail Communication

## Professional Courses

* BCS Stage I & Stage II Conducted by British Computer Society, U.K.
* ACS Stage I to Stage IV Conducted by Australian Computer Society, Australia.
* NECS Stage I to Stage VI Conducted by National Examination in Computer Studies, Sri Lanka
* NCCA 1- Basic Level Exam and 2- Intermediate Level Exam Conducted by National Certificate in Computer Application Sri Lanka

## Certificate Courses

MS Excel 2000, MS Word 2000, MS Access 2000, MS Power Point 2000, AutoCad, Page Maker, Corel DRAW, Visual Basic, Pascal, Visual C, C++ and dBase III+.

**ஆயிரம் ஆயிரம் மாணவர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமான கல்வி நிறுவனம்**

* எத்துறை சார்ந்தவர்களாயினும் உங்கள் தேவைக்கேற்ப பிரத்தியேக வகுப்புக்கள் ஒழுங்குசெய்து தரப்படும்.
* மாணவர்களின் வசதிகருதி வார்நாட்களிலும் வாரஇறுதி நாட்களிலும் காலை மாலை வகுப்புக்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.
* தகுதி, திறமை, அனுபவம் வாய்ந்த விரிவுரையாளர்களின் ஒருங்கிணைந்த சேவை
* மாணவர்களின் வசதி கருதி கட்டணங்கள் இலகுவான முறையில் தவணைக்கட்டணங்களாக செலுத்தும் வசதி.

**நீங்களும் கணனித்துறையில் ஓர் பட்டதாரியாகலாம்!**
மிகவிரைவில் ஐரோப்பிய பல்கலைக்கழகம் ஒன்றின் அங்கீகாரத்துடன் **Bachelor of Science in Computer Science** என்னும் கற்கை நெறியை அறிமுகப்படுத்தவுள்ளோம்.



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29-01-2000இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

சஞ்சிகை

சஞ்சீவி

29-01-2000

ஜோ.எகட்டனின்
'ஜெசித்தாரா' வழங்கும்
உணவுப் பெட்டிகளில்
சுடச்சுட புரியாணி, பிறைட் றைஸ்,
லாம்பரீஸ் மற்றும் உணவு வகைகளை
பெற்றுக் கொள்ளுங்கள்.
ஜோ.எகட்டன்
"ஜெசித்தாரா"
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை,
சுண்டுக்குளி
(C/10800)

## கருத்துக் கலசம்

மயூரா

### பழிவாங்கல் வேண்டாம்

**மற்றவர்கள் அவமதித்தாலும் தாக்கினாலும் பழிவாங்க விரும்பாதே. அமைதியாக இருப்பதுதான் பொறுமை. - *விதுர நீதி***

தன்னை வெட்டுவோரையும் அவர்கள் விழுந்துவிடாமல் தாங்குவது நிலம். அந்த நிலத்தைப்போல, தம்மை அவதூறு செய்பவர்களையும் பொறுப்பது தலையாய கடமை என்று வள்ளுவர் சொல்லித்தந்தார். *"அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை இகழ்வார்ப் பொறுத்தல் தலை"* என்ற குறள் மூலம் பழிவாங்கும் எண்ணத்தை துரத்த முயல்கிறார் அவர்.

அத்தோடு நிற்காமல், ஒருவன் நிறையுடைமையுடன் - நிறைவானவனாக இருக்க விரும்பினால் பொறுமையைப் போற்றி ஒழுகவேண்டும் என்று போதித்தவனும் வள்ளுவனே. பொறுமை என்பதன் பிரதான தன்மைகளில் பழிவாங்காதிருப்பதும் ஒன்று. அடுத்தவன் தன்னை அவமதித்தான் அல்லது அடித்தான் என்பதற்காக நாமும் அவ்வாறே அவனுக்குச் செய்ய வேண்டும் என்று துடிப்பது அனேகரின் இயல்பு.

ஏனைய விடயங்களில், சந்தர்ப்பங்களில் பொறுமையை அல்லது அமைதியைக் கைக்கொள்பவர்கள் கூட, தம்மை ஒருவர் அவமதித்ததும் அடித்ததும் தாமும் அதனைத் திரும்பச் செய்யவேண்டும் என நினைக்கிறார்கள். பழிவாங்கும் வேலையையும் செய்துவிடுகிறார்கள். அவ்வாறு பழிவாங்கும் செயலில்ஈடுபடும்போது அவர்கள் தமது பொறுமையை இழந்து விடுகிறார்கள் என்று அர்த்தம். அதனால் அவர்கள் நிறைவான பொறுமையாளர்கள் அல்லர் என்ற நிலைக்குத் தாழ்ந்து விடுகிறார்கள். மற்றவர்கள் செய்த பல தீமைகளைத் தாங்கிக் கொண்டும் கோபப்படாமலும் பொறுமையைக் கடைப்பிடித்தவர்கள் அடுத்தவர்களைப் பழிவாங்க நினைக்கும் போது பொறையுடைமையாளர்கள் என்ற நிறைநிலையை இழந்து விடுகிறார்கள்.

பொறுமை ஒருவனை உயர்ந்தவன் ஆக்குகிறது. *பொறுத்தார் நாடாள்வார்; பொங்கினார் காடாள்வர்* என்பது தமிழ் மூதுரை. பொறுமை எப்போதும் நற்பயன் தரும். பொறுமையைக் கடைப்பிடிப்பதால் ஆரம்பத்தில் பாதகமான விளைவுகளை எதிர்நோக்க நேரிடலாம். ஆனால் இறுதியில் பொறுமைசாலிகளே வெற்றி பெறுவார்கள்; சமூகத்தில் உயர்ந்து நிற்பார்கள்.

பழிவாங்குதல் பல பாதகமான பின் விளைவுகளைத் தரும். எப்போதும் தமக்கு எதிரானவர்கள் மீது அல்லது வேண்டாதவர்கள் மீது பழிவாங்கத் தொடங்கினால் இந்த உலகமே பயங்கரத்தின் விளைவிடமாகிவிடும்; பூலோகமாக அன்றி நரகலோகமாக மாறும்.

பொறுமை விலைக்கு வாங்கும் பண்டம் அல்ல. ஒவ்வொருவரும் தாம் கைக்கொள்ள வேண்டியதாகும்; குணவியல்பு ஆக்கிக்கொள்ளவேண்டியதாகும். பொறுமையைக் கைக்கொள்வதால் நாம் எதனையும் இழந்துவிடமாட்டோம். அதற்கு மாறாக நற்பெயர் உட்படப் பல பெருமைகள் எம்மை வந்தடையும்.

அடுத்தவன் தவறு செய்கிறான் என்பதற்காக நாமும் தவறு செய்வதா? மற்றவன் பொறுமை இல்லாதவன், பழிவாங்கும் இயல்புடையவன் என்றால் நாமும் அவனைப் போலாக எண்ணலாகாது. அவனை விட நாம் வித்தியாசமானவர்களாக இருக்கமுன்வர வேண்டும். நல்லாருடன் சேர்ந்தால் பழிவாங்கும் எண்ணம் வராது. எப்போதும் நல்லார் நட்பையே நாடுங்கள், அதுவே உங்களைப் பெருமைக்கு உரியவனாக்கும்.

# அப்பாவிகளைப் பலிகொள்ளும் சட்டவிரோதக் கருக்கலைப்பு

**இப்பொழுது எமது யாழ். குடாநாட்டில் அதிகரித்து வரும் சட்டவிரோதமான கருக்கலைப்பினையும் அதனால் அநியாயமாக காவுகொள்ளப்படுகின்ற உயிர்ப் பலிகளையும் கருத்திற்கொண்டு வரையப் பட்ட கட்டுரை இது.**

மானிடப் பெருக்கத்தில் கணிசமான ஒரு தொகையினர் மண்ணைத்தொடாத மகவுகளாக மறைந்து கொண்டிருக்கின்றார்கள் என்ற உண்மையை எத்தனைபேர் உணர்ந்து கொண்டிருக்கிறார்கள்? நூற்றாண்டு நூற்றாண்டு காலமாக பூமியைப் பீடித்துள்ள பெரும் சாபக்கேடுகளில் சட்டவிரோதமான கருக்கலைப்பும் ஒன்று ஆகும். இக்கருக்கலைப்பினால் ஒரு பாவமும் அறியாத சிசு மட்டுமல்ல தாயையும் பல சந்தர்ப்பங்களில் இழக்க நேரிடுகிறது. ஆண்டு தோறும் உலகில் ஒன்றரை லட்சம் முதல் இரண்டரை லட்சம் வரை பெண்கள் சட்டவிரோதமான கருக்கலைப்பினால் ஏற்படும் பாதிப்புக்களினால் உயிரிழக்கின்றார்கள். இலங்கையிலும் சட்டவிரோதமான கருக்கலைப்பு மிகவும் அதிகரித்த நிலையிலேயே காணப்படுகிறது. (அண்ணளவாக நாளொன்றிற்கு 750 கருக்கலைப்புக்கள் - 1998)

## சமூகச் சீர்கேடுகளே முக்கிய காரணம்

எமது நாட்டில் அநியாயமான கருக்கலைப்பு நடைபெறுவதற்கு எமது சமூக மாற்றங்களும் சமூகச் சீர்கேடுகளும் முக்கியபங்கு வகிக்கின்றன. தரமற்ற சினிமாப் படங்கள், நீலப்படங்கள், ஆபாச விளம்பரங்கள் தற்காலத்தில் தாராளமாகக் கிடைக்கின்றன. மேலும் மது, போதைவஸ்து பாவனைகளுக்கும் பலர் அடிமையாகின்றனர். இக்காரணிகளாலோ அன்றி சிந்தனை மாற்றங்களாலோ மனித மனம் வக்கிரமடையும் பொழுது பலாத்காரமான பாலியல் வல்லுறவுகள் பெற்று அவை விரும்பத்தகாத கருக்கலைப்பிற்கு வித்திடுகின்றன. இவ்வாறு பலாத்காரமான பாலியல் உறவுகளால் பாதிக்கப்படும் பெண்கள் எழுபத்திரண்டு மணித்தியாலத்திற்குள் வைத்திய உதவியை நாடுவார்களாயின், இதனால் ஏற்படக்கூடிய - விரும்பத்தகாத - கரு உருவாகாமல் தடுக்கலாம்.

அத்துடன் இத்தகைய தரமற்ற ஊடகங்களினால் மனக் குழப்பமடையும் பல சிறுமிகள் எமது பண்பாடு, கலாசாரம் என்பவற்றை மறந்து எதிர்கால வாழ்க்கையைப் பற்றிய சிந்தனையோ, பயமோ இல்லாமல் தவறி விடுகின்றார்கள். இவ்வாறான சந்தர்ப்பங்களிலும் இச்சிறுமிகள் கருக்கலைப்பை நாடுகின்றனர். இவர்களுக்குப் பாலியற் கல்வி அறிவின்மையே முக்கிய காரணமாக இருக்கலாம். பாலியற் கல்வி அவசியமில்லை என்ற குருட்டு நம்பிக்கை எம்மிடையே வேரூன்றியுள்ளது. பாலியற் கல்வி நாடி எங்கும் செல்ல வேண்டியதில்லை. பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களோ அல்லது வீட்டில் சிறுமியின் தாயோ பாலியல் பற்றிய கருத்துக்களை - மிக இலகுவாக - பிள்ளைகள் விகாரப்படாதவாறு - புகுத்தலாம்.

மணமாகிய பெண்களில் சிலரும் நாட்டுச் சூழ்நிலை, தொழில் போன்ற காரணங்களினால் கணவனைப் பிரிந்து வாழ்கின்ற நிலையில் தங்கள் நிலையிலிருந்து தவறி விடுகின்றார்கள். இவ்வாறு ஏற்படும் கருவை வெளியுலகிற்குத் தெரியாமல் கலைத்து விடவே களவு வழிகள் பலவற்றைக் கையாளுகின்றார்கள்.

பின்வரும் பல்வேறுபட்ட காரணங்களும் கருக்கலைப்பிற்கு ஏதுவாகின்றன:-

* விபசாரம்.
* ஏற்கனவே போதுமான எண்ணிக்கையில் பிள்ளைகள் இருத்தல்.
* வறுமை.
* தாயின் எதிர்காலத்திட்டங்களைப் பாதிக்கக் கூடிய கஷ்டம் (உ+ம்:- வெளிநாட்டுப் பயணம், கல்வி).
* கருத்தரிப்பின் பின் கணவனை இழந்திருந்தாலோ அன்றி விவாகரத்துப் பெற்றிருந்தாலோ.
* சிசுவிற்கு மிகவும் பாரதூரமான பிறவிக் குறைபாடுகள் ஏற்படக் கூடிய சந்தர்ப்பங்கள் இருக்கும் போது.

குடும்ப வாழ்க்கையில் ஏற்படும் தேவையற்ற கர்ப்பத்தைத் தடுப்பதற்கு மருத்துவ விஞ்ஞானம் பல்வேறுபட்ட பாதுகாப்பான கருத்தடை முறைகளை அறிமுகப்படுத்தியுள்ளது.

அவற்றில் முக்கியமானவை:-

**உடலுறவில் ஈடுபடுவதற்குரிய பாதுகாப்பான காலம் (Safe Period)**:- இம்முறை மாதவிடாய் சக்கரம் ஒழுங்காக வரும் மாதர்களிலேயே பாதுகாப்பானது. (ஒழுங்கான மாதவிடாய் 28 நாள்களுக்கு ஒரு தடவை). சூலானது சூலகத்தில் இருந்து வெளிவிடப்படும் காலங்களிலேயே கருக்கட்டல் நிகழ வாய்ப்புள்ளது. இது மாதவிடாய் ஏற்படுவதற்கு 13 முதல் 15 நாள்கள் முன்னதாக நடைபெறுகின்றது. எனவே கரு உற்பத்தியாகாமல் உடலுறவில் ஈடுபடுவதற்குரிய பாதுகாப்பான காலமாக ஒரு மாதவிடாய்க்கு முன்பான ஏழு நாள்களும் அம்மாதவிடாயை அடுத்து வரும் பத்து நாள்களும் கருதப்படுகிறது.

* *கருத்தடை மாத்திரைகளும் ஊசி மருந்துகளும்.*
* *கருத்தடை உறைகள் பாவித்தல்.*
* *கருப்பையின் உள்ளே வைக்கப்படும் "லூப்" என்றழைக்கப்படும் சாதனங்கள(IUCD).*



** நிரந்தரமான கருத்தடை சத்திர சிகிச்சை (ஆண்/பெண்)*

## கருப்பையில் குழந்தையின் வளர்ச்சி

பெண்ணின் கருப்பையில் ஆணின் உயிர் அணு சென்று கருக்கட்டல் நிகழும் கணத்திலேயே ஒரு புதிய உயிரின் அத்தியாயம் தொடங்கிவிடுகின்றது. ஆரம்பத்தில் ஒரு கல நிலையில் உள்ள இக்கரு இரண்டு, நான்கு, எட்டு, பதினாறு என்று பெருகி, ஏறக்குறைய ஆறாவது வாரத்தில் தலை, உடல், இதயம், மூளை, கை, கால் என்பனவற்றை ஆரம்ப நிலையில் கொண்டதாகிவிடுகின்றது. எட்டாவது வாரத்தில் மூக்கு, வாய், முகம் என்பன உருவாகின்றன. தொடுதல் உணர்ச்சியையும் வலி உணர்ச்சியையும் உணரத் தொடங்குகின்றது. மேலும் நீந்துவது போல உடலை அசைக்கவும் முடிகின்றது. இந்நிலையில் அதனுடைய இதயத் துடிப்பை ஸ்கான் (Scan) மூலம் அறிய முடிகின்றது. பன்னிரண்டாவது வாரத்தில் இலிங்க உறுப்புகள் உருவாகி ஆணா, பெண்ணா என அறிந்து கொள்ளமுடிகிறது. இக்காலத்தில்தான் கண்ணைத் திறந்துதான் உதிக்கப் போகும் உலகைப் பார்க்க முயல்கின்றது. பதினாறாவது வாரமளவில் அதன் சகல உறுப்புகளும் உருவாகி குழந்தையின் வடிவத்தைப் பெறுகிறது. நாற்பதாவது வாரமளவில் அது முழு வளர்ச்சியடைந்த நிலையில் பூமியில் ஜனனிக்கின்றது. ஆகவே இவ்வளர்ச்சிக் காலத்திலே எவ்வேளையில் கருக்கலைப்பு நிகழ்ந்தாலும் அதனை ஒரு கொலையாகவே கருதவேண்டும்.

## கருக்கலைப்பால் பாதிப்பு

சட்டவிரோதமான கருக்கலைப்பிற்கு உள்ளாகும் பெண்கள் கருக்கலைப்பின்போதோ அல்லது அதன் பின்போ மிகவும் பாரதூரமான பின் விளைவுகளுக்கு ஆளாகலாம்.

## உடனடிப் பாதிப்பு

உடனடிப் பாதிப்புக்கள் சில செக்கன்கள், சில நிமிடங்களில் ஏற்படலாம்

அவை:-

**அதிகளவிலான குருதிப் பெருக்கும் அதனால் ஏற்படும் இறப்பும்**:-

கருக்கலைப்பிற்கு பயன்படுத்தப்படும் பல்வேறுபட்ட உபகரணங்களினால் கருப்பை, சூல்வித்தகம், பெண் இனப்பெருக்க உறுப்புக்கள், குடல், வயிற்றறைக் குழியில் உள்ள உறுப்புக்கள் ஆகியவற்றை ஊடுருவுவதனால் ஏற்படுத்தப்படும் காயங்களினால் அதிகளவிலான குருதிப் பெருக்கு ஏற்பட்டு, குருதி இழப்பினால் மரணம் சம்பவிக்கும்.

இவ்வாறான கருக்கலைப்பின் போது கருப்பையின் உள்ளடக்கங்கள் யாவும் முற்றாக வெளியேற்றப்படாததனால் அவை முழுமையாக வெளியேற்றப்படும்வரை குருதிப் பெருக்கு ஏற்பட்டு தொடர்ச்சியான குருதியிழப்பு ஏற்படும்.

கருக்கலைப்பிற்கு அதிபிரசாரணக் கரைசல்கள் பாவிக்கும் பொழுது தாயின் மூளைத் தண்டில் ஏற்படும் குருதிப் பெருக்கால் இறப்பு ஏற்படலாம்.

* *கருக்கலைப்பிற்கு ஹிக்கின்சன் எனப்படும் உறிஞ்சு குழாயைப் பயன்படுத்தும் பொழுது அதில் பயன்படுத்தப்படும் அபாயகரமான திரவங்களோ அல்லது உருவாகும் காற்றுக்குமிழ்களோ குருதிக்கலன்களை சென்றடைந்து அடைப்பை ஏற்படுத்துவதனால் இறப்பு ஏற்படுகின்றது.*

**இதயத்துடிப்பு நிறுத்தப் படுதல்**:-

கருக்கலைப்பின் போது பயன்படுத்தப்படும் உபகரணங்களோ அல்லது திரவங்களோ கருப்பைக் கழுத்தைத் தொடும்பொழுது அதிலுள்ள நரம்புகள் தூண்டப்படுவதனால் உடனடியாக இதயத்துடிப்பு நிறுத்தப்படுகிறது. மயக்க மருந்து கொடுத்து இக்கருக்கலைப்பு ஒரு சிகிச்சையாகசெய்யப்படும் பொழுது இவ்வாறு நிகழாமல் தடுக்கபடுகின்றது.

## இடைக்காலப் பாதிப்பு

இடைக்காலப்பாதிப்பு சில மணித்தியாலங்கள், சில நாள்களில் ஏற்படலாம். அவை:-

* *கிருமித் தொற்று*:- இதுவே மிக முக்கியமான பாதிப்பாகும். அடி வயிற்றில் வலி, காய்ச்சல், அதிகரித்த நாடித்துடிப்பு என்பன கிருமித் தொற்று ஏற்பட்டதற்கான அறிகுறிகளாகும்.

மருத்துவ அறிவு இல்லாதவர்களினால் கருக்கலைப்பின் போது பயன்படுத்தப்படும் - கிருமி நீக்கம் செய்யப்படாத - உபகரணங்களினால் கிருமித் தொற்று ஏற்படலாம். மரத்தடிகள், மண், கம்பிகள் போன்றவற்றில் காணப்படும் காற்றின்றி வாழ் பக்டீரியாக்களே (Clostridium) இதில் முக்கிய பங்கு வகிக்கின்றது.

கு.மேனகா, த.சுமதி
(யாழ்.மருத்துவபீட மாணவிகள்)

மேலும் இவ்வாறான கருக்கலைப்பின் போது கருவின் பகுதிகளும் சூல்வித்தகத்தின் பகுதிகளும் முற்றாக வெளியேற்றப்படுவதில்லை. இறந்த இந்த இழையங்களும் உறைந்த குருதியும் நோய்க்கிருமிகள் வளர்வதற்கு மிகச் சிறந்த ஊடகமாக அமைவதால் கிருமித்தொற்று ஏற்படக்கூடிய சாத்தியம் அதிகமாகும். இதனால் கருப்பையில் பெருகும் பக்டீரியாக்கள் அருகில் உள்ள இழையங்களுக்கும் பரவி பொது இரத்த ஓட்டத்துடன் கலப்பதனால் செப்ரீசீமியாவை ஏற்படுத்துகின்றன. இது 18 முதல் 24 மணித்தியாலங்களில் ஏற்படலாம். இதனால் பரவலாக குருதிக்கலங்களினுள் குருதியுறைதல் ஏற்படுகின்றது. மேலும் இதன் விளைவாக ஈரல், சிறுநீரகம் போன்ற பல்வேறுபட்ட உடல் உறுப்புக்களும் செயலிழந்து இறப்பு ஏற்படுகின்றது.

## நாள்பட்ட பாதிப்பு

ஒரு சில கிழமைகளில் ஏற்படக்கூடிய நாள்பட்ட பாதிப்புக்கள் வருமாறு:-

* ஏற்புவலி
* நுரையீரல் குருதிக்கலங்களில் ஏற்படும் அடைப்புக்கள்.
* வயிற்றறை இடுப்புக்குழிகளில் ஏற்படும்

(XV ஆம் பக்கம் பார்க்க)

# இரு நாடுகளுக்கிடையில் நெருக்கடி ஏற்படுத்தும்

# 6 வயதுச் சிறுவன் எலியன் விவகாரம்!

கியூபாவைச் சேர்ந்த ஆறு வயதுச் சிறுவன்எலியன் கொன்சாலெஸ் (Elian Conzalz) விவகாரம் அமெரிக்காவுக்கும் கியூபாவுக்கும் இடையில் அரசியல் - ராஜீய நெருக்கடிகளை ஏற்படுத்திவருகின்றது.

எலியனின் தந்தை கியூபாவில் இருப்பதால் எலியனை கியூபாவுக்கு திருப்பி அனுப்பி வைக்கவேண்டும் என்று கியூபா அரசாங்கம் கோரி வருகின்றது. ஆனால் எலியனைத் தொடர்ந்து அமெரிக்காவிலேயே வைத்திருக்க அமெரிக்காவில் உள்ள கியூபா மக்கள் பெரும் போராட்டமே நடத்தி வருகின்றனர்.

சட்டத்தின் கீழ் எலியன் வயது குறைந்த ஒரு 'மைனர்' இதனால் அவனது விருப்பத்தை அறிந்து செயற்பட முடியாத நிலையில் அமெரிக்க நீதித்துறை இருந்துவருகின்றது.



**எலியனின் தந்தை கொன்சாலெஸுடன் கியூபா ஜனாதிபதி பிடல் காஸ்ட்ரோ காணப்படுகிறார். திருச்சபைகளின் கவுன்ஸில் இவரை மியாமிக்கு அழைத்துச் சென்று சிறுவனைக் காண்பிக்க முயற்சித்தது. அதற்காக ஹவானாவில் உள்ள அமெரிக்கத் தூதரகம் வீஸா வழங்கவும் தயாராகி இருந்தது. ஆனால் கொன்சாலெஸ் மியாமி செல்ல மறுத்துவிட்டார். சிறுவனை கியூபா மண்ணிலேயே தாம் மீண்டும் பார்க்க விரும்புவதாக கொன்சாலெஸ் கூறி விட்டார்.**

எலியன் விவகாரத்தை முதலில் கையாண்டது அமெரிக்க குடிவரவு, வெளிநாட்டவர் குடிவரவு சேவைகள் கமிஷன்தான். இந்த கமிஷனின் தலைவர் டொரிஸ் மிஸ்னெர்.

எலியன் விவகாரத்தை விசாரணை செய்த இந்த கமிஷன், எலியன் கியூபா சென்று அங்கு அவனது தந்தையுடன் வாழவேண்டும் என்று தீர்ப்பு வழங்கியது. இந்தத் தீர்ப்பு அமெரிக்காவில் குறிப்பாக கியூபாப் பிரஜைகள் பெருமளவில் வாழும் மியாமியில் பெரும் எதிர்ப்பு அலைகளை ஏற்படுத்தியது. இந்தத் தீர்ப்பை எதிர்த்து மியாமியில் பெரும்



**எலியனை கியூபாவுக்கு அனுப்பிவைக்குமாறு அமெரிக்க குடிவரவு, வெளிநாட்டவர் குடிவரவு வேலைகள் கமிஷன் வழங்கிய தீர்ப்பை ஆட்சேபித்து மியாமியில் வாழும் கியூபா மக்கள் ஆர்ப்பாட்டம் நடத்துகின்றனர்.**

ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

கமிஷனின் தீர்ப்பு வழங்கப்பட்டு ஒருவார காலத்தில் கமிஷனின் தீர்ப்பை ஆட்சேபித்து மியாமியில் உள்ள எலியனின் உறவினர்களால் புளோரிடாவில் உள்ள குடும்ப நீதி மன்றத்தில் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டது.

தன்து நியாயாதிக்கத்துக்கு உட்பட்டதாக அந்த நீதிமன்றம் இதனை அறிவித்து எலியன் திருப்பி அனுப்பப்படுவதை இடைநிறுத்தி தீர்ப்பு வழங்கியது. மார்ச் 6ஆம் திகதி மீண்டும் விசாரணைக்குத் திகதி குறிப்பிட்டு, மியாமியில் வாழும் எலியனின் உறவுமுறை மாமனாரான டெல்பின் கொன்சாலெஸ் என்பவரின் பாதுகாப்பில் அவனை வைத்திருக்க குடும்ப நீதிமன்றம் உத்தரவிட்டது.

## திருச்சபைகளின் தேசிய கவுன்ஸில் முயற்சி

எலியன் விவகாரம் தற்பொழுது அமெரிக்காவிலும் கியூபாவிலும் மட்டும் அல்ல அமெரிக்காவுக்கும் கியூபாவுக்கும் இடையிலும் நெருக்கடிகளை உருவாக்கிவருகின்றது.

இந்நெருக்கடிக்கு தீர்வுகாணும் முயற்சியில் அமெரிக்காவில் உள்ள திருச்சபைகளின் தேசிய கவுன்ஸில்நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

திருச்சபைகளின் தேசிய கவுன்ஸில் பிரதிநிதிகள் [illegible] கியூபா சென்று எலியனின் தாய்வழிப் பாட்டி, தந்தைவழிப் பாட்டி என்று இருவரை அமெரிக்காவுக்கு அழைத்து வந்தனர்.

அமெரிக்க குடிவரவு, வெளிநாட்டவர் குடிவரவு சேவைகள் கமிஷனர் டொரிஸ் மிஸ்னெர் அமெரிக்க சட்டமாஅதிபா ஜேனெட் ரெனோ ஆகியோரைச் சந்தித்து எலியனைத் தம்முடன் அனுப்புமாறு அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளார்கள். ஆனால் குடும்ப நீதிமன்றத்தின் தீர்ப்பு வழங்கப்படும்

### உலக உலா
**என்.பி.சீலன்**

வரை எலியன் அமெரிக்காவில்தான் தங்கிஇருக்கப்போகிறான். அரசியலுக்கு அப்பாற்பட்டு மனிதாபிமான அடிப்படையில் அனுகவேண்டிய இந்தப் பிரச்சினை அரசியல், ராஜீய நெருக்கடிக்குள் சிக்கிக்கொண்டது துரதிர்ஷ்டமே.

## உயிர்தப்பிய அதிசயம்

கியூபாவில் காஸ்ட்ரோவின் ஆட்சியில் வெறுப்புற்ற நண்பர்களான 12 பேர் கடந்த நவம்பரில் ஒன்று கூடி கியூபாவிலிருந்து வெளியேறி அமெரிக்காவுக்குத் தப்பிச் செல்லத் திட்டமிட்டனர். அவர்களின் அந்தக் குழுவில் சிறுவன் எலியன் கொன்சாலஸும் அவனது தாயார் எலிசபெத் றொட்டிக்கஸும் அடங்கி இருந்தனர்.

கிழக்கு ஹவானாவில்உள்ள பரடேரோ பீச் கடற்கரை நகரில் உள்ள ஹோட்டல் ஒன்றில் எலிசபெத் வேலை செய்து வந்தார். கணவர் யுவான் மைக்கல்கொன்சாலெஸ் சமீபமாக உள்ள மற்றொரு இடத்தில் பாதுகாப்பு அதிகாரியாக கடமையாற்றினார். யுவான் மைக்கல் கொன்சாலெஸும் எலிசபெத்தும் 1995 முதல் பிரிந்து வாழ்ந்து வந்தனர். யுவான் மைக்கல்கொன்சாலெஸ் மறுமணம் செய்திருந்தார்.

## ஆபத்தான கடற் பயணம்

எலியனும் அவனது தாயாரும் மற்றும் 10 பேரும் அலுமினியத்தினால் உருவாக்கப்பட்ட ஒரு திறந்த படகில் இரவோடு இரவாக ஏறி நவம்பர் 21ஆம் திகதி தமது பயணத்தை ஆரம்பித்தனர்.

கியூபாவின் கடல் கண்காணிப்புப் படையினரிடமிருந்து தப்பி அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்தின் மியாமி பீச்சை அடைவதே இவர்களது திட்டம். மியாமியில் ஏற்கனவே பல்லாயிரக்கணக்கான கியூபா மக்கள் வாழ்ந்து வருகின்றனர். காஸ்ட்ரோவின் ஆட்சியில் வெறுப்புக் கொண்டும் மற்றும் பல்வேறு பொருளாதாரக் காரணங்களுக்காகவும் கியூபாவில் இருந்து இரவோடிரவாகப் படகுகளில் தப்பி வந்து சேர்ந்தவர்கள்தான் இவர்களும்.

எலிசபெத்துக்கு மியாமியிலும் உறவினர்கள்இருந்தனர். அமெரிக்கா சென்று குடியேறுவது மூலம் எலியனுக்கு சிறந்த எதிர்காலத்தை ஏற்படுத்திக் கொடுககமுடியும் என்று எலிசபெத் நம்பினார்.

இவர்களது படகு நடுக்கடலில் சென்று கொண்டிருந்த சமயம் திடீரென கடலில் காற்றுப் பலமாக வீசியது. கடல் கொந்தளித்தது. படகு ஆட்டம் காண ஆரம்பித்தது. படகின் இயந்திரமும்இயங்க மறுத்து படகு ஆழ்கடலில் மூழ்க ஆரம்பித்தது.

அது சிறிய படகு என்பதால் அதில் உயிர் காப்புப் படகுகள் எதுவும் இருக்கவில்லை. அப்படியான நேரங்களில் உயிர் தப்புவதற்காக மிதப்பு ரியூப்கள் மட்டுமே அங்கு இருந்தன. படகு மூழ்க ஆரம்பித்தபோது எல்லோரும் மிதப்பு ரியூப்களை கெட்டியாகப் பிடித்துக் கொண்டனர். இம்மிதப்பு ரியூப்களின் உதவியுடன் 48மணி நேரம் இவர்களது ஜீவமரணப் போராட்டம் நடந்தது. இயன்றளவு தமது ரியூப்களை ஒன்றுடன் ஒன்று இணைத்தே இவர்கள் வைத்திருக்கமுயன்றனர். ஆனால் இருளில் ரியூப்கள் எல்லாம் பிரிந்து சென்றுவிட்டன.

இந்த 12பேரில் எலியனும்அலியானஹோரத்தா அல்போன்சோ என்ற இளம் பெண்ணும் அவரது காதலன் நிவாரடோ பெர்னாடெஸ் பெரான் என்பவரும் மட்டுமே உயிர் தப்பினர். காதலர்கள் இருவரும் தமது ரியூப்பைக்கைவிட்டு நீந்தி மியாமிக்குத் தெற்கே உள்ள கே பிஸ்கேன் என்ற இடத்தை அடைந்தனர். இவர்கள் இருவரும் மியாமி ஹரோல்ட் பத்திரிகைக்கு அளித்த பேட்டி ஒன்றைத் தொடர்ந்தே எலியன் கடலில் இருந்து மீட்கப்பட்டான்.

சிறுவனும் பெண் ஒருவரும் மிதப்பு ரியூப் ஒன்றில் காணப்பட்டதாகவும் இரவில் அவர்களது ரியூப் பிரிந்து சென்று மறைந்துவிட்டதாகவும் இவர்கள் தெரிவித்தனர்.

இவர்களது அலுமினியப் படகு கவிழ்ந்து 48 மணிநேரம் கழிந்த நிலையில் 23ஆம் திகதி மியாமிக் கடலில் மீன் பிடிக்கச் சென்ற மீனவர்கள் கடலில் ஏதோ ஒரு பொருள் மிதந்து வருவதைக் கண்டனர். தமது படகுகளை அவர்கள் அந்தப் பொருளுக்கு அருகே செலுத்திய சமயம் அது ஓர்உயிர் காப்பு மிதப்பு ரியூப் என்பது தெரியவந்தது. அந்த ரியூப்பின் உட்பகுதியில் சிறுவன் ஒருவன் கிடப்பதை அவர்கள் கண்டனர். அவன் இறந்திருக்கலாமல்லவே அவர்கள் முதலில் நம்பினர்.

ஆனால் அவனது ஒருகை சிறிது அசைவதை மீனவர்களில் ஒருவர் கண்டுவிட்டார். கடலில் குதித்து அந்தரியூப்பில் இருந்து அவனை வெளியே தூக்கி எடுத்தனர். சிறுவன் உயிருடன் இருந்தான். மீனவர்கள் அவனைத் தூக்கிய போது அவன் அமெரிக்கன் அல்ல என்பதை அவனது முகச்சாயலில் இருந்து கண்டுகொண்டனர்.

இப்படியாக மரணப்பிடியில் இருந்து எவருமே நம்பமுடியாதவாறு அதிசயமாக உயிர் தப்பியவன்தான் எலியன். அவனது தாயார் பற்றித் தகவல் எதுவும் இல்லை.

உயிர்காப்பு ரியூப்புக்குள் விடப்பட்ட எலியன் குளிரினால் நடுங்கிக் கொண்டிருந்தான் என்றும் தாயார் தனது மேல் அங்கியைக் கழற்றி அவனுக்கு அணிந்துவிட்டு கடைசியாக எஞ்சியிருந்த குடிதண்ணீரையும் ரியூப்புக்குள் வைத்தார் என்றும் இந்தச் சம்பவத்தின் போது நீந்திச் சென்று உயிர் தப்பிய காதலர்கள்



**எலியனை மீண்டும் கியூபாவுக்கு அனுப்பிவைக்குமாறு கோரி கியூபாவில் எலியனின் சொந்த இடமான கார்டெனாஸில் பள்ளிச் சிறுவர்கள் நடத்திய ஆர்ப்பாட்டம்.**

இருவரும் தெரிவித்தனர்.

## மியாமியில் பாடசாலை செல்கிறான்

புளோரிடா குடும்ப நீதிமன்றத்தின் தீர்ப்பை அடுத்து தனது மாமனார் முறையான டெல்பின் கொன்சாலெஸுடன் தங்கி இருக்கும் எலியன் தற்பொழுது மியாமியில் பாடசாலை செல்கிறான்.

அவனுக்கு சமீபத்தில் அழகிய கறுப்புநிற லப்ரோடர் நாய்க்குட்டி ஒன்று அன்பளிப்பாகக் கிடைத்தது. பாடசாலை தவிர்ந்த ஏனைய நேரங்களில் நாய்குட்டியுடன் அவனது பொழுது போகிறது. இறந்துபோன

## அமெரிக்க - கியூப உறவு மீண்டும் கீழ் மட்டத்தில்

அவனது தாயாரின் விருப்பப்படி அவன் அமெரிக்காவிலே வாழவேண்டும் என்று மியாமியில் உள்ள அவனது உறவினர்கள் கோருகிறார்கள் ஆனால் அவனை கியூபாவுக்கு திருப்பி அனுப்பவேண்டும் என்று கியூபாவில் உள்ள அவனது தந்தை கோருகிறார். நீதித்துறையில் ஆரம்பித்த இந்தப்போராட்டம் தற்பொழுது அரசியல், ராஜீயத்துறைகளில் பெரும் நெருக்கடியாக உருவெடுத்து வருகிறது.

இந்தப் பிரச்சினை ஆரம்பமான போதே இதனை அரசியலாக்க தாம்



**தனக்கு மியாமியில் அன்பளிப்பாகக் கிடைத்த கறுப்பு நிற லப்ராடோர் நாய்க் குட்டியுடன் எலியன் காணப்படுகிறான்.**

விரும்பவில்லை என்று கிளின்ரன் தெரிவித்தார். ஆனால் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னோடியான பூர்வாங்கத் தேர்தல்கள் அமெரிக்காவில் நடைபெறவுள்ள இந்தச் சமயத்தில் மனிதாபிமானத்துடன் அனுக வேண்டிய பிரச்சினை அரசியலுக்குள் சிக்கிக்கொண்டது. அரசியலுக்குள் சிக்கிக்கொண்டது மட்டுமல்ல ஏற்கனவே கீழ் மட்டத்தில் இருந்த அமெரிக்க - கியூப உறவில் மேலும் பாதிப்பை ஏற்படுத்திவிட்டது.

எலியன் மீண்டும் கியூபாவுக்கு திருப்பி அனுப்பப்படுவதை தடுப்பதற்கான சகல முயற்சிகளும் அமெரிக்காவில் முடுக்கிவிடப்பட்டுள்ளன. 1980ஆம் ஆண்டு 12வயது உக்ரைன் நாட்டுச் சிறுவன் அமெரிக்காவில் தங்குவதற்கு நீதிமன்றம் அனுமதி அளித்தது. அவனது பெற்றோர் சோவியத் யூனியன் சென்றிருந்தனர். அதே போன்று எலியனும் அமெரிக்காவில் தங்கமுடியும் என்று வாதிக்கப்படுகிறது.

எலியனை அமெரிக்க நாடாளுமன்ற உபகமிட்டிமுன் ஆஜர் செய்ய வேண்டும் என்று அமெரிக்க மாநிலங்களில் ஒன்றான இந்தியானாவில் உள்ள குடியரசுக்கட்சி எம்.பிக்கள் சிலர் கோரிக்கை விடுத்தனர். எலியான் நாடு கடத்தப்படுவதை தாம் தடுப்பதுத்துவது மூலம் நாடு கடத்தல் முயற்சியை முறியடிக்க முடியும் என்று இவர்கள் நம்புகின்றனர்.

## தேர்தல் பிரசாரத்தில் எலியன் விவகாரம்

அமெரிக்காவில் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னோடியாகி நடைபெறும் பூர்வாங்க தேர்தல்களில் அமெரிக்காவில் வாழும் கியூபாப் பிரஜைகளின் வாக்குகளும் முக்கியமானவையாக கருதப்படுகின்றன. பிரதானமாக புளோரிடா மாநிலத்தில் இது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று நம்பப்படுகிறது.

எலியன் விவகாரத்தை கிளின்ரன் நிர்வாகம் கையாண்ட விதத்தை ரெக்ஸாஸ் கவர்னர் ஜோர்ஜ் டபிள்யூ. புஷ் மற்றும் செனட்டர் ஜோன் மக்கெய்ன் ஆகியோர் கடுமையாகக் குறைகூறிவருகின்றனர்.

உபஜனாதிபதி அல்கோர் மற்றும் முன்னாள் செனட்டர் பில் பிரட்லி ஆகியோர் கிளின்ரன் நிர்வாகத்துக்கு ஆதரவாகப் பிரசாரம்

(XV ஆம் பக்கம் பார்க்க)

# போர் நிறுத்தம் என்ற கதவைத் திறந்தாலே சமாதானத்தீர்வுப் பாதையில் நடக்கலாம்

## உள்ளும் புறமும்

குறுமுனி

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் அரசாங்கத்தின் முயற்சிகள் வெற்றி அளிக்குமா? சமாதானம் உண்டாகுமா? போர் நிறுத்தப்படுமா? தமிழர்களின் அரசியல் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யவல்ல தீர்வு ஒன்று காணப்படுமா?

இல்லையேல் -

தீர்வு முயற்சிகள் என்ற செயற்பாடு முந்தியகாலங்களைப் போலவே நீண்டு போகுமா? ஆளுங்கட்சியும் எதிர்க்கட்சியும் முரண்பட்டு நின்று முயற்சிகளைக் குழப்பிவிடுமா? அவ்வாறில்லை என்று இரண்டுதரப்புக்களும் இது விடயத்தில் அபூர்வமாகக் கருத்திணக்கம் கண்டாலும் கூட வெளியே இருந்து பேரினவாதிகள் குழப்புவார்களா? அவர்கள் தெற்கில் குறிப்பாகக் கொழும்பில் தமிழர்கள் மீது வன்செயல்களைக் கட்டவிழ்த்து விடுவார்களா?

தமிழ் மக்கள், அவர்கள் எங்கே வாழ்ந்தாலும் மேற்கண்ட கேள்விகள் அவர்களின் மனங்களைக் குடைந்து கொண்டிருக்கின்றன.

1994 நவம்பரில் 62 சதவீத வாக்குகளைப் பெற்று வெற்றிவாகை சூடிய ஜனாதிபதி சந்திரிகா, தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்ற நூறு வீத விசுவாசத்துடன் அப்போது பணியாற்றி இருந்தால் 'தீர்வு ஒன்றைக் கண்டிருக்க முடியும்.

அவர் அப்போது பதவிக்கு வந்த புதிதில், தென்னிலங்கையின் பேரினவாத சக்திகள் மக்களின் அதிரடிபட்டு மூர்ச்சை போட்டுக் கிடந்தன. அவ்வேளையில் - தாம் பதவிக்கு வந்த ஒரு வருட காலத்திற்குள் - தெற்கில் சாதகமான சூழல் முகிழ்த்த காலத்தைதக்கவாறு பயன்படுத்தி - செயற்பட்டிருப்பின் தீர்வு ஒன்றைக் கண்டிருக்கலாம். விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுக்களை குழப்பிவிட்டார்கள். போரில் இறங்கிவிட்டார்கள் என்று கூறியவாறு அரசாங்கம் சமாதானத்துக்கான போர் என்ற கோஷத்துடன் யுத்தத்தை தீவிரப்படுத்தியது.

அரசாங்கத்தின் இந்தப் பாதை மாற்றம் தெற்கில் அடங்கிப் போயிருந்த பேரினவாதிகளை, தமிழர்களுக்கு உரிமைகளை வழங்கக் கூடாது என்ற தரப்பு பௌத்தபிக்குகளை, ஏனைய தமிழர் விரோதிகளை ஊசி ஏற்றி எழுப்பியது. அந்த சக்திகள் மீண்டும் நிமிர்ந்து நின்று பேசத்தொடங்கின. வழமையான தமது குழப்பும் கைங்கரியத்தை விதைக்கத் தொடங்கின.

அதன் விளைச்சலே, அறுவடையே விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தக் கூடாது என்று கடந்த செவ்வாய்க்கிழமை கண்டியில் இடம்பெற்ற பௌத்தபிக்குகள் தலைமையிலான ஆர்ப்பாட்டமும் சத்தியாக்கிரகமும்.

அதன் பெறுபேறாக அரசாங்கம் இன்று மூன்று தரப்புக்களை - ஐக்கிய தேசியக் கட்சி, தமிழீழ விடுதலைப் புலிகள், தெற்கின் பேரினவாத சக்திகள் ஆகியவற்றை - சமாளிக்க வேண்டிய தேவை உண்டாகியுள்ளது.

முதலில் ஐக்கிய தேசியக் கட்சியுடனும் பின்னர் விடுதலைப் புலிகளுடனும் பேசுவது என்பது அரசாங்கம் வகுத்துள்ள நான்கு கட்ட. மூன்று மாத அட்டவணையில் அடங்குகிறது. அரசாங்கம் முழு மூச்சுடன், வேகமாக, மனம் வைத்து, ஓய்வு ஒழிச்சல் இன்றிச் செயற்பட்டால் மட்டுமே அட்டவணையைப் பூர்த்தி செய்யமுடியும். ஒத்துழைப்பு வருமா வெற்றி கிடைக்குமா என்பதெல்லாம் பொறுத்திருந்து பார்க்கப்படவேண்டியவை. அட்டவணை நீள்வதற்கோ அல்லது காலங்கடப்பதற்கோ இம்முறையாவது இடங்கொடாது செயற்பட்டாக வேண்டும்.

அரசாங்கம் முன்வைக்கவுள்ள தீர்வு, ஏற்கனவே உள்ள அதிகாரப்பரவல் மட்டும் தானா அல்லது அதனைவிடச் சற்று உயர்ந்த சுயாட்சி வடிவம் கொண்டதாக இருக்குமா என்பது -

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் ஆலோசனை (முதற்கூட்டம்) முடிவுற்ற பின்னரே தெரியும். அதற்கு ஆக முந்தியது அடுத்த மாதம் முதலாவது வாரமாவது செல்லும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தமிழ்கட்சிகளின் நிலை என்னவாக இருக்கும் என்பதனையும் இன்னும் நிச்சயமாகத் திட்டவட்டமாக சொல்லத் தெரியவில்லை. வடக்கு - கிழக்கு நிரந்தரமாக இணைக்கப்பட்ட ஆட்சி அலகு ஒன்று அடங்கிய தீர்வே தேவை என்றும் ஒற்றையாட்சி முறையின் கீழ் அமையும் எந்தத் தீர்வையும் தமது கட்சி ஏற்றுக் கொள்ளாது என்றும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் இரா.சம்பந்தன் தெரிவித்திருக்கிறார்.

நோர்வே நாட்டின் துணை வெளிவிவகார அமைச்சர் லெவி லுண்டேயை கூட்டணியின் செயலாளர் நாயகம் இரண்டு நாள்கள் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தினார்.

கனேடிய வெளிவிவகார அமைச்சின் தென் கிழக்காசியப் பிரிவுத் தலைவர் றெபேர்ட் பேர்லியையும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் சந்தித்துப் பேசியுள்ளார்.

விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தாமல் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது என்பதனைச் சம்பந்தன் நோர்வே துணை அமைச்சரிடமும், கனேடிய அதிகாரியிடமும் வலியுறுத்திக் கூறியதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஒற்றையாட்சி முறையில் இல்லாத தீர்வைத் தங்களால் ஆதரிக்க முடியாது என்று ஐக்கிய தேசியக் கட்சி கடைசிவரை கூறி வந்தது. ஆனால் ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதிக்கு இம்மாதம் 19ஆம் திகதி எழுதிய கடிதத்தில் இனப் பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றைக் காண்பதற்கு ஒத்துழைப்பு வழங்குவதாகத் தெரிவித்திருப்பதால், முந்திய நிலைப்பாட்டில் மாற்றம் வந்திருப்பதாகவே பலரும் கருதுகின்றனர். எப்படியோ மூன்றாவது கட்டமாக, ஐக்கிய தேசியக் கட்சியுடன் அரசாங்கம் பேசும்போது தான் சரியான நிலை தெரியவரும். அதற்கும் சில வாரங்கள் பொறுத்திருக்க வேண்டும்.

அரசாங்கம் தனது தீர்வு முயற்சிகளை ஆரம்பித்திருக்கும் இவ்வேளையில், நோர்வே துணை அமைச்சரும், கனேடிய வெளிவிவகார அமைச்சின் உயர் அதிகாரியும் கொழும்புக்கு வந்து நிலைமைகளை அவதானித்துள்ளனர்.

குறிப்பாக அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே பேச்சுக்கள் நடைபெற மத்தியஸ்தராகப் பணிபுரிவதற்குக் கூட நோர்வே தயாராக இருந்தது. இலங்கை அரசாங்கம் மத்தியஸ்தர் தேவையில்லை அனுசரணையாளரையே விரும்புவதாக அண்மைக் காலமாகத் தெரிவித்து வருகிறது. அதனாலோ என்னவோ அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தை நடைபெறுவதற்கு அனுசரணையாளராகப் பணிபுரியத் தமது நாடு எப்போதும் தயாராகவே இருக்கிறது என்று வெளிவிவகாரத் துணை அமைச்சர் லெவி லுண்டே கொழும்பில் தெரிவித்திருக்கிறார்.

முன்னர் திட்டமிட்டவாறு நோர்வே வெளிவிவகார அமைச்சர் நட் லெவிபெக்கின் இலங்கை விஜயம் இம்மாதம் மத்தியில் நடைபெறவில்லை. எனினும் அவர் இங்கு இன்னொரு வேளை வருவார் என்று நோர்வே அரசு அறிவித்திருந்தது. (குறிப்பிட்ட திகதிகளில் இங்கு வர முடியாமற் போனதிற்கு அமைச்சர் கதிர்காமர் கொழும்பில் அவ்வேளை இல்லாதிருந்ததே காரணம் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது).

தமது அமைச்சர் இங்கு வருவதற்கு முன்னர் இனப்பிரச்சினை சம்பந்தமாக இங்கு உண்டாகியுள்ள புதிய சூழ்நிலையை அவதானித்தும் அறிந்தும் செல்வதே லெவி லுண்டேயின் இப்போதைய விஜயத்தின் நோக்கம் என அறியவந்தது.

நோர்வேயின் துணை வெளிவிவகார அமைச்சர் ஏற்கனவே அரசு - விடுதலைப் புலிகள் பேச்சுக்கு உதவும் ஆரம்ப நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தவர். இலங்கை இனப் பிரச்சினை குறித்து அக்குவேறு ஆணிவேறாக அறிந்து வைத்தவர் இவர். சந்திரிகா தமது பேட்டி ஒன்றில் விடுதலைப் புலிகளிடம் மூன்று தரப்புகளைத், தூது அனுப்பியதாகக் கூறியிருந்தார். அந்த மூன்று தரப்புக்களில் நோர்வேயும் ஒன்று.

### முதலில் அறியவேண்டியது

விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் நோய்வாய்ப்பட்டிருந்தவேளை அவரை வெளிநாட்டுக்குச் சிகிச்சைக்கு அனுப்புவதற்கு புலிகள் நோர்வே அரசு மூலமும் சந்திரிகாவின் உதவியைக் கோரியிருந்தனர். அந்தக் கோரிக்கை நிறைவேற்றப்படாததால் நோர்வேயின் தூது கைகூடவில்லை என்று சொல்லப்பட்டது.

அப்போது விட்ட இடத்திலிருந்து அனுசரணையாளராக பணிபுரியத் தயாராக இருப்பதாக நோர்வே இப்போது அறிவித்திருக்கிறது. இம்முறை தனது பணி - முயற்சி - தோல்வி அடையாமல் இருக்கவேண்டும் என்பதற்காகவே இப்போதைய புதிய சூழ்நிலையில் சரியாகவும் விவரமாகவும் அறிய அந்த நாடு விரும்பியிருக்க வேண்டும்.

எப்படியோ விடுதலைப் புலிகள் எந்த வகைத் தீர்வால் திருப்தி அடைவார்கள் என்பதனையும் அனுசரணையாளராகப் பணிபுரியவிரும்பும் நோர்வே அறிந்தாக வேண்டுமே! தமது முயற்சி வெற்றி அளிக்குமா தோல்வியளிக்குமா என்று சந்தேகப்படாமல் வெற்றி பெறும் என்ற நம்பிக்கையுடனே செயற்படுவதாக லிண்டே கூறியிருக்கிறார்.

அரசாங்கத்துக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தை நடைபெற வேண்டுமாயின் மூன்றாந்தரப்பு மத்தியஸ்தம் இல்லாமல் அனுசரணையாளர் மூலம் பேசுவதற்கு புலிகள் விரும்புகிறார்களா என்பதனைத் தெரிந்து கொள்வது அவசியம். அந்தப் பணியை நோர்வே செய்யலாம் என்று நம்பப்படுகிறது.

இதற்கிடையில் -

அரசு - விடுதலைப்புலிகளின் பேச்சுவார்த்தைக்கு உதவுவதில் ஆர்வம் காட்டிய சர்வமதக்குழுவின் முயற்சிகள் பலனளிக்காமற் போயிற்று. பிரஸ்தாப குழுவின் பிரதிநிதிகள் விடுதலைப்புலிகளின் நிலைப்பாட்டை அறிவதற்காக வன்னி செல்ல விரும்பினர். தமது விருப்பத்தைத் தெரிவித்து விடுதலைப் புலிகளுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தனர்.

சர்வமதக் குழுவினரைச் சந்திப்பதால் பயனில்லை என்ற கருத்துடன் விடுதலைப் புலிகள் அந்தக் கோரிக்கையை நிராகரித்து விட்டனர் என்று நம்பிக்கையாக அறிய வந்துள்ளது.

**அனுசரணையாளர் மூலம் பேச விடுதலைப்புலிகள் விரும்புகிறார்களா என்பதனை முதலில் அறியவேண்டும்**

தங்களுக்கு எதிராகப் போரைத் திணித்துள்ள அரசுடன் எவ்வாறு பேச்சு நடத்த முடியும் என்பதே விடுதலைப்புலிகளின் நிலைப்பாடு என்று தெரியவந்துள்ளது. சர்வமதக் குழுவின் கோரிக்கையை இன்னும் எழுத்து மூலமாகப் புலிகள் நிராகரிக்காவிட்டாலும் அவர்களது நிலைப்பாடு அதுவே என்று தெரியப்படுத்தப்பட்டுள்ளதாம்.

### சர்வமதக் குழுவின் புதிய உத்தி

விடுதலைப் புலிகளின் இந்த நிலைப்பாட்டை அறிந்து கொண்ட சர்வமதக் குழுவின் முக்கியஸ்தர்கள் தமது உத்தியை இப்போது மாற்றியுள்ளனர்.

அரசும் விடுதலைப் புலிகளும், பேச்சு நடத்த வேண்டும் என்று இரு தரப்பாருக்கும் வெளிநாட்டு அரசாங்கங்கள் மற்றும் சர்வதேசத் தொண்டர் நிறுவனங்கள் மூலம் அழுத்தம் கொடுப்பது என்பதே சர்வமதக்குழுவினரின் புதிய வழிமுறையாக, பணியாக இருக்கும்.

இது தொடர்பான முயற்சிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சர்வமதக் குழுவின் முக்கியஸ்தர்களில் ஒருவரான வண. மல்கம் ரஞ்சித் தெரிவித்துள்ளார்.

இதேவேளை -

வன்னி சென்று திரும்பிய யாழ். ஆயர் அதி. வண. தோமஸ் சௌந்தரநாயகம் அங்குள்ள நிலைமைகள் குறித்து வெளியிட்ட தகவல்கள் தெற்கில் அரசின் தீர்வு முயற்சிகள் குறித்துச் சந்தேகத்தை ஏற்படுத்தி உள்ளதாக ஊடகவியலாளர் வட்டாரங்கள் தெரிவித்தன.

விடுதலைப் புலிகள் இந்த வருடத்தையும் யுத்த ஆண்டாகப் பிரகடனப்படுத்தி மக்களுக்குச் சுயபாதுகாப்புப் பயிற்சிகள் வழங்கும் சூழ்நிலையில், அரசு எதிர்பார்ப்பது போல - தனது அட்டவணையில் தெரிவித்திருப்பது போல விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தைக்கு இணங்குவார்களா என்ற சந்தேகத்தை அவதானிகள் எழுப்புகிறார்கள்.

வன்னியில் நடைபெறும் போர் முனைப்புகள் மற்றும் மக்களின் நிலைமைகளைப் பார்த்தபோது, உடனடியாகப் பேச்சுக்களை ஆரம்பிக்கும் சூழ்நிலை அங்கு தென்படவில்லை என்று ஆயர் உதயனுக்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்திருந்தார்.

இந்தத் தகவல் கொழும்பில் பரவலாகப் பேசப்படுவதோடு அரசியல் வட்டாரங்களின் கவனத்தையும் ஈர்த்துள்ளது.

சமாதானப் பேச்சுகளுக்கு முன்னர் அரசாங்கம் போரை நிறுத்தி தனது உண்மையான விருப்பத்தை வெளியிட வேண்டும். அப்போது தான் விடுதலைப் புலிகளை பேச்சுவார்த்தை மேசைக்கு அழைக்கமுடியும்.

ஆனால் வன்னிப் பிரதேசத்தைக் கைப்பற்றி அதனை இழந்த பின்னடைவான நிலையில் போரை நிறுத்துவது, விடுதலைப் புலிகள் இராணுவப் பலமுள்ளவர்கள் என்று அங்கீகரிப்பதாக முடியும் என்று படைத்தரப்புகள் கருதுகின்றனவாம்.

அரசாங்கப் படைகளுக்கு எதிராக பெருந்தாக்குதலை நடத்துவதற்கு விடுதலைப் புலிகள் தயாராகி வருவதாகவும் அதனைச் எதிர்கொள்வதற்கும் தாம் தயாராக இருப்பதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அனேகமாக விடுதலைப் புலிகளின் பெருந்தாக்குதல் ஆனையிறவுத் தளம் மீதானதாகவே இருக்கும் எனவும் படைவட்டாரங்கள் கருதுகின்றன. அவ்வாறு ஒரு தாக்குதலும் போரும் நடைபெறுமானால் எந்தத் தரப்பிடம் அதிக குண்டுத்தாக்குதல் வலு (Fire power) உள்ளதோ அந்தத் தரப்புக்கே வெற்றிகிடைக்கும் என்று இராணுவத் தரப்பில் கருத்துத், தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இராணுவத்தினரைப் போன்று விடுதலைப் புலிகளிடமும் சமமான குண்டுத்தாக்குதல் வலு உள்ளதாக இராணுவ ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். இத்தகைய ஒரு சூழ்நிலையில் போரை நிறுத்துவதினை பாதுகாப்பு அதிகாரிகள் ஆதரிக்கமாட்டார்கள் என்று ஊகிக்கலாம்.

விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்பதிலும் சமாதானத்தீர்வு காணவேண்டும் என்பதிலும் அரசுக்கு உண்மையான அக்கறை இருப்பின் பாதுகாப்பு வட்டாரங்களின் வாதங்களுக்கும், ஆலோசனைகளுக்கும் எடுபடாமல், போரை நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். அதன் மூலம் மட்டுமே நாட்டின் மிக முக்கியமான தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான கதவைத் திறக்கமுடியும். அதனை ஆரம்ப வழியாகக் கொண்டு செயற்படாவிடில் ஜூலை மாதத்துக்கு முன்னர் சமாதானத் தீர்வு கண்டுவிடலாம் என்ற அரசாங்கத் தரப்பின் கணக்கு பிழைத்து போகும்.

* * *

## நவீன வசதி கொண்ட கப்பலில் பயணம் செய்யும் நன்னாள் வருக!

யாழ்ப்பாணக் குடாநாட்டு அரசாங்கத்தின் முழுமையான சிவில் நிர்வாகத்துக்குள் உட்பட்டு வருடங்கள் நான்கு ஆகப் போகின்றன. ஆனால் இப்பகுதி மக்கள் வெளிமாவட்டங்களுக்குச் செல்வதற்கென வசதியான கப்பற் சேவை இன்னமும் ஆரம்பிக்கப்படவில்லை. சீரான கப்பற் சேவை "இந்தா ஆரம்பிக்கப்பட போகிறது; அந்தா ஆரம்பிக்கப்படப்போகிறது" என்று அரசும் அதன் அதிகாரிகளும் ஆசை வார்த்தை கூறிவந்தார்களே அன்றி எதுவும் செயல்வடிவம் பெற்றதாக இல்லை!

மாதத்தில் ஒரு தடவை அல்லது இரண்டு தடவைகள் சரக்குக் கப்பல் ஒன்றில் மந்தைகளை அடைத்துச் செல்வது போன்ற கப்பற் சேவை ஒன்று நடத்தப்படுவதே நடைமுறை யதார்த்தமாக இருக்கிறது.

குடாநாட்டு மக்களின் போக்குவரத்துக்கு வசதியாக சீரான கப்பற்சேவை நடத்தப்பட வேண்டியதன் அவசியத்தை இப்பத்தியில் பலதடவைகள் வலியுறுத்தியிருந்தோம். அரசாங்கத்தினதும் அதன் அதிகாரிகளினதும் ஏமாற்றுத்தனத்தை பலதடவைகள் புட்டுக் காட்டியும் இருந்தோம். குடாநாட்டில் பணிபுரியும் சர்வதேச தொண்டர் நிறுவனங்கள் கூட சீரான கப்பல் போக்குவரத்துச் சேவை இல்லாததால் தமது பணிகள் பாதிக்கப்படுவதாக அரசாங்கத்துக்கு தெரியப்படுத்தியிருந்தன. எனினும் வாக்குறுதிகள் வந்தனவேயன்றி கப்பல் சேவை சீராகவில்லை.

கடந்த வருடம் டிசெம்பர் மாதம் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுவதற்கு முன்னர், சந்திரிகா யாழ்ப்பாண மக்களுடன் நடத்திய செய்மதி தொலைக்காட்சிப் பேட்டியில் பொதுமக்களில் ஒருவர் கப்பல்சேவை இல்லாததால் குடாநாட்டு மக்கள்படும் கஷ்டத்தை விவரித்து சீரான கப்பல் சேவை நடத்த வேண்டும் என கேட்டிருந்தார்.

அதற்கு பதிலளித்த ஜனாதிபதி இவ்வருடம் ஜனவரி மாதம் முதல் அரசாங்கமே சீரான கப்பல் சேவையை நடத்தும் என்று உறுதியளித்திருந்தார். ஜனவரியும் முடியப் போகிறது; கப்பல் சேவைகளுக்கான அறிகுறிகள் எதுவும் இல்லையே என்று குடாநாட்டு மக்கள் எண்ணிக் கொண்டிருந்தவேளையில், மார்ச் மாதத்தில் இருந்து இரண்டு பயணிகள் கப்பல் காங்கேசன்துறைக்கும் திருகோணமலைக்கும் இடையில் சேவையில் ஈடுபடுத்தப்படும் என்று புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு அறிவித்திருக்கிறது.

இந்தக் கப்பல்கள் ஒவ்வொன்றிலும் 370 பேர் பிரயாணம் செய்யலாம் என்றும் ஐந்து மணித்தியாலங்களில் பயணத்தை முடித்துக் கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்படுகிறது. இரண்டு கப்பல்களையும் கொள்வனவு செய்வதற்கு அரசாங்கம் 80 கோடி ரூபாவை செலவிட உள்ளது. சிங்கப்பூரில் இப்போது கட்டப்பட்டு வரும் இந்த பயணிகள் கப்பல்களில் ஒன்று கப்பல் கூட்டுத்தாபனத்துக்கு பெப்ரவரி நடுப்பகுதியில் கையளிக்கப்படும் என்றும், முதலாவது சேவை மார்ச் மாதத்தில் நடைபெறும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

சர்வதேசதரத்திற்கேற்ப கட்டப்படும் இந்தக் கப்பல்களில் நவீன வசதிகள் இருக்கும் என்று சொல்லப்படுகிறது. மார்ச் மாதம் பின்னர் ஏப்ரல் மாதமாகவோ மே மாதமாகவோ பிற்போடப்படாமல் அறிவிக்கப்பட்ட சேவை உரிய காலத்தில் நடைபெற வேண்டும் என்பதே குடாநாட்டு மக்களின் விருப்பமாகும். சரக்குக்கப்பலில் அடைபட்டிருந்து 38 மணித்தியாலங்கள் கடற் பயணம் செய்யும் குடாநாட்டு மக்கள் வசதிகள் கொண்ட ஒரு பயணிகள் கப்பலில் பிரயாணம் செய்யும் நாளை எதிர்பார்த்திருக்கிறார்கள். 4 வருட கோரிக்கைகளும் வற்புறுத்தல்களும் நல்ல விளைவாகமாறும் நன்னாள் வருவதாக!

# என் பிரிய பூமிக்காக...

## 10

மின் ஊர்தி வேகமாகச் சென்றுகொண்டிருந்தது. காற்றும் சாலையோர மரங்களும் பின் தங்கி விடுமாறு மிகவிரைவாகச் சென்றுகொண்டிருந்தது. சிசிலியா மிகவும் களைத்துப்போயிருந்தாள். பின் இருக்கையில் கண்களை மூடியவாறு சாய்ந்திருந்தாள்.

இரவு, பகல் ஓய்வற்ற கடமைகளுடன் கடந்துசென்ற இரண்டு நாள்களும் உறங்குவதற்குக்கூட அவளுக்கு ஒய்வுதரவில்லை. கடமைக்கான அழைப்புக்கிடைத்த அன்றைய நாளின் இரவோடு அவளின் மனத்துக்கினிய தற்காலிகமான கடமைக்கும் அதுசார்பான இனிய சூழலிலான வாழ்க்கைக்கும் முற்றுப்புள்ளி வைத்தாயிற்று.

எத்துணை இனிமையானது இந்தச் சிறியகாலம். இந்தக் காலத்தை அவள் என்றும் தன்நினைவுகளில் உள்ளார்ந்த நிறைவோடு பேணிக் காப்பாள். இனி ஒரு சந்தர்ப்பம் கிடைத்தால் கூட மீண்டும் அங்கே பணிபுரிய விரும்புவதாய்ச் சொல்வாள்....

'இனி ஒரு சந்தர்ப்பம்.....' அதை நினைத்துப்பார்க்க முடியுமா? இந்தப் பயணத்தின் இறுதியில் அவள் மீண்டும் வராமலே போய்விடலாம்... ஒரு 'சிவப்பு நட்சத்திர' வீராங்கனைக்கு அதுவும் கூட மகிழ்ச்சிக்குரியதே!

சோர்வாய் விழி மூடியிருந்தவள் கணப்பொழுது உறங்கித்தான் விட்டாளோ என்னவோ! நீல விழிகளில் சுடரும் வெள்ளொளியுடன் மென்மையான வெண்மலர்க் கொத்துக்களைத் தாங்கியபடி யூலியன் நின்றுகொண்டிருக்கிறான்...சுற்றிலும் தீயின் நாக்குகள் கொழுந்துவிட்டெரிய நடுவே புன்னகை மாறாமல் அவன் நின்றுகொண்டிருக்கிறான்.....

சிசிலியா திடுக்கிட்டு எழுந்தாள்... கனவு மயக்கம் என்பது தெரிந்தும் கூட உள்ளம் அமைதியற்றிருந்தது. யூலியனுக்கு என்ன நேர்ந்திருக்கும் என்பதைச் சிந்தித்துக் கொள்ளமுடியவில்லை..

குழந்தைப்பருவத்தின் இனிய களங்கமற்ற பிரதிநிதி அவன் என்பதைஅவள் புரிந்துகொண்டிருந்தாள். ஆனால்.... என்றோ ஒருநாள் அசாதாரணமான குழந்தைக் குற்றவாளியாய் பூமியின் முன்னால் அவன் நிறுத்தப்படவும் கூடும் என்ற கசப்பான உண்மையையும் அவள் உணர்ந்திருந்தாள்..... யூலியனுக்கு உதவியிருக்கக்கூடிய இறுதிச் சந்தர்ப்பமும் கைநழுவிப்போய்விட்டது. இனி அவளால் என்னசெய்ய முடியும்?

அசதியும் களைப்பும் மறந்து இருக்கையில் நிமிர்ந்து உட்கார்ந்தாள். இன்னும் எவ்வளவு நேரப் பயணமோ தெரியவில்லை.

முன் இருக்கையில் அவன் விழி மூடிச் சாய்ந்திருந்தான். தூக்கமோ விழிப்போ எனத் தெரியாமல் விழிகள் பாதி மூடியிருந்தன. அவனைக் கேட்கலாம் பயணவிவரம் பற்றி..... முகத்திலடித்தாற் போலவும் பதில்கள் வரலாம் என்பது இந்த இருநாள் அனுபவத்தில் தெரிந்திருந்தது.

தனது பெயர் 'சியாரா' என்பதாய் அறிமுகப்படுத்திக் கொண்டான். அவளுடைய கடமைகள் பற்றிய விளக்கங்களைச் சொல்வதற்காகத்தான் அனுப்பப்பட்டுள்ளேன் என்று கூறினான். இவனை ஏற்கனவே எங்கேயோ சந்தித்தோமா என்பதாய்ச் சிசிலியாவினுள் கேள்வி எழுந்தது. அவன் இயல்பு புரிந்து மெளனமாய் இருந்து விட்டாள்...



தூங்கி விழிவது போன்ற பாதி மூடிய விழிகளுடன் இப்பயணத்துக்கான தேவை, நோக்கம் யாவற்றையும் அவன் சிசிலியாவுக்குச் சொல்லியிருந்தான்.

அவன் சொல்லி முடித்த பிறகு புறப்படத் தயாரான வேளையில் சிசிலியா யூலியன் பற்றிய விவரங்களைச் சொன்னாள். தன் சின்ன விழிகளில் எந்த உணர்வையும் காட்டாமல் அவன் மெளனமாய்க் கேட்டுக் கொண்டிருந்தான்.... தனது வார்த்தைகளைச் செவிமடுக்கின்றானா என்பது அவளுக்குச் சந்தேகமாயிருந்தது.

அவள் சொல்லிமுடித்த பிறகு ஆர்வமற்ற குரலில் அவன் கேள்வி எழுந்தது.

"யூலியனைத் தூக்கிச் சென்றது யாராயிருக்கும் என நினைக்கின்றாய்...?"

"..........."

"நாசகாரிகளின் வேலை என்று நினைக்கிறாயோ.....?"

"ஊகம் மட்டும்தான்...."

"அது மிக நல்லது...." குரலில் கேலி தெரிந்ததாய்த் தோன்றியது.

"......"

"சிறுவனை யாரேனும் உறவினன் அழைத்துச் சென்றிருப்பான்....."

"அப்படியானால் அந்த அசாதாரண உரையாடல்கள்...?"

"சிறுவன் கனவு கண்டிருப்பான்... சிறுவர்கள் தமக்குள் தாமே கதைத்தபடி விளையாடுவதுண்டு..... அதை ஏன் பெரிதுபடுத்துகிறாய்...?"

"........."

"அந்தச் சிறுவனைவிட ஆபத்தான, தீர்க்கவேண்டிய பிரச்சினைகள்,மேய்கு,பிரதேசத்தில் உண்டு....." என்றவாறே அவன் யூலியன் பற்றிய உரையாடலுக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டான்.

ஊர்தி இப்போது காட்டின் எல்லைக்குள் புகுந்துவிட்டிருந்தது. சிசிலியா விழிகளை வெளியே பதித்தபடி சூழலை அவதானித்துக்கொண்டிருந்தாள்.

"இன்னும் சில நிமிடங்களில் எங்கள் நண்பர்களைச் சென்றடைந்து விடலாம்...." முன் இருக்கையிலிருந்து சியாராவின் குரல் ஒலித்தது. அவன் விழிகளும் வெளிச்சூழலில் நிலைத்திருந்தன.

தூரே வெண்ணிறமான கூடாரம் சிசிலியாவின் கண்களில் தென்பட்டது. "அதோ,... அதோ...." அவள் சுட்டிக்காட்டிய இடத்தை நோக்கியவாறு சியாரா சொன்னான்....

"ஆம்....! இதுதான். இவனும் நிக்கலசும் எங்களை எதிர்நோக்கிக் காத்திருப்பார்கள் என நினைக்கிறேன்....."

ஊர்தி சில நிமிடங்களிலேயே கூடாரத்தைச் சென்றடைந்துவிட்டது. சியாரா சிசிலியாவை அவர்களுக்கு அறிமுகம் செய்தான்.

"இவள் நம் சக விஞ்ஞானி. சிசிலியா சூழல் விஞ்ஞானத்தில் சிறப்புப்பட்டம் பெற்றவள்..."

பரஸ்பர அறிமுகம் முடிந்ததும் நிக்கலஸ் முதல்நாள் நிகழ்வுகளைப்பற்றி விவரித்தான்.

"எவ்வளவு நேரம் அவர்கள் அங்கே தரித்து நின்றார்கள்....?"

"இரண்டு மணித்தியாலங்கள் இருக்கலாம்....."

"அப்படியானால்...."சியாரா வார்த்தைகளைப் பூர்த்தி செய்யாமல் நிக்கலசைப் பார்த்தான்.

"ஆம்! அவர்கள் வந்து தம் செயல் முடித்து உடனேயே எல்லோரும் திரும்பிவிட்டிருக்க வேண்டும்...."

"நாங்கள் மதியத்தின் முன்னரே அங்கு செல்லவேண்டும்...."

சியாரா வரைபடத்தை விரித்து ஊர்தி இறங்கிய இடத்தைப் புள்ளியிட்டான்....

"இங்கிருந்து700மீற்றர் தொலைவு

### விஞ்ஞான ரீதியான கற்பனைத் தொடர்

செல்லவேண்டும்...."

"ஆம்......!"

உணவு நேரம் முடிந்ததும், சிறப்பான கதிர்ப்பாதுகாப்பு கவசங்கள், காலணிகளுடன் அவர்கள் பயணம் ஆரம்பமானது.

வழிநெடுகஇயற்கையின் கோலங்களாய்த் தாவரங்கள் வெவ்வேறு விதமாகப் பசுமையாகப் படர்ந்திருந்தன. இடையிடையே இரண்டு இடங்களில் அசாதாரணமாய் வாடிச் சோர்ந்து இறக்கத் தயாராகி விட்ட தாவரக் கூட்டங்களைச் சந்திக்க நேர்ந்தது.

**ச.குமுதினி**
(சங்கத்தானை)

சிசிலியாவுக்கு வனத்தாவரங்கள், விலங்குகள் பற்றிய சிறப்பான அறிவு இருந்தது பயணத்தின்போது புரிந்தது. உருவவியல் அமைப்பு வேறுபாடுகள் மூலம் அவளுக்குத் தாவரங்களை இனங்காண்பது இலகுவாக இருந்தது.

சிசிலியா அசாதரணமாய் இறக்கத் தயாராகின்ற தாவரங்கள் பற்றிய குறிப்புகளைப் பதிவுசெய்து கொண்டாள். பதிவுசெய்யப் பதிவு செய்யப் புதிதாய் ஒருகேள்வி நினைவில் பிறந்து உறுதியாய் வளரத் தொடங்கிற்று.

"இந்தப் பாதைவழியே நாம் அவதானித்த அசாதாரணத் தாவரங்களில் ஓர் ஒற்றுமை தென்படும் போல இருக்கிறது...."

அவள் குரலில் தெளிவு இருந்தது....

"என்ன..... என்ன ஒற்றுமை.....?"

"அநேக வகையான, அநேக குடும்பத்தைச் சார்ந்த தாவரங்கள் இங்கு பரந்திருந்தாலும் பாதிக்கப்பட்ட தாவரங்கள் ஒரே வகையினதாக, ஒரே குடும்பத்தைச் சார்ந்தனவாக இருக்கின்றன என்று நினைக்கின்றேன்...."

"மிக உறுதியாய் இதைச் சொல்ல முடியுமா சிசிலியா?"

சியாராவின் குரலில் சந்தேகம் இருந்தது.

"இதுவரை அவதானித்தபடி மிக உறுதியாகச் சொல்லமுடியும்...."

அவர்களிடையே சில கணங்கள் மெளனம் நிலவியது.

"அப்படியானால்........" நிக்கலஸ் யோசனையில் ஆழ்ந்தவாறு சொன்னான். அந்த வகையான தாவரங்களில் இருந்து மட்டும் பெற்றுக் கொள்ளக்கூடிய ஒரு பயன்தான், நாசகாரிகளின் தேவை என்று அர்த்தப்படுத்தலாம் அல்லவா.....?"

"மிகச் சரி...." என்றான் இவான்.

"சியாரா நீ என்னசொல்கிறாய்..?"

"ஒப்புக்கொள்ளமுடியும்....ஆனால் அதன்பொருட்டு நிறைய ஆதாரங்களை திரட்டியாக வேண்டும்..."

"ஆம்! உண்மைதான்....!" சிசிலியா ஆமோதித்தாள்.

அவர்கள் முதல் நாள் ஊர்தி இறங்கிய இடத்தை வந்தடைந்து விட்டிருந்தார்கள்.. புயலடித்தது போன்ற தோற்றம் அப்பிரதேசத்தைச் சூழ்ந்திருந்தது. அநேக சிறுமரங்கள் முறிந்திருந்தன. தரையில் படர்ந்திருந்த சிறு செடிகள், புற்கள் யாவும் தீப்பட்டவை போலக் கருகியிருந்தன.

"இங்கேதான் அவர்கள் இறங்கியிருக்கவேண்டும்..." சியாரா தொடர்ந்து சொன்னான் "சொலமனின் சந்தேகம்தான் நம்முடைய முதலாவது தேடலாக இருக்கவேண்டும்.. அதாவது அவர்கள் எதற்காக இந்தக் காட்டுத்தாவரங்களை நாடி வருகின்றார்கள்? ஏன் இத்தாவரங்கள் ஒரே விதமாய் அழிகின்றன? இவ்வினாக்களின் விடைதான் நாசகாரிகளின் வருகையிலுள்ள மர்மத்தை விடுவிக்கும்... மேற்கொண்டு எம் பணியைத் தீர்மானிக்கும்....."

நால்வரும் ஊர்தியிலிருந்து இறங்கிக் கொண்டார்கள். "மிக எச்சரிக்கையாய் இருங்கள்...." நிக்கலசின் குரலில் கண்டிப்பு இருந்தது.

"நேற்று வந்தவர்களின் நேரடியான அல்லது மறைமுகமான ஆபத்து இந்தப்பிரதேசத்தில் இப்போதும் நிலைத்திருக்கலாம்...."

"அத்துடன்...நாசகாரிகளின் நிரந்தரமான அமைவிடமும் கூட இன்னமும் உறுதிசெய்யப்படாத 'மேய்கு'வின் ஒரு பகுதியிலேயே இருக்கிறது.... ஆதலால்.... அதிகதூரம் சென்றுவிடவேண்டாம். இலகுவில் தொடர்புகொண்டுவிடக்கூடிய தூரத்தினுள்ளேயே நாங்கள் எங்கள் ஆராய்ச்சிகளை மேற்கொள்ள வேண்டும்.." சியாரா சொல்ல அவர்கள் தங்கள் பயணத்தின் நோக்கத்திற்காக முதல் சுவடுகளை மர்மங்கள் நிறைந்த அம்மண்ணில் பதித்தார்கள்.....

*　　*　　*

இதேவேளையில்.... 'மேய்கு'வில் தம் பணிகளை அந்த நான்கு விஞ்ஞானிகளும் மேற்கொண்டிருந்த அதே பொழுதில்...., நகரமொன்றின் தென் கோடியில் அமைந்த கடற்கரையோரமான சின்னக்கிராமத்தில்...

அழகிய பூந்தாவரங்களின் செழிப்பின் மத்தியில் நிமிர்ந்து நின்ற அந்தப் பெரிய மாளிகையில்...

அவர் - ஜோர்ஜ் - தூரே தெரிந்த வானத்தை இலக்கின்றி வெறித்தவாறு சாய்வு நாற்காலியில் அமர்ந்திருந்தார்..... அவர் கன்னங்களின் சிறு கோடுகளாய்க் கண்ணீர் வடிந்து உறைந்திருந்தது. அது இதயம் பிழிந்து வந்த குருதி நீர் என்பது அவரைத்தவிர வேறு எவரும் அறிந்திருக்க நியாயமில்லை.

துன்பத்தின் சாரல் ஆழ்ந்த பெருமூச்சாய் உருவம் பெற்றது. தலையைத் திருப்பி அந்த அறையை நோக்கினார். பாதி திறந்திருந்த கதவினூடாக அவளின் தோற்றம் புலப்பட்டது. ஒரே சமயத்தில் காற்றும் புயலும் கடுவெயிலும் தாக்கிய சிறு பூவாய் அவள் படுத்திருந்தாள்... வழிகள் அரைமயக்கமாய் மூடியிருந்தன.

எழுந்து அறைவாயிலை நோக்கிச் சென்றார். அவள் சலனமேதுமற்றுப் படுத்திருந்தாள். எத்துணை அன்பான அவர் துணைவி "சீலியா.... சீலியா...." அவர் உதடுகள் மெல்ல முணுமுணுத்தன.

அருகே வந்து நெற்றியில் துளிர்த்திருந்த வியர்வையை ஒற்றினார். காற்றாடியைச் சுழலவிட்டுத் திரும்பியபோது அவளின் விரல்களைத் தொட்டவாறு அந்தக் குழந்தைப் பொம்மை கட்டிலில் தென்பட்டது.

அதை எடுத்து வைப்பதற்காக ஜோர்ஜ் குனிந்தவேளை சீலியாவின் உதடுகள் முணுமுணுப்பது தெளிவாகக் கேட்டது. "யூலி....யூலி... யூலியன்....." ஜோர்ஜ் மெளனமாக அறையை விட்டு அகன்றார். நெஞ்சில் சொல்லெணாத் துன்பம் நிறைந்தது. கண்களில் நீரின் பெருகுதலை கட்டுப்படுத்த முடியவில்லை.

(தொடரும்)

### பொங்கலன்று போய் மறைந்த கதிரவன்!

வெளியில் சேவல் கூவ
விறைத்துடல் குளிரில் மேவ
களிப்புடன் தமிழர் தூக்கம்
கலைந்திட எழுந்து ஊக்கம்
விழிப்புடன் பெற்றே விடியல்
விரைந்திடப் பொங்கிப் படையல்
அளித்திட வேண்டி நின்றார் -
அந்த
ஆதவனோ மறைந்து நின்றான்!

குளித்துடல் கழுவிப் பேணி
கோலமும் போட்டுக் காணி
முழுதிலும் கூட்டிச் சேர்த்து
கொளுத்தியே மஞ்சள் ஆர்த்து
அழுத்திடும் அவலம் ஓடி
ஆயிரம் இன்பம் நாடி
பழுத்திடல் வேண்டும் என்றார் -
அந்த
பகலவன் பதுங்கி நின்றான்!

புதிதொரு பானை வாங்கி
பொலிந்துடல் மனமும் வீங்கி
விதிதனை வென்றோ மென்னும்
வீம்புடன் தமிழ ரின்னும்
கதிதனை யிழந்து விட்ட
கவலையால் நொந்து பட்ட
கதையினை மறந்து நின்றார் -
அந்த
கதிரவன் மறைந்து சென்றான்!

போரெனும் பேயின் ஊளை
பொசுங்கிடும் நல்ல வேளை
பாரினில் தமிழர் வீரம்
படர்ந்திடப் பகையும் சோரும்
நேரமாய் நிகழும் போது - எம்
நீள்விசும் புச்சி மீது
பாரினில் தமிழர் பொங்க - அந்த
பகலவன் பார்த்து மகிழ்வான்.

-அளவையூர்ச் சேந்தன்-

### மருத்துவிச்சி வாழ்த்து

தீர்வுப் பொதியோடும்
வந்தீரோ தம்பி
தீர்வு ஏதேனும்
கண்டீரோ தம்பி?

கட்சிக்கொடியோடும்
வந்தீரோ தம்பி
கச்சிதமாய் ஏதும்
செய்தீரோ தம்பி?

ஒப்பந்தம் கைச்
சாத்திட்டீரோ தம்பி
ஒழுங்காக ஏதும்
செய்தீரோ தம்பி?

பேச்சுவார்த்தைக்கு
வந்தீரோ தம்பி
பேசி முடிவேதும்
எடுத்தீரோ தம்பி?

வெள்ளைப் புறாவோடும்
வந்தீரோ தம்பி
வெள்ளை மனதோடு
நின்றீரோ தம்பி?

புதைகுழி தோண்ட
வந்தீரோ தம்பி
புதைகுழி யாவும்
மீட்டீரோ தம்பி?

மிதிவெடி எடுக்க
வந்தீரோ தம்பி
மிதிவெடி யாவும்
எடுத்தீரோ தம்பி?

இன்னும் இன்னும்
வருவீரோ தம்பி
இனியேதும்
செய்வீரோ தம்பி?

நீதி சொல்ல
வந்தீரோ தம்பி
நீதியெல்லாம்
சொன்னீரோ தம்பி?

- துரைசீலன்-

### பல்கலை(ல/ள)கள்

படையில் இல்லாத
பயிற்சிகள்
நாம் அறையில் செய்த
முயற்சிகள்

தரையிலே ஆமி
கடலிலே நேவி
அறையிலே நாம் பேபி
சத்தம் கேட்டு வந்தாள்
பக்கத்து வீட்டு மாமி

வைக்கக் கூடாது தாடி
அடிக்க வேண்டும் பீடி
கூத்தடித்தோம் பாடி
நடித்தோம் நாய்ச்சோடி

வாத்ஸாயன முனி
காட்டாத நிலைகள்
பல்கலை மாணவர்கள்
சொல்லித் தந்த கலைகள்

ரயில் விளையாட்டுடன்
தரையில் அடிக்கும் நீச்சல்
அது உயிர் நசியும் பாய்ச்சல்
அத்துடன் ஹோமோவும் கூட

வெட்கத்தைப் போக்க
சுருட்டடிக்க வைப்பது எதற்கு?
கூச்ச சுபாவத்தை நீக்க
கள்ளிலே தோச்ச பாண் எதற்கு?

பல்கலைப் பூஞ்சோலையில்
நல்ல பயிரும் உண்டு
உதவாக் களையும் உண்டு
ரோஜாச் செடியும் உண்டு
கள்ளிச் செடியும் உண்டு

அந்த அறிவுக் கூடத்தில்
கோபுரங்களையும் கண்டோம்
குப்பை மேடுகளையும் கண்டோம்

-புதுமுகம்-

# உணர்

காற்று மௌனமாய்த் தொட்டுக் கொண்டு சென்றது. சுகர்ணா கோயிலுக்குப் போயிருக்கவேண்டும். அம்மா பாத்திரங்களைத்தேய்த்துக் கொண்டிருந்தாள். வீடு நிசப்தமாய் இருந்தது. வழமையாய்த் தன்பாட்டில் உற்சாகமாயோ, உதவாத பொருளையும் சனங்கள் தலையில் கட்டியடிக்கின்ற உத்வேகத்துடனோ விளம்பரங்களையும் நட்சத்திரங்களிடை நிலவாகப் பாடல்களையும் சொல்லிக்கொண்டிருக்கின்ற வானொலியின் மௌனந்தான் அமைதியை இன்னும் எடுத்துக்காட்டுகின்றதாய்த் தோன்றிற்று.

கிருஷ்ணா வாகை மரத்தின் கீழிருந்த சாய்மனைக்கதிரையில் அமர்ந்திருந்தான். வழமையாய் அப்பாவின் இடம் அது. சாயங்காலம் அவர் திரும்பி வரும்வரையெனில் அதில் யாராவது உட்காரலாம்; தத்தித் தத்திச் செம்மஞ்சல் காலோடு திரிகின்ற குருவிகளை இரசிக்கலாம்; வானம் மேலே வந்து எட்டிப்பார்க்கும் போது விரும்பின உருவங்களைப் போட்டுப் பார்க்கலாம் அதில். சரிவரவில்லையெனில் அடுத்தமுறை காற்றுக் கலைத்து வேறு உருவம் போடும் வரை, காத்திருக்கும் நேரத்தில் முகில்களின் அசைவைப் பார்த்து அதிசயப்படலாம்.

இன்று ஏனோ எந்த இரசனையும் எழவில்லை. இரசிப்பதற்குத் தான் தானாயிருக்கவேண்டும். கண் வழியே மனம் செலுத்தி நெற்றி நடுவில் குவித்து ரசிப்பதெனில் புல்நுனி கூட கலைச் சித்திரம்தான். நீள்வட்ட இலையில் முக்கால்வாசிப்பாகத்தின் முடிவிடத்தில் தொடங்கிச் சடாரென்று கூம்பிச் சென்று கால்வாசிப் பாகம் கடந்து சின்ன முற்றுப்புள்ளி அளவு இடத்தில் முடித்து விடுகின்ற புல்லின் நுனி!

கண்மூடியிருப்பதுதான் சுகமாயிருந்தது. இரவு முழுவதும் 'ஜானு'வைத் தூக்கி உலாத்திய களைப்பு. கிருஷ்ணாவின் தாய்க்கு - சரஸ்வதிக்கு - இரவின் மெலிதான பனி கூட முற்றத்தில் இறங்கி நடமாட அனுமதிப்பதில்லை.

இரவின் முதற்காற்பாகம் முடிகின்ற வேளையிலேயே இவன் தூக்கமயக்கத்துள் விழுந்துகொண்டிருந்தான். "தம்பி.... தம்பி.... ஜானு அழுறாளடா...இவ்வளவு நேரமும் அக்கா தூக்கி வைச்சிருந்தவள்... கொஞ்சநேரம் நீ முத்தத்தில கொண்டு உலாத்திறியோ அப்பன்..." தாயின் குரல் கனவல்ல என்றுபுரிந்த போது தூக்கம் கலைந்துபோயிற்று.

பிறகு கிருஷ்ணா குழந்தையைத் தோளில் சாய்த்தபடி தனக்குத் தெரிந்த அளவில் முடிந்த அளவில் ஏதோ பாடினான். விநோதமான சத்தங்களை எழுப்பினான். குழந்தை சிரித்தது; விளையாடியது. பிறகு களைத்திருக்கவேண்டும். தூங்கிப் போயிற்று.

கிருஷ்ணா தன்படுக்கையிலேயே ஜானுவைப் படுத்தி, தாயின் மடியில் உறங்கியிருந்த கண்ணனையும் படுத்தினான். நிலத்தில் பாயைப் போட்டுப் படுத்த போதும் கலைந்த தூக்கம் இலேசில் தொற்றிக்கொள்ள வில்லை.

சரஸ்வதிக்கும் தூக்கம் வரவில்லை. சுவரில் சாய்ந்து அமர்ந்தபடி இடையிடையே ஏதோ சொல்லிக்கொண்டிருந்தாள்.

"மீனா பாவம்..! ஆஸ்பத்திரியில நித்திரை கொள்ளேலாது... தாய்க்கும் என்ன மாதிரியோ..? பாவம்! அந்த மனிசியும் எவ்வளவு வேதனையைத் தாங்கிப் போட்டுது. மீனாவும், வீட்டுக்கும் ஆஸ்பத்திரிக்கும் அலைஞ்சதில முதியாய்ப் போச்சுது... உதவிக்குப் ஒருத்தரில்லாம அந்தப் பெடிச்சி படுகிறபாடு.."

பிறகும் அவள் ஏதேனும் சொன்னாளோ? கிருஷ்ணா தூங்கிப் போனான்.

காலையில் மீனா வந்து குழந்தைகளை எடுக்கும் போதுதான் விழிப்பு வந்தது.

"அம்மா இரவு முழுக்க ஒண்டும் கதைக்கேல்லை...ஆனால் முகமெல்லாம் வேதனைப்பட்டுச் சுருங்கின மாதிரி இருந்தது மாமி...." மீனாவின் கன்னங்களில் நீர் வழிந்தது. மூக்கு நுனி சிவந்திருந்தது. குரல் கரகரத்தது.

சரஸ்வதி ஆறுதலாய் வார்த்தைகள் சொன்னாள். ஜானு தாயின் தோட்டில் விளையாடிக் கொண்டிருந்தது.

"பகலுக்கு ஒரு மனிசியைப் பிடிச்சு விட்டிட்டு வந்தனான்... இண்டைக்குப் பின்னேரம்தான் இனிப் போவன்...இண்டைக்கு இரவும் இதுகளை... உங்களைச் சரியா கஷ்டப் படுத்துறன் மாமி..."

"எனக்கு ஒரு கரைச்சலுமில்லை. எப்ப எண்டாலும் பிள்ளையள் வரட்டும்... அப்ப மத்தியானச் சாப்பாடு...?"

"அவ சாப்பிடவும்மாட்டா வடிவா... ஆனா வீட்டுச்சாப்பாடு எண்டா நல்லதுதான்... ஆனா யார் மாமி கொண்டு போறது? இந்த வெயிலுக்கை பத்து மைல்...!"

"ராமுவின்ர மனிசி அங்கதானே வேலை செய்யுது...?"

"வேண்டாம் மாமி...நாலைஞ்சு தரம் அங்க கண்டனான்...ஒரு சொல்லுக் கதைக்கவேயில்லை..."

"எனக்கு இண்டைக்கு லீவுதானே. கொண்டுபோய்க் குடுக்கிறன். குடுக்கிறன்..." கிருஷ்ணா சொன்னபோது மீனாவின் இதழில் நெகிழ்வாய் ஒரு



புன்னகை மலர்ந்தது.

மீனாவின் தாய்க்கு உறவு என்று சொல்லும்படியாய் ஒரு தம்பிதான் இப்போது இருக்கிறார்... எந்த வெயிலுக்குத் தோன்றிய மண்ணின் வெடிப்பு என்று தெரியாதது போல எப்போதோ விரிசல் கண்டுவிட்ட உறவு.

கிருஷ்ணா இரண்டாம் வகுப்புப் படித்துக்கொண்டிருந்தபோது மீனாவுக்குத் திருமணமாயிற்று. இராகவனின் கை கிருஷ்ணாவின் தலைப்பாவில் தொட்டுக்கொண்டு நின்றாலும் கிருஷ்ணாதான் அன்று 'தோழனா'யிருந்தான். ஒற்றைப் பெண்ணான மீனாவுக்குத் தாயைத் தனிக்கவிட்டு இராகவனோடு செல்வது மகிழ்வற்றதாயிருந்தது.

இராகவன் புனுணமுடிவுக்குச் சாத்தியமான நாட்களில் ஊருக்கு வருவான். அந்த நாட்களில் மீனாவோடு மூன்று குழந்தைகளாகும். வீட்டில் அவன் புறப்பட்டுவிட அவள்தான் எல்லாமும். அடிக்கடி தாய் நோய் வாய்ப்படுவதுண்டு. அந்த நெருக்கடிக்கும் மீனாதான் முகங்கொடுக்க வேண்டும்.

"மாமி...மாமி..." மீனாவின் பதற்றமும் அழுகையுமான குரலைக் காற்று காதுகளில் போட்டபோது கிருஷ்ணா திடுக்கிட்டு எழுந்தான்.

ஜானு தோளில் ஆடிக் கொண்டிருந்தாள். கண்ணன் அரண்டு போய் நின்றிருந்தான். மீனாவின் முகம் கண்ணீரால் வழிந்து கொண்டு இருந்தது. சொற்களை விம்மல் விழுங்கிக் கொண்டிருந்தது.

கிருஷ்ணா போனபோது மீனா சொல்லி முடித்திருக்க வேண்டும். கிருஷ்ணா தாயைப் பார்த்தான்... என்றோ எல்லாருக்கும் மிகப் பொதுவான ஒன்றை, மிக அண்மையில் எதிர்நோக்கிவிட்ட அதிர்ச்சி அவள் விழிகளின் நீரில் தெரிந்தது.

எதுவும் சொல்லப்படாமல் கிருஷ்ணாவுக்கு எல்லாவற்றையும் சொல்லிற்று மௌனம். மீனா துவண்டு நிலத்தில் இருந்தவாறே ஜானுவையும் மடியில் இருத்தினாள். அடிவயிற்றிலிருந்து கேவல்களும் 'அம்மா' என்ற சொல்லும் மீண்டு மீண்டு

வந்தன.

விடியலிலிருந்து இந்த மதியம் வரை மௌனமாய் நதியோட்டத்துடன்தானே சென்றது பொழுது. இப்பொழுது என்னவாயிற்று? இருளாகக், கருமையாகப், பரபரப்பாகப் பிறரால் சொல்லப்படுகின்ற செய்தியோடு புழுக்கமாய் ஓடிக்கொண்டிருந்தது.

இரு மழலைகளின் பூங்காவாய் இருந்த வீட்டின் ஹோல் வெறுமையாகி நீளவாங்கிடப்பட்டு இரண்டு மணித்தியாலங்களில் மீனாவின் வீடு முற்றிலுமாய் மாறிவிட்டது.

ஆயிற்று. 'புள்ளை', 'பொடிச்சி', 'மனிசி', 'தாய்', 'கிழவி' எல்லாக் குறியீடுகளும் கடைசி மூச்சோடு வெளியேறிவிட 'அது' கொண்டு வரப்பட்டு நீளவாங்கில் படுத்தப்பட்டது. மீனாவின் அழுகை நைந்து போய் உயிர் குதறும் துன்பத்துடன் இருந்தது.

சுவர்ணா ஜானுவையும் கண்ணனையும் வைத்து அழுகையுடன் விளையாட்டுக் காட்டிக்கொண்டிருந்தாள். கிருஷ்ணா போய்த் தகப்பனை அழைத்து வந்து விட்டான். இராகவன் மறுநாள்தான் வரமுடியுமாம்; செய்தி வந்திருந்தது.

தோரணம், மரண அறிவித்தல், புரோகிதர்...இன்னும் நிறைய விடயங்கள்...நேரம் நின்றதா தவழ்ந்ததா எனத் தெரியவில்லை. ஒன்றாய்... இரண்டாய் பலர் ஹோலில் இப்போது மெல்லிய இரகசியக் குரல்கள், 'கசமுசா'வாய் வெளி வசலுக்குக் கேட்கத் தொடங்கியிருந்தது.

மீனாவிடம் எப்ப எடுக்கிறதாய்ச் சரஸ்வதி கேட்டபோது "நாளைக்கு..?" அந்த ஒரு சொல்லுக்கே ஜீவனம் போதாமலிருந்தது.

"இனியும் வெட்டிச் சிதைக்க.... அப்படியொண்டும்... வேண்டாம்... நாளைக்கு மத்தியானம்..."

சரஸ்வதி கணவனை அழைத்துச் சொன்னாள்.

கிருஷ்ணா பந்தல் போடுவதில் உதவி செய்து கொண்டிருந்தான்.

"அப்பா..." என்று ஏதோ அலுவலுக்காக இவன் கூப்பிட்டபோது "வேலாயுதம் இஞ்ச ஒருக்கா வந்திட்டுப் போம்...." என்று ஒரு மனிதரின் கிசுகிசுப்பான குரல் அழைத்தது.

வேலியோரமாய்க் கூட்டிச்சென்று ஒரு கையைப் பற்றியபடி அந்த மனிதர் கதைத்துக் கொண்டிருப்பது தெரிந்தது. பிறகு அவர் சால்வையை உதறிக்கொண்டு மறு தோளுக்கு மாற்றிக்கொண்டு போய் விட்டார்.

"கிருஷ்ணா... அம்மாவைக் கூட்டி வா..." தகப்பனின் குரலில் யோசனை இருப்பது கிருஷ்ணாவுக்குப் புரிந்தது.

சரஸ்வதி விழிகளில் கேள்விக் குறியோடு வந்தாள்.

"சுந்தரலிங்கத்தார் வந்தவர்..."

"என்னவாம்...?"

"மீனாவின்ர அம்மாவுக்கு இருக்கிற ஒரேயொரு சொந்தத்தையும் விட்டுட்டு செய்யிறது முறையில்லையாம். கடைசிக் காரியம் செய்யேக்கை உறவுகளை விட்டுட்டுச் செய்தால் ஆத்மா துன்பப்படுமாம். தான் .'.போனில கதைச்சு அவவின்ர தம்பியை வரச்சொல்லிச் சம்மதிக்கச் செய்து போட்டாராம். வெள்ளிக் கிழமை .'.பிளைட்டில வாறாராம்...."

"......." சரஸ்வதிக்கு எதுவும் சொல்லத் தோன்றவில்லை.

"என்னப்பா செய்யிறது...?"

"பாப்பம்....மீனாட்டைக் கேட்டுப் பார்ப்பம்....அவளின்ர விருப்பப்படி செய்வம்...."

சரஸ்வதி யோசனையோடு உள்ளே சென்றாள்.

அன்று மீனாவின் தாய்க்கு இரத்த வாந்தி எடுத்தபோது இரவு பத்துமணி இருக்கும்; வேலாயுதம் மூலைவீட்டுச் சுந்தரலிங்கத்தாரிடம் போய்க் கார் கேட்டபோது சாதுரியமான வார்த்தைகளில் அவர் மறுப்பைச் சொன்னது கிருஷ்ணாவுக்கு ஏனோ ஞாபகம் வந்தது.

மனிதர்களிடையான உறவு என்பது எவ்விதத்தில் இரத்த உறவுக்குத் தாழ்ந்ததாகிவிடும் என்பது அவனுக்குப் புரியவில்லை.

சரஸ்வதி திரும்ப வந்து கணவனை அழைத்தாள்.

"என்னவாம்...?"

"மீனா பாவம்! அதுக்கு என்ன சொல்லுறதெண்டே தெரியேல்லை. தாய் முந்திக் கதைக்கேக்கை சொல்லியிருக்கிறாவாம்... உப்பிடி இழுத்து வைச்சுச் செய்யிறது தனக்கு விருப்பமில்லை எண்டு... ஆனாப் பிறகு ஊர் என்ன சொல்லுமோ எண்டும் பயப்படுது...."

"அப்ப..?"

"வெள்ளிக்கிழமைக்குத் தக்கபடி செய்யுங்கோ...பிறகு ஏன் வீணாய்...?"

மாலை கவியத் தொடங்கிவிட்டது. சனங்கள் கலையத் தொடங்கிவிட்டார்கள். குத்துவிளக்கின் சுடரை வெறித்தவாறு மீனா அமர்ந்திருந்தாள்.

'இரவு எப்படி முடியப் போகிறது?' கிருஷ்ணாவுக்கு யோசனையாய் இருந்தது.

ஜானு சுகர்ணாவின் தோளில் தூங்கிவிட்டாள். கண்ணனுக்குச் சூழல் ஏதோ அச்சந்தருவதாய் இருந்திருக்கவேண்டும். "இஞ்ச வேண்டாம்... எங்கட வீட்டை போவம்..." என்று திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தான். பக்கத்து வீடுதான் எனினும் வேலி இல்லாததால் இரண்டு வீடும் எப்போதும் தனிமைப்பட்டிருப்பதில்லை.

சுகர்ணா குழந்தைகளைக் கூட்டிக்கொண்டு சென்றாள்.

சரஸ்வதி சாப்பாடு செய்து மீனாவுக்கு கொண்டு போனாள். குழந்தைகள் தூங்கிய பிறகு வேலாயுதம் வீட்டிலிருந்தார்.

கிருஷ்ணாவும் சுகர்ணாவும் அங்கு போனபோது மீனா கால்மாட்டில் அமர்ந்திருந்தாள். கேசம் கலைந்து முகத்தில் பரவியிருந்தது. கண்ணீர் கன்னத்தில் காயாமல் இருந்தது. இடையிடையே மீனாவின் வரண்ட குரலில் பழைய ஞாபகங்கள் ஒலியுருவாகின.

கிருஷ்ணா கண்ணீரை மறைக்க தூரத்தே வானத்தை இலக்கின்றிப் பார்த்துக் கொண்டிருந்தான். நட்சத்திரங்கள் கலங்கி கொலுள்ளவையாய்த் தோன்றின.

தாய்...எத்தனை பெரிய விடயம்! தன்னைச் சூழத் தாயின் பாசமெனும் வலை எத்தகைய சின்னச் சின்ன அன்பு இழைகளால் பின்னப்பட்டிருந்தது என்பதை மீனா விடியும் வரை சொல்லிக் கொண்டிருந்தாள்.

காலையில் சரஸ்வதி கொண்டு சென்ற சாப்பாட்டை 'ஜிம்மி'க்குப் போட்டாள்.

நன்றாக விடிந்தபின் சனங்கள் அதிகமாய் வந்தார்கள். மேளம் ஒவ்வொரு மனிதரின் வரவையும் அதிர்ந்து சொல்லிற்று. ஜானு ஒவ்வொரு அதிர்வுக்கும் திடுக்கிட்டு அலறத் தொடங்கியது.

உள்ளே ஒப்பாரிச் சத்தம் இடையிடையே கேட்டுக் கொண்டிருந்தது. சொற்கள் தெளிவாய் விளங்கவில்லை. ஓ...ஓ...ஏ...ஏ...ஊ...என நெடில்கள் மட்டும் வாக்கிய முடிவில் நீண்டு பல மாத்திரைகளுடன் கேட்டன. கண்ணன் "தலையுக்கை நோகுது...." என்றபடி சிணுங்கிக் கொண்டிருந்தான். கிருஷ்ணாவுக்கும் கூட அவனைக் கவனிக்க நேரமிருக்கவில்லை.

மீனா மென்பச்சை நரம்புகளுடன் வெளிறிப் போய் விழ ஆயத்தமாகின்ற பூவரசம் இலை போல இருந்தாள்.

மதியமளவில் வீட்டினுள் சனங்கள் நன்றாய்க் குறைந்து விட்டார்கள்.

"வெள்ளிதானே எடுக்கிறது... ஆறுதலாய் ஒவ்வொரு நேரம் ஒவ்வொரு சனம் வரும்...நினைச்ச நேரத்துக்கு..."யாரோ சொல்ல....

"வெள்ளியில எடுக்கக் கூடாதாம்...சனி காலமைதான்...."யாரோ இடைமறித்துச் சொன்னார்கள்.

ச. ஆனந்தி

"குடல் எடுத்தாச்சுத்தானே... எத்தனை நாளெண்டாலும் பரவாயில்லை...." பொறுப்பற்ற தனமாய் ஒரு குரல் அபிப்பிராயம் சொன்னது.

'யாருடைய குரல்...?' என்று திருப்பிக் கேட்க வேண்டும் போல ஒரு வேகம் பிறந்தது கிருஷ்ணாவுக்கு.

'அது'க்கு குடல் எடுக்கலாம்... மனிசருக்கு மனத்தை என்ன செய்யலாம்...?' வேலாயுதம் மெதுவாய் முணுமுணுத்தாலும் கிருஷ்ணாவுக்கு அது கேட்டது.

மதியம் தாண்டிக்கொண்டிருந்தது. செழிப்பான குரோட்டன்களின் பின்னால் நிழலில் கண்ணனைத் தோளில் சாய்த்தபடி கிருஷ்ணா படியில் அமர்ந்திருந்தான். வெண்மணல் நிலம் வெற்றிலைத் துப்பல்களால் சிவந்திருந்தது. இவர்கள் எப்போது திருந்துவார்கள்?

உள்ளேயிருந்து இரண்டு பெண்கள் வெளிவாசல் நோக்கி நடந்து கொண்டிருந்தார்கள்.

"என்னடியப்பா இது? ஒரே பெட்டை எண்டு அந்தமனிசி எப்பிடி வளர்த்தும் என்ன பயன்? பொடிச்சிக்குக் கண்ணிலை ஒரு துளி தண்ணி இல்ல...அவ்வளவு நேரமா நானும் பாத்துக்கொண்டிருந்தன்..."

"ஓமோம்....இவையள் ஊரை அண்டி நடக்காமல் பெரிய ஆக்களெண்டு இருக்கிறவை...கிழவி கோயிலுக்குப் போகேக்கை கூட மூலையில எங்கட வளவுக்கு எட்டிப் பாராது...திமிர். ஏதோ நாங்கள் எண்டபடியா வந்தம்... மற்றவர்களுக்கு என்ன விசரே...? அதுதான் இப்படி நாலோ அஞ்சு பேரோட....."

சரிந்துவிழும் கண்ணனையும் தூக்கியபடி கிருஷ்ணா யாரென்று பார்க்கும் ஆவலில் எழுந்தான். சுந்தரலிங்கத்தாரின் மனைவியும் இராமுவின் மனைவியும் போய்க்கொண்டிருந்தார்கள்.

அவர்கள் நடந்து சென்ற பாதையில் தூசி கிளம்பியிருக்க வேண்டும். மூக்கினுள் புகுந்து நெஞ்சை அடைப்பது போல இருந்தது.

மீண்டும் அமர்ந்தவாறே வலது கைவிரல்களை மடித்து எண்ணினான். இண்டைக்குப் புதன் இரவு, வியாழன் பகல் - இரவு, வெள்ளி பகல் - இரவு, சனி பகல்... இன்னும் எத்தனை பொழுதுகள்? இவற்றுக்கு எவ்வளவு நிமிடங்கள்? இன்னும் எத்தனை மனிதர்கள்...எத்தனை வார்த்தைகளோ...?

கண்ணனின் உடம்பு வேசாய்ச் சுட்டது. கூடத்துள் ஜானுவின் அழுகை தொடர்ச்சியாய்க் கேட்டுக் கொண்டிருந்தது. எதையும் உணராதது போல மீனா வாங்கில் தலை வைத்தபடி அமர்ந்திருந்தாள். கிருஷ்ணா வாசலில் நின்றபடி பார்த்துக் கொண்டிருந்தான்.

"சீ...கண்ணுக்கை தூசி போட்டுது.." என்பதாய்ச் சொல்லிக் கிருஷ்ணா கண்களை அழுந்தத் துடைத்துக் கொண்டான். வெளியே யாரோ வருகிறார்களாவெனப் பார்ப்பதாய் வாசலின் வெளியே நீண்டிருந்த மணல்ஒழுங்கையைப் பார்த்தான்.

கண்ணனின் தலை கொதிப்பது போலிருந்தது. உடம்பிலும் மெல்ல அனல் தெறிக்கத் தொடங்கியிருந்தது.

*

# மௌனமொழி

## உங்கள் கவிதைகள்



பொங்கிடும் பானையில்
பொங்கிடும் உணர்வுகள்
பொன்னான வெற்றியை
பொறிக்கத் துடிக்கும்
பொற்கரங்கள் கொடியுடன்
பொம்மை என்றெண்ணாதே
பொறுத்திரு கொஞ்சநாள்
பொற்காலம் அருகினில்

- நோபேட் -
இளவையூர்.

திங்களின் கதிர் பொங்க!
திகட்டும் திருநாளிலெம் மனம் பொங்க!
மகரந்தம் மலிந்து மலர் பொங்க!
கவிமலராலெம் தமிழ் பொங்க!
தரணியெல்லாம் தமிழன் புகழ் பொங்க!
புன்னகையால் எங்கள் உடல் பொங்க!
ஓயாத அலை வந்து ஊர் பொங்க!
உணர்வுகளை ஏந்தும் கொடி பொங்க!
உள்ளத்து எழுத்துகளால் பொங்குகிறேன் பொங்க!!

- ஈழமேகம் -
யாழ்.

அடே தமிழா! நீ
புதுப்பானையில் பொங்காவிடினும்,
புயல் வேகம் கொண்டு
பொங்கி எழுந்தால்
புரண்டோட மாட்டாரோ
கயவர்?

- தர்ஸன் -
உடுப்பிட்டி.

பொங்குது பொங்குது
விடுதலைப் பொங்கல்
வல்ல கரங்களின்
தியாக வேள்வியில்
மெல்லவே பொங்குது
வீரத்தின் பொங்கல்
இல்லை இனியொரு
இம்சைகள் இங்கென
தொல்லை களைந்திடும்
வெற்றிப் படையலை
தோளொடு தோள்நின்று
பெற்றுநாம் உண்பமே..!!

- கலைநேசன்சிவம் -

தை பிறந்தால் வழி பிறக்கும்
பொங்கலோடு ஒளி பிறக்கும்
என்றிருந்தேன் ஏதேதோ
எதிர்பார்ப்பில்
எந்தன் விழியோடு விழியுரசப்
பார்த்திருந்த
வழியைத்தான் இன்னும் காணோம்
நெஞ்சில் 'கலர் கலராய்க்'
கனவுகண்டு காத்திருந்த
ஒளியைத்தான் இன்னும் காணோம்
ஈழப்போர் மட்டும் விரிகிறது
பெருநெருப்பாய்!

- எஸ்.யு.காந்தன் -
தல்லையப்புலம்.

ஆதவன் எழும்பும் முன்னர்
ஆக்கிப்படைக்கவேண்டும் - பொங்கல்
மகிழ்ச்சி பொங்க வேண்டும் - என்று
எழுந்து தோய்ந்து
அடுத்த ஒழுங்கையில்
பால் வாங்கப் போனேன்...
அவசரத்தில் எடுத்து வைக்க
மறந்த ஐ.சி.யினால்
அன்று முழுக்க பொங்கலில்லை - போங்கள்!

- முத்துமாரி -

மழை தரும்
சூரியனை வணங்கிப்
பொங்கிப் படைத்தது
அந்தக்காலம்!

நிலம் மீட்டுத்தரும்
'ஆதவன்' வழியில்
பொங்கி எழுந்தது
இந்தக்காலம்!

- சீ.ஏ.சிறீகரன் -
ஆழியவளை.

பொங்குதுபார் புதுப்பொங்கல்
புதுமையுடன் புத்தாயிரமாண்டில்,
பொங்குது பார் புதுப்பொங்கல்.
இருண்டுபோன தேசமதில்,
தொலைந்து போன,
உண்மைகளைத் தேடி...
நாளைய மலர்விற்கான,
இன்றைய முன்னறிவிப்புடன்....
பொங்குது பார் புதுப்பொங்கல்...!

- ஆ. ஷாகரி -

வையக வலத்தினில்
வந்தனள் தையலாள்!
ஐயயோ அவல
அழுக்குகள் அகன்று
வெய்யோனின் வருகையை
கையிலே கூப்பி
பொய்யந்த மனிதம்
புலர்ந்திடப் பொங்கு!

- க.வதனி -
மானிப்பாய்.

ஈழத்தாய் மண்ணிலொரு
பொங்கல்
பானையிலே குருதிக் குழம்பு
பார்க்கும் கண்ணில்
சூரியக் கதிரின், மறுதாக்கம்....
பொங்கி வழிகிறது
வெற்றி உறுதி.... இளம் தளிரின் மீதி....
செந்தணலில் சிறைப்பட்ட கை
ஆதரத்துடன் தழுவிக் கொள்கிறது
ஆறு மனமே.....
வெற்றிக் கொடியோடு
வெகு விரைவில் பொங்கல் வரும்.

- த.தர்மதா -

உடலை எரித்து
உணவு சமைத்தாலும்;
உணர்வுகள்
வெளிப்படுவது
இப்படித்தான்!

- பராங்கதன் -

தமிழா!
குதூகலப் பொங்கலிதை - நீ
'குமுறிப் பொங்கி'யிருந்தால்
எப்போதோ பிறந்திராதோ - தை?

- சௌஜன்ஜா -

பார்க்கட்டும் கண்கள்....
பேசட்டும் உதடுகள்....
கேட்கட்டும் காதுகள்....
ஜீவன்கள் பலவற்றின்
உணர்வுச்சூட்டில் உயிர்த்தெழுந்த
புதியதோர் வரைபடம்.
இதோ.....
வானம் பிளந்து வருகிறது.

- ஆ.சங்கரி -
யாழ்.பல்கலைக்கழகம்.

வெடி வெடிக்க,
இருள் விலக
கதிரோன் பார்த்து
குதூகலித்து,
பொங்கியது அன்றாகும்.
வெடி கேட்க
புகை சூழ
குண்டேகும் திசைபார்த்து
குலை நடுங்க
பொங்குவது இன்றாகும்.
இருளின் முடிவினில்
பானைகள் பொங்கும்
போரின் முடிவினில்
மனங்கள் பொங்கும்....!

- சறோ. தம்பித்துரை -

நெற்கதிரை புததிதாக....
நேசமுடன் பிரித்தெடுத்த ~ தைப்
பண்டிகைக்குப் பானையிட்ட.....
பண்பாட்டு முறை வந்தோர் ~ இன்று
நித்தம் ஒரு வேளைக்கே.....
'நிவாரணத்தை' நம்பும் நிலை!

- கோபி -
நெல்லியடி.

எங்கள் வீட்டு
உரிமைப்பானையில்
பொங்கமுடியாது
நிற்கிறது
சமாதானம்.

- ஷா -
யாழ்ப்பாணம்.

எந்தங்கை என்றோ காணாமற் போனாள்
முந்தி வந்தோன் மிதிவெடியில் காலிழந்தான்
குந்தியிருந்த வீடும் குண்டால் அழிந்தது
பந்தமின்றி எந்தாய் பைத்தியமானாள்
சொந்தங்கள் எல்லாம் சிதறிவிட்டபோது
பொங்கலே ஏன் வந்தாய் போ! போ!

- லோ.கமலவதனி -
ஓட்டுமடம்.

புத்தாயிரமாண்டில் புதிர் எடுத்து
புதுப்பானை யேற்றி வைத்து
பத்தாயிரம் எம்மவர் கனவினை - நனவாக்க
பொங்கிடடா ஈழத்தமிழா - நீ பொங்கிடடா!

- வி.சுதா -


உலகே!
உனக்கொரு
சேதியிதோ!!
புத்தாயிரத்தில்
பழைய தமிழன்
புதுமையாய்
பொங்குவது
இப்படித்தான்.!!

- செய்யுங்கோ -
நீர்வேலி.

போர்ப்பானை உலை ஏந்தி
பொஜனத்தின் உயிரையிட்டு
பொங்கல் ஒன்று பொங்கி....
பேரினவாதத்திற்கு படையலிடு....!

- சு.சுதர்சன் -
வதிரி.

## மௌனமொழி - 71



உங்கள் கவிதைக்கான எங்கள் ஓவியம் இது. இதனை வரைந்தவர் மானியூர் ரட்ணேஸ்.

இங்கு
பொங்கி வருவது
பொங்கலல்ல..... தமிழர்
விடுதலைக்காய்
விதையானவரின்
நெஞ்சம் நிறைந்திருந்தவை.

- இணுவை றொட்றிக் -

சுட்டெரித்துப் பொங்கவைத்தார்
நாம் பொறுத்திருந்தோம்!
இனிநாம்
பொங்கி எழுந்து பூகம்பமாவோம்
சுட்டெரிக்க யார் வருவார்?

- தமிழ்த்தாடி -
ஈச்சமோட்டை.

பாரதியே!
உன் கனவில்
ஒரு சொட்டை நனவாக்க
ஒருபானை சோற்றில் - இங்கே
ஒத்திகை நடக்கிறது
வயிற்றுக்குச் சோறிட....

- என்.தனுசுஜன் -
சண்டிலிப்பாய்.

அடுப்பாய்க்
கைகள்
இருப்பதில்
அந்தோ;
அதிசயமேது..?
இங்கு
பிணங்கள்;
அரிசியாய்
அவிகிறபோது?

- எஸ்.அருந்ததி -
உடுத்துறை.

'அம்மா'வின் பொங்கலிது;
தமிழர்,
கை காலை விறகாக்கி
இனவாத தீமூட்டி
இரத்தத்தை உலையாக்கி - நடத்துகின்ற
களவேள்விப் பொங்கலிது.
அரச இலையில் படையல்.
அதை உண்ண சில தமிழ் மடையர் - போகட்டும்
அடுத்த 'தை' எமக்காக விடியட்டும்!

- மீரா.கிருஷ்ணன் -
சுண்டுக்குளி.

பறக்குது......பார்.....
பறக்குது.....பார்.....
ஆதிக்கக் கரங்களை.....
விறகாக்கி....
அடக்குமுறை......
பாதகங்களை.......
அடுப்பதிலே......
பொசுக்கி.....
அடிமை விலங்கறுத்த.....
ஆர்ப்பரிப்பில்....
பொங்கல் உலையினிலே.....
எங்கள் கொடி
மிடுக்காய்....
பறக்குது....பார்.....
பறக்குது.....பார்....

- நா.கபில்நாத் -

புத்தாயிரமாம் ஆண்டின்
புதுப் பொங்கல் – மனிதப்
புதைகுழி மீது.....
புதுப்பானையதைத்
தாங்குதிங்கு
புதைந்த கைகள்

- சரிதன் -
கம்பர்மலை.

பொட்டிழந்து பூவிழக்கும்
பொழுது இனி வேண்டாம்
துட்டரது கொடும் பகைமை
துயரமினி வேண்டாம்
வீட்டிழந்த நல்லொளியின்
விடிவு வர மெல்ல
மொட்டவிழும் சூரியனை
மெய்ச்சி வர வேற்பாய்.

- மானியூர் ரட்ணேஸ் -

'அடுத்த தைப்பொங்கல்
சொந்த வீட்டின்
முற்றத்தில் தான்' என்ற
கனவோடு
எத்தனை தைப்பொங்கலை
அகதி முகாமிலேயே
கழித்து விட்டோம் - ஆனால்
எங்கள் கனவுதான் -
இன்னும் நனவாகவில்லை.

- தாரணி -

# தரிசனம்

**1**

எங்கள் நவநீதகிருஷ்ணன் (நவநீதன்) கணனி காலத்து நந்தனார்தான். நந்தனாருக்குச் சிதம்பரம் போல், எமது நண்பன் நவநீதனுக்கு ஆந்திராவில் புட்டபர்த்தி; ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் இடம். ஒரு காலத்திலே பாம்புகள் புற்றுகள் எடுத்த அந்தக் குக்கிராமம், இப்போது உலகத்தவர் தரிசிக்கச் செல்லும் ஆத்மிகம்மிகு நவீன சிறு நகரம். அங்கே பாபாவின் பிரசாந்தி நிலையம்.

சென்ற நவம்பர் மாதம் எங்களில் மூவர் யாழ்ப்பாணத்திலிருந்து புட்டபர்த்தி செல்ல ஆயத்தம் செய்தோம்; நான், எனது தங்கை கௌரி, எங்கள் சாயி பஜனை நிலையத்தின் வாலிபர் பகுதியின்தலைவர் ஞானசேகரன் (ஞானன்) ஆகியோர்.

எமது நவீன திருநாளைப்போவாராகிய நவநீதனின் தணியாத தவிப்பை நாம் அறியாமலோ உணராமலோ இல்லை. எப்போது சாயி பகவானின் தரிசனம் கிடைக்கும் என்ற அவனுடைய ஆத்மாவின் அவதிக்கு எமது வெறும் விருப்பங்கள் இணையாகுமா? இயற்கையின் மாமலைக்கும், நேற்றுப் பிள்ளைகள் சேர்த்தமணல் குவியலுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைதான்! என்றாலும் புட்டபர்த்தி போவது பற்றி நாம் அவனுடன் பேசவில்லை. எதற்கும் 'அண்ணா, நவநீதன் அண்ணா' என்று செல்லமாகவும் வேடிக்கையாகவும் அவனுடன் அலட்டும் எனது தங்கை கௌரி கூட இது பற்றி மூச்சு விடவில்லை.

'நவநீதனுக்கு என்ன பாபா தரிசனம்?' என்ற இருட்டு எண்ணம் எங்கள் மூவர் மூளைகளின் ஒரு மூலையில் ஒதுங்கி கண்களை மூடிய தவளை போல் இருந்தது. தரிசனம் என்றால் பகவானின் திருவுருவத்தை எமது கண்களால் கண்டு களிக்க வேண்டும். இந்த பிறவிக்குருடனுக்கு என்ன தரிசனம்!

அவனாக என்னைக் கேட்டான்: "ஒன்று கேள்விப்பட்டேன். பகவானைப் பார்ப்பதற்கு புட்டபர்த்தி போகிறீர்களாமே! நானும் உங்களுடன் வருகிறேன். அவருடைய தரிசனம் எனக்கும் வேண்டும்."

இந்தக் காலத்தில் ஏதாவது ஒரு காரியமாக யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு போவது, புராணக்கதைகளில் அரசிளங்குமாரியை அடைவதற்குக் காளை ஒருவன் எதிர்நோக்கும் அவஸ்தைகளையும் பரீட்சைகளையும் சந்திப்பது போலத்தான். இனி, இளைஞர்களாகிய நாம் சில நாள்கள் கொழும்பில் தவம் கிடந்து இந்தியாவுக்கு விசா எடுப்பதற்கும், கைதிக் கூண்டிலிருந்து தப்பி ஓடிய அளவு பழக்கம் வேண்டும். மேலும் பிரயாணத்திற்கு வேண்டிய பணம் ஒரு புறம். இவற்றை நவநீதனுக்கு விளக்குவதானால், அவன் எங்களிடம் கட்டாயம் கேட்பான்:- "என்ன சொல்கிறீர்கள். நீங்கள் போக முடியுமானால், நானும் போக முடியும் தானே?" இப்படியான வார்த்தைகள் - நீங்கள் ஒன்றைச் செய்ய முடியுமானால், நானும்..... என்ற எண்ணம் - அவன் அடிமனத்தில் மந்திரமாகவும், அவனது ஆளுமையின் வெளிப்பாடாகவும் இருந்தது.

அல்லாவிடில் அவன் இதுவரை சாதித்தவற்றை இலேசாக அடைய முடியுமா? மனித சாதிக்கு வாலும் இறக்கைகளும் எந்த அளவுக்குத் தேவை இல்லையோ, அப்படித்தான் கண்களும் என்ற பாவனையான வாழ்க்கை முறை அவனுடையது. நவநீதன் ஒரு கல்லூரி ஆசிரியன்; கோவில்களில் மிகவும் விரும்பப்படும் ஆன்மீகப் பேச்சாளன்; வயலின் இசைப்பதில் கைராசியான வைத்தியன். வயலின் இசை மகாத்தின் இன்பதுன்பங்களைச் சீராக்கவல்ல இயற்கை மருத்துவம் என்று கூறுவான். ஆமாம், மனிதனின் இன்ப மகிழ்ச்சிகள் கூட ஒழுக்கமாக இயங்குவதற்குப் பக்குவமான இசை வேண்டும் என்பான். ஆனாலும், நவநீதா, உனக்குக் கண்பார்வை இல்லை. பகவானை நீ பார்க்க இயலாது. எவ்வளவு கிட்ட இருந்தாலும் அவரின் தரிசனம் உனக்குக் கிடையாது.... நாங்களும் நீயும் ஒன்றா?" என்ற அடிப்படையான கேள்வி எங்கள் மனத்தில் நியமம் போல் உதித்தது. கௌரி நவநீதனுக்குக் கூறினாள்:-

"அண்ணா, நவம்பர் மாதத்தில் தான் பகவானின் பிறந்த நாள். பிரசாந்தி நிலையத்திற்குப் போய் வந்தவர்கள் சொல்வதைக் கேட்டால், அங்கே முன் வரிசைகளில் உட்காருவதற்கு எங்களுக்குச் சந்தர்ப்பம் கிடையாது போல் தோன்றுகிறது. நீ ஒரு சாதாரண நாளில் அங்கே போனால் முன் வரிசையில் இருப்பதற்கு வாய்ப்பு உண்டு. அப்போது தான் நீ சுவாமியின் பாதங்களைத் தொட்டுக் கும்பிடலாம்."

கௌரி சிரமப்பட்டுக் கூறியது சாயி பக்தர்கள் மிகவும் வேண்டும் பகவானின் பாத ஸ்பரிசம் பற்றியது. ஸ்பரிச உணர்வுக்கு கண்கள்தேவை இல்லைத்தானே! நவநீதனுக்குத் தரிசனம் அப்பாற்பட்ட ஒன்று என்றாலும், அவனுக்கு ஸ்பரிசம் கிட்டக் கூடியது அல்லவா?

ஒரு கற்பனை:- ஒருநாள் காலையில் அல்லது அந்தியில் பகவான் மண்டபத்திலே தரிசனத்திற்கு வரும் போது, முன் வரிசையில் நவநீதன் இருக்கிறான். அவன் எதிரிலே பகவான் வந்து நின்று பக்தர்களின் வேண்டுதல் கடிதங்களை வாங்குகிறார். அப்போது அவனுக்குப் பக்கத்தில் இருக்கும் நம்மவர்களில் ஒருவர் 'தொடு' என்று மெல்லமாக அவன் காதில் கூற, நவநீதன் எட்டி பகவானின் கால்களைப்பற்றி பாதங்களைத் தொட்டு பாதநமஸ்காரப் பேறு அடைகிறான்.... இப்படியான ஒரு நிகழ்வு தான் நவநீதனுக்கு ஏற்றது என்று நானும் நம்பினேன்.

கண்கள் உள்ள நாங்கள் கூட



புட்டபர்த்தியில் விசேஷ தினங்கள் அல்லாத வேறு நாட்களில் போனால் தான், பகவானைக் கிட்டப் பார்க்க அதிக வாய்ப்பு என்று எமக்குத் தெரியும்.ஆனால் இப்போது போனால், தரிசன மண்டபத்திற்குள் கால் எடுத்து வைக்க முடியாவிட்டாலும், பகவானின் 'போர்தடே'க்கு நாமும் போய் வந்தோம் என்று கூறக்கூடிய ஒரு வேடதார எண்ணம் எங்களை ஆட்கொண்டது.

நாங்கள் மூவரும் பிரயாணஒழுங்குகள் செய்வதற்கு முன்பே நவநீதன் முன்னேறிவிட்டான். அவனுக்கு கொழும்பு போவதற்கு இராணுவத்தினரின் 'அநுமதி' கிடைத்து விட்டது. அவன் கற்பித்த கல்லூரியில் இருந்து மூன்று வாரங்களுக்கு விடுமுறையும் கிடைத்து விட்டது. கல்லூரியின் தலைமை ஆசிரியரே இந்த ஒழுங்குகளைச் செய்ததாகக் கூறினான்.

நவநீதன் உயர் வகுப்புகளில் இந்துநாகரிகம் கற்பித்தான். அவனுடைய தாயார் அதே கல்லூரியில் கற்பித்து ஓய்வுபெற்றவர். தகப்பனர் எப்பவோ இறந்து போனார். அவருடைய குரல் கேட்ட ஞாபகம் அவனுக்கு இல்லை.

அம்மா சாயி பகவானுடைய போதனை நூல்களைப் படிக்க, நவநீதன் அவற்றைக் கேட்டு, பின்பு தம்பியாவுக்கும் மற்றவர்களுக்கும் அதன் உள்ளறிவுகளை விளக்குவான். அவனுடைய வீட்டில் அவ்வப் போது, ஒரு 'சத் சங்கம்' கூடும். சில வேளைகளில் நானும், ஞானனும், கௌரியும் ஏதாவது படித்து வந்து பேசுவோம். நவநீதனுக்கு அடுத்ததாக கௌரியின் விளக்கங்களே மணியாக இருக்கும். அவள் சிறு வயதில் சாயி சமித்தியின் 'பால விகாஸ்' வகுப்புகளில் ஒழுங்காகக் கற்றவள். இப்போது சமித்தியின் மகளிர் பிரிவில் சேவைகளில் ஈடுபடும் அங்கத்தவர்.

நவநீதன் தற்போது, 'பகவானின் பிரேமை' என்ற தலைப்பிலே ஒரு நூலைப் பார்வை அற்றோர் படிப்பதற்காக பிரெய்லி எழுத்தில் குத்திக் கொண்டிருக்கிறான். 'மனித உயர் மேம்பாடுகளின் தாயானவள் பிரேமை என்ற அன்புதான். ஆத்மாவின் கருவும் உருவும் அன்பே. எல்லா மதங்களின் திருவும் கூட அதுவே......' - இப்படியாக நவநீதன் பேசும் போது நாம் நேரகாலத்தை மறப்போம். பிரெய்லியில் எழுதப்பட்ட திருவிவிலிய நூல் (HOLY BIBLE) அவன் மேசை மீது எப்போதும் திறந்தபடியே இருக்கும். அவனுக்கு சிந்தியா என்ற கிறிஸ்தவப் பெண் ஒருத்தி காதலியாக இருக்கிறாள். சிந்தியா ஒரு விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியை. உரும்பிராய் ஊர். அந்த மண்ணின் நிறம் அவள் முகம். அவள் உடலின் செழிப்பும் அந்த மண்ணின் சாயல் தான். நவநீதன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில், பட்டம் பெற்ற அன்று சிந்தியா தந்த அன்புதான் அந்த திருவிவிலியம்.

அவன் ஒரு நல்ல இந்து. நல்ல இந்து என்றால், இந்து சமயத்தின் தத்துவத்தை மட்டுமல்ல, கிரியைகளையும் ஒழுங்காகக் கடைப்பிடிப்பவன். அவன் நவம்பரில் புட்டபர்த்தி போய் மார்கழியில் ஊர் திரும்பவேண்டும். பக்கத்திலே ஒரு சின்னப் பிள்ளையார் கோவில். அங்கே அவன் திருவெம்பாவைப் பாடல்களைப் பாட வேண்டும். கடந்த பதினைந்து வருடங்களாக, அவனுடைய பத்து வயதிலிருந்து பாடுகிறான். அதிகாலையில், பனி இருளில், நான் அவனைச் சைக்கிளில் ஏற்றிப் பிள்ளையார் கோவிலுக்குச் செல்வேன்

அங்கே.... ஆகா!

*விண்ணுக் கொரு மருந்தை, வேத விழுப் பொருளை*

*கண்ணுக்கினியானை பாடிக்கசிந் துள்ளம்*

*உள்நெக்கு நின்றுருக!.........*

மீண்டும் காதுகளிலே....

*ஒண்ணித்தில நகையாய்!...*

ஒலிக்கின்றது.

நண்பா, நவநீதா! உன் ஞானக் கண்களுக்கு விருந்தாக 'இனிக்கும்' அந்தப் பரம்பொருளைப் போற்றிய வாறு, நீ நின்று உருகும் போது, எங்கள் மனமும்தான் எங்ஙனம்குழைகின்றது! நெகிழ்கின்றது! பக்தியிலே மாணிக்கவாசகனே!

கடந்தவருடம், ஒரு நாள் காலை அன்றைய திருவெம்பாவை பூஜைக்குப் பணம் கொடுத்த, ஐம்பது வயது மதிக்கத்தக்க ஒரு பெண், சிலும்பச் சேலை உடுத்து, அடைக்கோழி போல் கோவிலுக்கு வந்திருந்தா. பணக்காரி. பக்கத்தில் ஒரு சிறுமி, பேத்தியாகலாம்.அந்த அம்மா வேறு சில திருவிழாக்களுக்கும் உபயகாரி. ஆனால்நித்தியதொடக்கு அனுட்டிப்பது போல் அவர்கள் யாரும் கோவிலுக்கு வருவதில்லை. பணமும், பெயர்களும், நட்சத்திரங்களும் அனுப்பி திருவிழா காரியங்கள், அவர்கள் 'சமூகம் தராத நிலையில்' (IN ABSENTIA) நடைபெறும்.

திருவிழா முடிய, குருக்களின் மகன் அவர்களுக்கு உரிய பிரசாதமாக சர்க்கரைச் சாதம், புளிச் சாதம், மோதகம், வடை, முறுக்கு மற்றும் திருநீறு, சந்தனம், குங்குமம் மற்றும் சுவாமிக்கு அணிந்த மலர் மாலை எல்லாவற்றையும் ஒரு கடகத்தில் வைத்து, சைக்கிளில் அவர்கள் வீட்டிற்குக் கொண்டு போவான். உபயகாரர் திருவிழாவுக்கு வர நேரமும் வசதியும் இல்லை. அல்லது குளிர், மழை, வெயில், சுகவீனம்.... வெளிநாடுகளிலிருந்து பிள்ளைகளின் ரெலிபோன் 'கோல்'.... காரணங்கள்..... சாட்டுக்கள்! இன்று அபூர்வ நாட்களில் ஒன்று. அம்மா கோவிலுக்கு வந்துவிட்டா. விரலிலே தெற்பை.

அந்த அம்மா கௌரியைப் பார்த்துக் கேட்டா: "என்ன! நீங்கள் சாயி பாபா பஜனைக்காரர். எங்களுடைய கோயிலுக்கும் வருகிறீர்கள்." கௌரி என் முகத்தைப் பார்த்தாள். நவநீதன்தான் விடை அளித்தான். அவனுக்குப் பேசாமல் இருப்பது பாவம் போல் தோன்றியிருக்க வேண்டும். அவன் சொன்னான்:-

"அம்மா, ஒரு சாயி பக்தன்தான் நல்ல சைவனாகவும் இருக்கக் கூடியவன். ஒருவர் தனது சமய ஒழுக்கத்தை அனுட்டிக்கவும், மனித மேம்பாடுகளை வாழ்விலே பேணவும், சாயி பாபாவின் போதனைகள் வழி காட்டுகின்றன. சாயிபாபா ஒரு புதிய மதத்தை உண்டாக்கவில்லை...."

நவநீதன் தனியாக ஒருவருடன் பேசும் போதும், சிறு குழுவினருக்கு விரிவுரையாற்றுவது போல்தான் இருக்கும்: செழிப்பான மொழி, சத்தியமான கருத்தக்கள், சாந்தமான சம்பாஷணை நிறைந்திருக்கும். கேட்கக் கேட்க, கேட்கத் தோன்றும். ஆனால், இப்போது அவன் கூறியதைக் கேட்பதற்கு அந்த அம்மா பக்கத்தில் இல்லை.

அவ கேட்ட கேள்வி கௌரிக்கு உரியது. 'இந்த குருடன் தரும் பதிலைக் கேட்டு உபத்திரவம் அடைவது' அவவின் தலைவிதியா? நவநீதன் வாய் திறந்ததும், கெட்ட சகுனம் கூச்சலுடன் எதிரே வந்தது போல், எட்டப் போய் பலிபீடத்திற்கு அருகில் நின்றா. பேர்த்தி மட்டும் சொற்ப நேரம், வாயைத் திறந்தபடி நவநீதனின் கண்களைப் பார்த்துக் கொண்டு நின்றாள். நவநீதன் வழமையாக அவனது வெறுமையான கட்குழிகளை மறைப்பதற்கு கறுப்பு நிறக் கண்ணாடி அணிவான்; இன்று அணியவில்லை.

நவநீதன் பேசுவதைக் கேட்கும் போது கௌரிக்கு குட்டிக் குதூகலம் ஏற்படும் - வானொலியில் தென்கச்சி சுவாமிநாதனைக் கேட்பதுபோல, அவனைக் கேட்பதெல்லாம் 'இன்னொரு தகவல்'தான். ஒரு நாள், கௌரி, தூண்டுதலான குறும்புடன் ஒரு கேள்வி கேட்டாள்:-

"நவநீதன் அண்ணா, நீங்கள் ஒரு சுத்த சைவன். சிந்தியா அக்கா முழுக்க முழுக்க கிறிஸ்டியன். எப்படி இரண்டு பேரும் காதலிக்கிறீர்கள்?"

ஸ்ரீ லங்காவின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு போல், இது ஒரு சிக்கலான பிரச்சினை என்று கௌரி நினைத்தாள். ஆனால், கௌரி எதிர்பாராதவாறு, இதைக் கேட்டதும் அவன் முகத்தில் சந்தனம் மணத்தது. இன்னும் ஒரே மூச்சில், மூன்று கேள்விகள்.

"அப்படி நீங்கள் கலியாணம் செய்தாலும், சண்டை சச்சரவு இல்லாமல் உங்களால் சீவிக்கமுடியுமா? நீங்கள் வாழத்தான் இனசனம் விடுமா? இனி, உங்களுக்குப் பிறக்கும் பிள்ளைகளின்பாடு எப்படியோ?"

நவநீதன் அரசியல்வாதி அல்ல; ஓர் ஆத்மிக அறிஞனாக நிதானமாகப் பதில் தந்தான்.

"தங்கச்சி, நல்ல இந்துவுக்கும் மேன்மையான கிறிஸ்தவனுக்கும் இடையே மனவேற்றுமை இருக்க முடியாது. வெளிவேற்றுமைகள் நிரந்தரம் அற்றவை. வெறும் சோடனைகள். மனம் அப்படிப்பல்ல. அது நிரந்தரமான ஆத்மாவுடன் சம்பந்தப்பட்டது... அதே போலத்தான் நல்ல இஸ்லாமியர். பௌத்தர் அனைவரையும் பிணைப்பது ஒரே ஒரு கடவுளின் அருளான அன்புதான்."

இப்படியாகச் சிறிது நேரம் பேசினான். இறுதியில், அவன் பேச்சு மேடைகளில் எடுத்துக் கூறும் பகவானின் வார்த்தைகளை ஞாபகப் படுத்தினான்:

*ஒரே ஒரு குலம்தான், அது மனிதகுலம்*

*ஒரே ஒரு மதம்தான், அது அன்புமதம்*

*ஒரே ஒரு மொழிதான், அது இதயத்தின் மொழி*

*ஒரே ஒரு கடவுள்தான், அவர் எங்கும் உள்ளார்.*

* * *

நவம்பர் 23.

பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் பிறந்தநாள்.

பிரசாந்தி நிலையம்.

காலை ஏழு மணிக்கு, குல்வந்த் ஹோலுக்கு பகவான் பக்தர்களுக்குத் தரிசனம் தர வருவார்.

சாதாரண நாட்களில் காலை நான்கு மணி அளவில்தான், பக்தர்கள் அந்தத் தரிசன மண்டபத்திற்குள் போவதற்காக வெளி முன்றலில் வரிசைகளாக இருப்பார்கள். ஆனால் இன்று மிகக் காலையில், நடு இரவே, அங்கே சென்று காத்திருக்க வேண்டும் என்று பழக்கப்பட்டோர் எங்களுக்குக் கூறினார்கள். நாங்கள் இரண்டு மணிக்கே எழுந்து, குளிர் நீரில் குளித்து விட்டு, கொக்குகள் போல் வெள்ளை ஆடையணிந்து காதுகளைக் கம்பளிச் சால்வையால் மூடியவாறு அங்கே போனோம். நவநீதனை ஞானன் அவனுடைய இடது கையைப் பிடித்து அழைத்து வந்தான். அவன் தனது வெள்ளைப் பிரம்பை வலது கையில் பிடித்து நிலத்தில் தட்டித்தட்டி வந்தான். நிலத்தாயும் அவனுக்கு அந்தப் பிரம்பு மூலம் வழிகாட்டுவது போல் உன்னிப்பாகக் கேட்டுக் கொண்டு வந்தான். அவன் கூறினான்:-

"ஞானா, இன்னும் ஒரு முறை என்னை இதே வழியால் அழைத்து வருவாயானால் அதன் பின்பு நான் விரும்பிய நேரம் தனியாக வந்து விடுவேன்"

நவநீதன் இதை எமக்குச் சொல்ல வேண்டுமா? அவன் நல்லூரில் தனியாகப் போகாத இடம் உண்டோ? கோவில் உண்டோ? நல்லூர்க் கந்தசுவாமி கோவில், சட்டநாதர் சிவன் கோவில், வீரமாகாளி அம்மன் கோவில், கைலாசநாத பிள்ளையார், தலங்காவற் பிள்ளையார், வெயில் உகந்த பிள்ளையார், கொண்டலடி வைரவர்... இன்னும்... எல்லாம் சங்கிலி மன்னன் சிலையிலிருந்து ஒரு மைல் தூரவட்டாரத்தில் யாழ்ப்பாண மன்னரின் இராசதான அன்பளிப்புகள். நவநீதன் போகும் வழியிலே கோவில் இருந்தால் கர்ப்பகிரகத்தின் சரி நேரில் நின்று கும்பிடுவான். அந்த நேரத்தில் கோவிலின் வெளிக்கதவும், உட்கதவுகளும் மூடி இருந்தாலும் அவனுக்காகத் திறந்தது போல் இருக்கும்.

## நந்தி

அவன் யாழ்.பல்கலைக்கழகத்தில் படிக்கும் போது, தனது வீட்டிலிருந்து தட்டித் தட்டித் தனியே போவான். யாராவது சைக்கிளில் ஏறச் சொன்னால் அதிகடாக மறுத்து விடுவான்.

"தம்பி... அண்ணா... அக்கா... நான் நடந்து போகிறேன். மிகவும் நன்றி. சந்தோஷம்." என்பான். சிந்தியா சில நாட்கள் பலவந்தமாக அவனை சைக்கிளில் ஏற்றிச் செல்வாள். ஒரு நாள் அவன் அவளுடன் போகும்போது சொன்னானாம்:-

"சிந்தியா, நான் தனியாக நடந்து போகும் போது அநுபவிக்கும் உணர்வுகள் வார்த்தைகளுக்கு அப்பாற்பட்டவை...

"இந்த மண்ணின் காந்தம் உன்னை ஈர்த்ததுண்டா? நல்லூர் காற்றின் பவித்ர ராகங்களை நீ கேட்டதுண்டா? கோவில்கள் தேவாலயங்களின் திவ்ய அலைகள் உன்னை ஆசீர்வதிக்கவில்லையா?"


"போதும் உங்கள் கற்பனை" என்றாள் சிந்தியா.

"சிந்தியா, இப்போது உனது முகத்தின் மோகனத்தையும் இதயத்தின் இனிய ஆதிக்கத்தையும் மட்டும் உணருகிறேன்" என்றான் அவன்.

இனி, மௌனம் பேசும்.

(மிகுதி அடுத்தவாரம்)


# (3) ஆழ்நீரில் மறைந்திருக்கு



ஒரு சிறுத்தை சீல் (LEOPARD SEAL) கரையில் தத்தியேறுகின்றது. ஒரு கூட்டம் பென்குயின்கள் இதை அவதானித்துக்கொண்டேயிருக்கின்றன. நிலத்தில் சிறுத்தை சீலினால் மிக ஆறுதலாக ஓடும் பென்குயினைக் கூட பிடிக்க முடியாது.



பிறான்கா (PIRANHA) வின் வஞ்சகமில்லாத தோற்றம். ஒறினோகோ (ORINOCO) குலத்தைச் சேர்ந்த செவ்விந்தியர்கள் ஒரு காலத்தில் இறந்தவர்களின் உடலைச் சுலபமான முறையில் 'தகனம்' செய்ததாகத் தெரிகின்றது - பிறான்காக்கள் உள்ளகுட்டையில் உடலைப் போட்டுவிடுவார்கள். பிறான்காக்கள் காரியத்தைக் கனகச்சிதமாக முடித்துவிடும்.



கடல் அனிமணி (SEA ANEMONE) பரிசக் கொம்புகளை விரித்து இரைக்காகக்காத்திருக்கின்றது. பூவிலங்குகள் (ANTHOZOA) என்ற பெயர் இவற்றிற்கு எவ்வளவு பொருத்தம்.



ஒரு பனிக்கட்டி மிதவையிலிருக்கும் தனி சீலை (SEAL) நோக்கி மூன்று கொல்லும் திமிங்கிலங்கள் கூட்டுச்சேர்ந்து வருகின்றன.




ஒரு (PIKE) மீனுக்கு முள் முதுகன் (STICKLE BACK) மீன் இரையாக அகப்பட்டுள்ளது. வயிறு நிறைந்த உணவின் பின் பைக் மீன் ஒருவார காலம் வரை ஓய்வெடுக்கும், உணவு சமிபாடு அடைவதற்கு உதவும் வகையில் (பசிக்காமலே புசிப்பவர்கள் மனிதர்கள் மாத்திரம்தான்.)

## விநோதமான போர்க்கருவிகள்

வாள்மீனின் (SAW - FISH) மூஞ்சி வாள் போல நீட்டப்பட்டிருக்கும். வாளின் இரு பக்கமும் பற்கள் உண்டு. வாள் மீன்கள் சுறாக்களின் தூர இனத்தவர்கள். வாள் ஓர் ஆயுதமாகவும் கருவியாகவும் பயன்படும். மீன் கூட்டத்திற்கு ஊடாக வாள் மீன் நீந்திச் சென்று, தலையை இருபுறமும் அசைத்துத் தாக்கி அகப்பட்டதை உணவாகக் கொள்ளும். சேற்றில் புதைந்திருக்கும் சிப்பி போன்றவற்றையும் (SHELL FISH) கிண்டியெடுக்க வாள் பயன்படும்.

வில்லடி மீன்கள் (ARCHE FISH)கண்டல்களிடையே வாழும். சாதாரணமாக இவை சிறிய நீர் அங்கிகளை உணவாகக்கொள்ளும். ஆயினும் இவற்றுக்குப் பூச்சிகளில் ஒரு தனிவிருப்பமுண்டு. இலக்கு வைக்கக்கூடிய தூரத்தில் பூச்சிகள் இருந்தால் நீரை உமிழ்ந்து பூச்சிகளை விழுத்தி உணவாகக்கொள்ளும். ஆறு அடி தூரத்தில் உள்ள ஒரு பூச்சியையும் குறி தவறாது இதனால் விழுத்த முடியும். வசதியான இடத்தில் பூச்சி அமர்ந்திருக்க



செங்கடல் கொட்டும் திருக்கை (STINGRAY) புகைப்படக் கருவியினால் குளப்பப்பட்டு செட்டைகளை அடித்துக்கொண்டு இருளை நாடிச்செல்கின்றது. இவற்றின் உணவு சிப்பிகள் (SHELL FISH). சம்மட்டித் தலையன் சுறாக்களுக்கு இவை சுவையான உணவு.

வேண்டும். ஒரு முறை குறிதவறினால் மீண்டும் முயற்சிக்கும்.

கொட்டும் திருக்கை (STINGRAY)யின் ஆயுதம் அதன் வாலிலுள்ள நச்சு முள். இம்முள் பதினைந்து அங்குலங்கள் வரை நீளமுள்ளதாயிருக்கும்.

நீரில் மின்சாரம் ஒரு சிறந்த ஆயுதம். மின் விலாங்கு (ELECTRICAL EEL) இதைத்தான் பயன்படுத்தும். 500 வோல்ற் (500 VOLTS) மின்சார அதிர்ச்சியை (SHOCK) இதனால் தரமுடியும். நிலத்தில் இந்த அதிர்ச்சி ஒரு குதிரையை வீழ்த்தப் போதுமானதாகும். மின் விலாங்குகள் மெய்யான விலாங்குகளல்ல. கார்ப் (CARP) குடும்பத்திற்குரியவை அவை. மின்சாரத்தைத் தோற்றுவிக்கும் உறுப்பு அதன் வாலில் உண்டு. சிறிய மின்சார சைகைகள் (SIGNALS) அது வாழும் தென் அமெரிக்க ஆறுகளின் கலங்கிய நீரில் வழி காண உதவும். கடுமையான மின் உற்பத்தி இரையை




சிறிய - பல் வாள் மீன் (SMALL - TOOTHED SAW FISH)

மயக்கவோ கொல்லவோ உதவும்.

எமது சிறு விரல் அளவுள்ள ஒரு கூனி (SHRIMP) உண்டு. இது நண்டின் ஒட்டை தனது கொடுக்குகளினால் அடித்து நொருக்கக்கூடியது. (கராட்டி அடி போலும்). இக்கூனியின் பெயர் கும்பிடுபூச்சிக் கூனி (MANTIS SHRIMP). இவற்றின் வில்லுக்கத்தி போன்ற கொடுக்குகள் மிக



பிறான்கா (PIRANKA) வின் பல்லழகு; கண்ணையும் வாயையும் கவனியுங்கள், சிரிப்பது போலில்லையா? உள்ளூர்வாசிகள் பிறான்காவின் பற்களை நச்சம்புத் தலைகளாகவும், கத்தரிக்கோல்களாகவும், சவரக்கத்திகளாகவும் பயன்படுத்துவார்கள்.



நீல மார்லின் (BLUE MARLIN). மார்லின்களிலேயே இதற்குத்தான் நெடிய வேல் ("SPIKE") உண்டு. மரக் கப்பல்களில் 22 அங்குல ஆழத்திற்கு மார்லின்கள் தமது வேல்களைச் செலுத்தியமை பதிவுகளில் உண்டு.

வேகமாகத் தொழிற்படுவதனால் அதிவேகப் படச்சுருள்களிலும் இவற்றின் செயற்பாட்டைப் பதிந்து கொள்ள முடிவதில்லை.

## அதிவேகக் கொலையாளிகள்

கடலில் மிக வேகமாக நீந்துபவையே சிறந்த வேட்டையாளர்களாகவும் அமைகின்றன. பாய் மீனின் (SAIL FISH) வேகம் மணிக்கு 68 மைல்களாகும் (68 M.P.H - 110 Km/H). இது தான் சாதனைவேகம். வாள் மீன் (SWORD

**குகன்**

FISH) மணிக்கு 57 மைல்கள் வேகத்தில் நீந்தும். மார்லின் (MARLIN) 50 மைல்கள் வேகத்தை அடையக்கூடியது. பரக்கூடாக்களும் (BARRACUDAS) வேகமாக நீந்தக்கூடியவை. வேகத்திற்கேற்ப மேற்படி மீன்களின் அமைப்பும் இருக்கும். இத்தகைய மீன்களை வேட்டையாடுவதில் சிலர் (GAME FISHER MEN) மகிழ்ச்சி காண்பதுண்டு. இவற்றைப் பிடிப்பதைக்காட்டிலும் (தூண்டிலில்) அடக்கி வள்ளத்தில் ஏற்றுவதற்கு மிகுந்த




முதலையாரின் பல்லழகு முத்தன்ன வெண்நகையோ, முன்வந்தெதிரெழுந்த சிற்றன்னை இலக்கணமோ? (மாணிக்கவாசகர் மன்னிப்பாராக). நைல்நதி முதலை சீரான பல்வரிசையை விளம்பரப்படுத்துகின்றது.

திறமை வேண்டும். (வெற்றி கண்டால் படம் எடுத்துப் பத்திரிகைகளில் போடுவதிலும், பதனிட்டு கூடத்தில் மாட்டுவதிலும் ஏதோ ஒருவகைப் பெருமை).

## பயங்கரப் பாலூட்டிகள்

கடலிலுள்ள பெரிய இரை கௌவிகளில் சில பாலூட்டிகளாகும். கடல்வாழ் பாலூட்டிகளிலே பயங்கரமானது கொல்லும் திமிங்கிலம் (KILLER WHALE) ஆகும். டொல்பின்களிலேயே இதுதான் பெரியது; வேகமானது; சக்தி வாய்ந்தது. நிறைவுடலி ஆண்கள் 30 அடிகள் வரையும் வளரும். மணிக்கு 25 மைல்கள் வேகத்தில் இரையைத் துரத்தும். இவை பெரும்பாலும் மீன்களையும் கணவாய்களையுமே உணவாகக்கொள்ளும். ஆயி




ஓர் இளம் வில்லடி மீன் (ARCHER FISH) தனது 'சுடும்' திறமையைப் பயிற்சி செய்கின்றது. முழுமையாக வளர்ந்ததும் பல அடிகளுக்கு அப்பால் உள்ள குறியையும் அதனால் அடிக்க முடியும்.

னும் டொல்பின்கள் (DOLPHINS
(SEALS) உணவாகக்கொள்வது
னும், கிடைத்தால் அது விரும்பி

சிறுத்தை சீல் (LEOPARD SE
குயின்களை வேட்டையாடுவதில் சி
பவம் வாய்ந்த சிறுத்தை சீல் பெ
கீழாக நீந்திச்சென்று அதன் கால்
கொள்ளும். பின் நீர்மட்டத்துக்
குயினை வேகமாகக் குலுக்கி, தலை
களையும் கடித்தெறிந்து விட்டு,
விழுங்கும். பெரிய பென்குயின்கள
வரை (EMPERORS AND KING
ரும் வரை குலுக்கும். பின் மார்
மாத்திரம் உண்ணும் எஞ்சியவை
ளுக்கு (SCAVENGERS) உண
கும்.

## உள்நாட்டு நீர் நிலை

உள்நாட்டு நீர் நிலைகளைப்
பிறான்காக்கள்(PIRANHAS)தான்
இவை தென்அமெரிக்க ஆறுகளுக்



பிரகாசமான கிண்ண முருகையுரு
(CUP CORALS). இவற்றின் பரிசக்கொ
தவை. மற்றப்படி, இவை கடல் அனிமனி
அமைப்பை உடையவை. அனிமணிகள
இரையைப் பிடிக்கும். பரிசக் கொம்புகளில்
அகப்பட்டுள்ள மீனைக் கவனியுங்கள்.
டுக்களின் தாக்கத்தினால் மீன் மயங்கி
இறந்து விடும். பரிசக் கொம்புகள் இரை
தள்ளிவிடும்.

இவை சிறியவை. ஆயினும் மிகக் கூ
உடையவை. கூட்டமாகத் தாக்கி
டங்களிலேயே இரையை 'பீஸ் பீஸ
உண்டுவிடும். பின் எலும்புகள்தான்
துடிக்கத் துடிக்க காரியம் நடக்கு
ஒருவகையில் இவை சேவையாற்று
களிலும், வனாந்தரங்களிலும் பிணந்தி
கள் (VULTURES) செய்யும் வேலை
நன்னீர் நிலைகளில் செய்கின்றன. இ
இறக்கும் விலங்குகளை உணவாகக்
மூலம் அழுக்ககற்றுவதுடன் நோய்க



முதலைத்திமிர்க் கௌவிஆமையின் (A
SNAPPING TURTLE)வாய். வட அமெ
யது (அமெரிக்கக்குணம் ஆமையிலு
போலும்). இவை அருமையாக, ஆறுதலா
அதனால் இதனின் ஓட்டில் நீர்த்தாவரங்
துண்டு.

யும் தடுக்கின்றன.

பைக் (PIKE) மீன்கள் வடஅமெரி



அமெரிக்க முதலை (ALLIGATOR)
மையாக விழுங்குகின்றது. அமெரிக்க முதல
நிலங்களில் வாழும். பழைய மர முண்டங்க
மறைந்திருக்கும்.


# க்கும் ஆபத்தான ஆசாமிகள்!

களை (DOLPHINS), சீல்களையும் ணவாகக்கொள்வதுமுண்டு (மனித நால் அது விழும்பிச்சாப்பிடும்).

சீல் (LEOPARD SEALS)கள் பென் வேட்டையாடுவதில் சிறந்தவை. அனு சிறுத்தை சீல் பென்குயினுக்குக் சென்று அதன் கால்களைப் பற்றிக் பின் நீர்மட்டத்துக்குவந்து பென் மாகக் குலுக்கி, தலையையும் கால் த்தெறிந்து விட்டு, முழுமையாக ரிய பென்குயின்களைப் பொறுத்த RORS AND KINGS) தோல் கழ லுக்கும். பின் மார்புத்தசைகளை ன்னும் எஞ்சியவை அழுக்ககற்றிக VENGERS) உணவாகக் கிடைக்

## நாட்டு நீர் நிலைகள்

நீர் நிலைகளைப் பொறுத்த வரை (PIRANHAS)தான் வில்லன்கள். அமெரிக்க ஆறுகளுக்கு உரியவை.



கின்ன முருகையுருப் பிராணிகள் S). இவற்றின் பரிசக்கொம்புகள் தடித் , இவை கடல் அனிமனியின் அடிப்படை டையவை. அனிமணிகளைப் போலவே தும். பரிசக் கொம்புகளின் 'அணைப்பில்' மீனைக் கவனியுங்கள். அழன் மொட் கத்தினால் மீன் மயங்கிவிடும் அல்லது பரிசக் கொம்புகள் இரையை வாய்க்குள்

வ. ஆயினும் மிகக் கூரிய பற்களை கூட்டமாகத் தாக்கி ஒரு சில நிமி இரையை 'பீஸ் பீஸாகக்' கடித்து ின் எலும்புகள்தான் மிஞ்சும். இரை க்க காரியம் நடக்கும். ஆயினும் இவை சேவையாற்றுகின்றன. காடு தரங்களிலும் பிணந்தின்னிக் கழுகு RES) செய்யும் வேலையை இவை ளில் செய்கின்றன. இறந்த மற்றும் குகளை உணவாகக்கொள்வதன் ற்றுவதுடன் நோய்களின் பரவலை



க் கௌவிஆமையின் (ALLIGATOR RTLE)வாய். வட அமெரிக்காவிற்குரி க்குணம் ஆமையிலும் உள்ளது அருமையாக, ஆறுதலாக அசையும்; ் ஓட்டில் நீர்த்தாவரங்கள் வளர்வ

ா.

) மீன்கள் வடஅமெரிக்க, ஐரோப்



லை (ALLIGATOR) இரையை முழு ிறது. அமெரிக்க முதலைகள் சேற்று பழைய மர முண்டங்களுக்கிடையே



ஓர் இன கொட்டும் திருக்கையின் வாலிலுள்ள நச்சு ஈட்டிகள். பயன்படாத போது இவை வாலின் கீழ்ப்புறத்தில் படிந்து கிடக்கும். பயன்படுத்தும்போது நிமிர்ந்து கொள் ளும்.

பிய, ஆசிய ஆறுகளில் பரவலாக உண்டு. இவை மீன்கள், தவளைகள், நனியுண்ணிகள், இளம் நீர்ப்பறவைகள் போன்றவற்றை உணவாகக்கொள் ளும். இவை 60 முதல் 70 வருடங்கள் வரை வாழக்கூடியவை என்று தெரிகின்றது. 150 இறாத் தல்கள் வரை நிறையுள்ளவையாக வளரும்

வடஅமெரிக்க திடீர்க் கௌவி ஆமை (SNAP-

**அங்கிகள் பலவிதம் ஒவ்வொன்றும் ஒருவிதம்**

PING TURTLE) இரைக்காக காத்திருக்கும். இரை அண்மையில் வந்ததும் திடீரெனக் கௌவிப் பிடிக்கும். இதன்பொதுவான உணவு மீன்கள், நீர்ப் பறைவைகள், இறந்த விலங்குகள்.


## முதலைகள்

கடந்த பத்துக்கோடி வருடங்களாக முதலை களில் மிகக் குறைந்த அளவிலேயே மாற்றங்கள்



வரியுள்ள மார்லின் (STRIPED MARLIN) நீருக்கு மேலே முழுமையாகத் துள்ளுகின்றது. கவனமாகப் பார்த்தால் றெமோறா (REMORA) என்ற ஒட்டுண்ணி மீன்கள் இரண்டு இதில் ஒட்டிக்கொண்டிருப்பது புலப்ப டும் (வல்லவனுக்கு வல்லவன்). இவற்றை உதறுவதற் காக மார்லின் நீருக்கு வெளியே குதிக்கின்றது போலும்.

ஏற்பட்டுள்ளது. சுறாக்களைப்போல முதலைக்குடும் பமும் இயற்கையின் மிக வெற்றிகரமான குடும் பங்களில் ஒன்றாகும். இவை நகருயிரிகள். ஆயி னும் இன்றுள்ள நகருயிர்களைக் காட்டிலும் இவை கூடுதலாக டைனோசோர்களுடன் ஈட்டமுள்ளவை யாகும். தரையில் உறுதியான கால்களின் உதவி யுடன் நடப்பது மாத்திரமல்லாமல் ஆச்சரியப்படும் வகையில் விரைவாக ஓடவும்முடியும். முதலைக ளின் கண்களும் மூக்குத் துவாரங்களும் தலையில் மேற்பக்கமாக வைக்கப்பட்டிருக்கும். அதனால் இவற்றினால் நீரில் அமிழ்ந்திய நிலையில் சுவா



பெரிய பரக்கூடா (GREAT BARRACUDA) நீரில் தொங்கிக்கொண்டிருக்கின்றது (அசையாமல் இடை நீரில் இருப்பது). மீன்களின் வரவிற்குக் காத்திருக்கின்றது. வந்தால் வேட்டை.

சிக்கவும் முடியும். பார்க்கவும் முடியும். வெளியே தெரியும் மூக்குத் துவாரங்களுக்கும் கண்களுக்கும் கீழே பெரியதொரு உருவம் மறைந்திருப்பது புலப் படுவதில்லை. சில முதலையினங்கள்(GAVIALS) மீன்களை மாத்திரம் உணவாகக் கொள்ளும். இவற்றின் மூஞ்சி ஒடுக்கமானதாக, நெடியதாக விருக்கும். மற்றும் முதலையினங்கள் நீர்க்கரையில் 'பதுங்கித்' 'தவ'மிருக்கும். நீர் அருந்த வரும் விலங்குகள் எதுவாகவிருந்தாலும் அகப்பட்டதை உணவாகக்கொள்ளப் பின்னிற்பதில்லை. சில இனங்கள் இரையை நீருக்கடியில் சொருகி வைத்து அது அழுகி மெதுமையாக வந்தபின் உண்ணும்.

முதலைகளுக்குச் "சூரியக்குளியல்" (SUN BATHING) மிகப்பிடித்தமான ஒரு விடயம். கார ணம் அது அவற்றின் உடலை வெப்பமாக வைத்தி ருக்க உதவும். இது உடல் தொழிற்பாடுகளுக்கு உதவும். உடல் வெப்பம் மிக அதிகரிக்கும்போது அவை நீரில் நழுவும். உடலைக் குளிரவைப்பதற்கு குளிர்ந்த இரவுகளில் அது நீரிலேயே நித்திரை கொள்ளும்.



பயங்கரவாதி முட்டையிலிருந்து வெளியேறுகின்றார். முட்டையிலிருந்து வெளியேறிய உடனேயே குட்டிகள் தமதுணவைத் தாமே வேட்டையாடிப் பெற்றுக்கொள் ளும். ஆரம்பகால உணவு ஈக்கள், சிறிய மீன்கள், நீர்ப்பற வைக்குஞ்சுகள் போன்றவை. மூஞ்சியின் முனையில் உள்ள ஈயைப் பாருங்கள், வேவு பார்க்கின்றாரோ; உல கத்தை முதன் முதலாகத் தரிசிக்கும் முதலைக் குட் டிக்கு ஈ முதலுணவாகப்போகலாம்.

முதலைத்தாய்கள் மிகுந்த புத்திர வாஞ்சையு டையவை. உக்கும் தாவரப் பொருள்களைக் கொண்டு ஒரு மேடு அமைத்து அதனுள் முட்டை களையிட்டு. முட்டைகளுக்குப் போதிய உஷ்ணம் கிடைப்பதை உறுதிசெய்துகொள்ளும். குட்டிகள் வெளியேறியதும் கீச்சுக்குரலில் சத்தமிடும். உடனே தாய் குப்பை மேட்டைக்கலைத்து குட்டிகளை வாயினால் கௌவிக்கொண்டு சென்று நீரிலிடும். கிட்டத்தட்ட இரண்டு வருடங்கள்வரை குட்டிக ளுக்கு ஏனைய இரைகௌவிகளிடமிருந்து பாது காப்புக்கொடுக்கும்.

## பரிசக்கொம்புகளின் மகாத்மியம்

சிலந்தரேற்றா கூட்டத்திற்குச் சேர்ந்த விலங்குக ளுக்கு எறிகணைகளுடன் கூடிய பரிசக்கொம்பு கள் உண்டு. கடல் அனிமணிகள் பார்ப்பதற்கு




நீர்க்கரையில் ஒரு கடற் சிங்கத்தை (SEA LION) ஒரு கொல்லும் திமிங்கிலம் பிடிக்க முயற்சிக்கின்றது (முடிவு கமெராக்காரனுக்குத்தான் தெரியும்)


அழகிய பூக்கள் போலிருக்கும். ஆனால் அவற் றைத் தொட்டால் பரிதாபமான விளைவுகள் ஏற்ப டும். கடல் அனிமணிகள் நிலையூன்றிய வாழ்க் கைக்குரியவை. மிக ஆறுதலாகத்தான் இவை அரக்கி இடப்பெயர்ச்சி நிகழ்த்தும். சொறிமுட்டை நீந்தக்கூடியது. ஆழமான பகுதிகளுக்கும் நீந்திச் செல்லும். பைசேலியா நீரின் மேற்பரப்பில் மிதந்து வாழும். நீரோட்டமும், அலைகளும், காற்றும் இவற் றின் இடப்பெயர்ச்சிக்கு உதவும். *




ஒரு நைல்நதி முதலை பெரிய விலங்குகளைச் சமா ளிப்பதற்குக் கையாளும் 'நீருக்கடியிலான உருளல்' ("UNDER WATER ROLL") முறையைச் செய்து காட்டு கிறது. இங்கு அகப்பட்டிருப்பது ஒரு வரிக்குதிரை. அரு கில் பிறிதொரு முதலை நடவடிக்கையை நோட்டம் விடு கின்றது.




ஒரு பூரணவளர்ச்சியடைந்த ஆண் கொல்லும் திமிங்கிலத்தின் (KILLER - WHALE) கம்பீரமான முதுகுப்புறச் செட்டை. ஏனைய கடல் வாழ் பாலூட் டிகளைப் போல இவையும் மூச்சுவிட நீரின் மேற் பரப்பிற்கு வரவேண்டும்.



பைசேலியா (PHYSALIA) என்ற போர்த்துக் கேயப் போர்க்கப்பல்(PORTUGUESE MAN - O - WAR) அயன மண்டலக்கடல்களுக்குரியது. மிகவும் விடமுள் ளது. பரிசக் கொம்புகளிலிருந்து ஒரு மீன் தப்பியோடு வதைக் கவனியுங்கள். (பைசேலியா பற்றிய விவரம் தனிக்கட்டுரை வாயிலாக அறிந்திருப்பீர்கள்.)



பரக்கூடாக்கள் (BARRACUDAS) கூட்டமா கவே வேட்டையாடும். பல மேற்பரப்பு நீருக்குரிய மீன்களைப் போல, இவற்றின் மேற்பக்கம் கருமையான உலோக நீல நிறமாகவும், கீழ்ப்பக்கம் வெள்ளி நிறமாகவு மிருக்கும். இது பாதுகாப்பிற்குரிய ஓர் இசைவாக்கம். கோடுகள் பக்கவாட்டில் அவற்றின் புறவரியைக் குழப்பும்.



சிங்கப்பிடரிமயிர் சொறிமுட்டை. (LION'S MANE JELLYFISH). வடபுல சமுத்திரங்களின் குளிர்ந்த நீருக் குரியது. உலகிலேயே மிகவும் நஞ்சுள்ள சொறி முட்டை. இதன் பரிசக்கொம்பு இலேசாகப்பட்டாற் போதும்; சொறி, எரிச்சல், வீக்கம், தசைப்பிடிப்பு (MUSCLE CRAMPS) போன்ற குணங்குறிகளைத் தோற்றுவிக்கும்.

# பஞ்சம் பட்டினி வந்தவேளைகளில் அஞ்சேல் எனத் தஞ்சம் தந்த பனை

**ஐம்பது, அறுபது வருடங்களுக்கு முந்திய யாழ்ப்பாணம் பெரும் விவசாய பூமியாகச் செழிப்புற்றிருந்தது. அன்றைய விவசாயிகளின் தொழில் முயற்சிக்கும் உழைப்புக்கும் பல வகைகளிலும் உதவியது எமது மண்ணின் கற்பகதருவான பனை.**

நவாலியூர் சோமசுந்தரப் புலவர் அவர்களால் எழுதப்பெற்ற 'இலங்கை வளமும் தால விலாசமும்' எனும் நூல் பனையினது பயன்கள் நூற்றெட்டு எனத் தெரிவிக்கின்றது. இப் பயன்கள் முழுவதையும் அனுபவித்த வரலாற்றுப் பெருமைக்குரியவர்கள் யாழ்ப்பாணத்து தமிழ் மக்கள். பனை அவர்களது வாழ்வில் இரண்டறக் கலந்த நிலையில் விளங்கியது. எதற்கும் பிறர் தயவை எதிர்பாராதவர்களாகத் தன்மானத்துடன் வாழ மக்கள் பனையையே நம்பினர். அதுவும் அவர்களைக் கைவிடவில்லை. இதனாற்றான் கற்பக தரு எனப் பனை போற்றப்பட்டது.

குடாநாட்டினர் அன்று பனை வளத்தை எவ்வாறு எல்லாம் பயன்படுத்தினர் என்பதை இந்த நூற்றாண்டின் இளம் சந்ததியினர் அறியார். விவசாயிகள் பனந்துலாவின் மூலம் பயிர்களுக்கு நீர்ப்பாசனம் செய்த காலத்தில் இறைப்பதற்குப் பெரிய ஓலைப் பட்டைகளையே பயன்படுத்தினர். பனம் மட்டை நாரினால் பின்னப்பட்ட கொடிகளே துலாக் கொடிகளாயின. துலாவினது ஆடுகால்களில் பனம் பேண்தடிகளும் நார் கொண்டே பிணைத்துக் கட்டப்பட்டன. வீட்டுத் துலாக்களுக்குச் சூரைக் கொடிகளைப் பயன்படுத்திய காலத்தில் கொண்டடியுடன் கொடியைக் கட்டுவதற்கும் நாரே உபயோகிக்கப்பட்டது. துலாவின் அச்சுலக்கை நென்புகளும் பனையினால் ஆனவை.

வயல்களில் நீர் நிலைகளில் இருந்து நீரைக் கொண்டு சென்று மிளகாய், கத்தரிச் செடிகளுக்கு ஊற்றுவதற்கும் நடுவில் மரக்கைப் பிடியுடன் கூடிய ஓலைப் பட்டைகளே பாவிக்கப்பட்டன.

மக்களது குடியிருப்புக்கள் அனைத்தும் பனை ஓலைகளால் வேயப்பட்ட குடிசைகளாக இருந்த காலம் ஒன்றிருந்தது. வீடு கட்டுவதற்குப் பனை. அவற்றை வேய்வதற்குப் பயன்படுத்தப்படும் ஓலைகளைக் கட்டுப்போடுவதற்கு பனம் நார். வளவு வேலிகளை அடைப்பதற்கு பனம் ஓலைகள், மட்டைகள். அவற்றை வரிவதற்கும் நார்களே பாவிக்கப்பட்டன. வீடுகளில் பாவனையில் இருந்தவை பனையிலான ஏணிகள். எணிகள் போன்றே வண்டில்களில் துலாக்களும் பனையினால் செய்யப்பட்டன.

## கோர்க்காலிகளில் ஓலைக் கூடைகள்

நெல், தினை, குரக்கன், ஒடியல், மரவள்ளிச் சீவல் போன்றவற்றைச் சேமித்து வைப்பதற்கு விவசாயிகள் பாரிய ஓலைக் கூடைகளைப் பயன்படுத்தினர். இக்கூடைகள் களஞ்சியக் கொட்டில்களில் கோர்க்காலிகளில் வைக்கப்பெற்றிருக்கும். இவற்றிலிருந்து பொருள்களை மீளப்பெறும் பொழுது ஒருவர் எறி உள்ளே குதிக்க வேண்டிய அவசியம் ஏற்படும்.

விவசாய பொருள்களைக் காயப் போடுவதற்கு கதிர்ப்பாய்கள் பாவனையிலிருந்தன. இவை சுமார் இருபது அடி நீளமும், பத்து அடி அகலமும் கொண்டவை. தினை சூடு அடிக்கும் காலங்களில் கதிர்ப் பாய்கள் மிகுந்த உபயோகத்திலிருப்பவை. இப்பாய்களைப் பரப்பி அவற்றின் நடுவே கட்டில் ஒன்றை வைத்து அதன் மேல் கதிர்களுடன் கூடிய வைக்கோல்களை பிடிப்பிடியாக எடுத்து அடித்து உதறும் பொழுது தினை மணிகள் கட்டிலின் உயரமளவிற்கு குவிவது அன்றைய நாள்களில் அழகியதோர் காட்சியாகும். தினை மணிகளைப் பனை சுளகு கொண்டு தூசு நீக்கிச் சுத்தம் செய்வர்.

## பாய் ஆசனம்

எமது முன்னோர்களால் கதிர் பாய்கள் கல்யாண வீடுகளில் பந்தல்களுக்கும் பயன்படுத்தப்பட்டன. இவற்றின் மேல்தான் சாய ஓலைப் பாய்கள் ஆசனங்களாகப் போடப்படும். திறந்த வெளி அரங்குகளில் வள்ளி திருமணம், அரிச்சந்திர நாடகங்களை இரவு முழுவதும் மக்கள் அமர்ந்திருந்து பார்ப்பதற்கும் பயன்படுத்தப்பட்டவை இப்பாய்களே. இன்று இவற்றை எங்கே பார்க்க முடிகிறது?

எமது பூட்டன், பூட்டிகள், பேரன் பேர்த்திகள் பனை ஓலைப் பாய்களில் படுத்து உறங்கினர். கைக் குழந்தைகளை மருத்தெண்ணை பூசி கிடத்துவதற்குச் சிறு சிறு குட்டிப் பாய்களைப் பாவித்தனர். ஓலைக் கடகங்கள், பெட்டி வகைகளின் பாவனையை இன்றும் அனைவரும் அறிவர். யாழ்ப்பாணத்துப் பனங்கட்டிகள் மிகமிக பிரசித்தி வாய்ந்தவை. இவை ஓலைக் குட்டான்களிலிட்டே சந்தைப்படுத்தப் பட்டன. இளம் பெண்களுக்கு அழகிய வட்ட வடிவ ஓலைத் தொப்பிகள் அழகிற்கு அன்றும் இன்றும் அழகூட்டுபவை. மோட்டார் சைக்கிள் காரர்களின் தலைக்கவசம் போன்று கடினமாகத் தயாரிக்கப்பட்ட பனை ஓலைத் தொப்பிகள் அந்தக் காலக் கமக்காரர்களை மழை வெயிலில் இருந்து பாதுகாத்தன.

திரு கோவிற் கடாடங்களில் தொங்க விடப்பட்ட திருநீற்றுக் குட்டான்களும் பனை ஓலைப் பொருள்களே.

வீட்டுக்கு வீடு கமத்துக்குக் கமம் கமக்காரர்கள் எட்டுக்கும் குறையாத பசுக்களை கட்டி வளர்த்த ஒரு காலத்தில் இலட்சோப இலட்சம் பசுக்களுக்குப் பனை ஓலைகளே உணவாகின. ஓலைக் கழிவுகள் கமங்களை வளம்படுத்தின.

ஆதிகாலத்தில் பனை ஓலைக் குருத்துச் சட்டங்களிலேயே நூல்கள், வாகடங்கள், சாதகங்கள் அனைத்தும் எழுத்தாணி கொண்டு எழுதப்பட்டன. இன்று கூட ஏட்டுச்சுவடிகளாக இத்தகைவற்றைப் பலர் பாதுகாத்து வைத்துள்ளனர்.

பனைகளின் அரசன் சிவதர்ம வள்ளல் க.கனகராசா அவர்கள் தாம் வாழ்ந்த இறுதிக் காலம்வரை சிறுவர்களுக்கான அரிச்சுவடிகளை பனை ஓலைச்சட்டங்களில் அச்சிட்டு விஜயதசமி நாள்களில் வித்தியாரம்பத்தின் பொருட்டு விநியோகித்தமை அந்தப்பழைய பாரம்பரியங்களை நினைவுபடுத்தி ஏற்றிப்போற்றுவதற்கேயாம்.

## பனாட்டும் ஒடியற்கூழும்

பண்டைய கால மக்கள் பனம் பழங்களில் ஒன்றைத்தானும் அவம் போக விட்டிலர். அவற்றை விரும்பி உண்டனர். பனம் பழங்களைப் பிசைந்து சாற்றைக் கறந்து துணிகள் மூலம் பனாட்டை தும்பு நீக்கி வடித்தெடுத்து நாளாந்தம் பாய்களில் ஊற்றிக் காயவிடுவர்.

ஈற்றில் அரை அங்குலத் தடிப்பில் சுமார் ஓர் அடிச்சதுரமாக வெட்டி எடுக்கப்படும் பனாட்டுத் தட்டுக்கள் அன்றெல்லாம் சந்தைப் படுத்தப்பட்டன. பழங்காலங்களில்

## குடாநாட்டு மக்களுக்கு உணவு முதல் கல்விவரை கைகொடுத்த கற்பகதரு

வீடுகள் தோறும் பனாட்டுப்பாய்கள் பரண்களில் காய்ந்து கொண்டேயிருக்கும். பனாட்டைத் தயாரிக்கவும், விரும்பி உண்ணவும் சந்தைகளில் வாங்கிச் செல்லவும் மக்கள் தயாராக இருந்தனர். கமங்களில் காலை வேளைகளில் கமக்காரர்களுக்குப் பனாட்டும் பழையதுமே உணவாகின. எத்தகைய உணவையும் இழப்பமாகக் கருதாத காலமாக அந்தக் காலம் விளங்கியது.

பனாட்டைப்போல ஒடியல் மாப் பிட்டையும், கூழையும் மக்கள் ஆகக் குறைந்தது ஒரு வேளை உணவாகப் பயன்படுத்தினர். புழுக்கொடியலும் தேங்காய்ச் சொட்டும் மாலை வேளை தீன்பண்டமாயிற்று. அசைவ உணவுப் பிரியர்களுக்கு கடல் உணவு கலந்து அவித்த ஒடியல் பிட்டு மிகவும் உவப்பான உணவாயிற்று. இத்தகைய பல உணவு முறைகளால் முதியவர்கள் தொண்ணூறு வயது வரை ஒரு பல்லைத் தானும் இழக்காது வாழ்ந்தமை இன்று வரலாறாகிவிட்டது.

## கனடாவில் கூழ் விளம்பரம்

கனடாவிற்கு அண்மையில் சென்றிருந்த சமயம் அங்குள்ள தமிழ்ப் பத்திரிகைகளில் ஒடியற் கூழுக்குத், தேவையான சகல பண்டங்களையும் தம்மிடம் பெற்றுக் கொள்ளலாம் என வர்த்தக நிலையங்கள் பலவும் அடிக்கடி விளம்பரம் செய்ததைப் பார்த்து வியந்ததுண்டு. இப்பொழுது யாழ்ப்பாணம்தான் பாணை உணவாகக் கொள்ளும் நவநாகரிகமான சமுதாயமாகப் பல மாற்றங்களைக் கண்டு கொண்டிருக்கின்றதே. பதநீர், பனங்கட்டி, பனஞ்சீனி, பனங்கற்கண்டு அன்றைய நாள்களில் மருந்துக்கும் விருந்துக்கும் பயன்பட்ட பொருள்கள். இவற்றின் பெறுமானத்தை ஆயுள்வேத வைத்தியர்கள் அதிகம் அறிந்தவர்களாக விளங்கினர். பனங்கல் கொண்டு தயாரிக்கப்படும் காடி எனப்பட்ட பிரசித்தி வாய்ந்த கலவை இளம்பிள்ளைகளது மஞ்சள் காமாலை, மகோதரம், பேத்தை வயிற்று நோய்களைத் தீர்க்கும் மருந்தாயிற்று. குடல் உபாதைக்காரர்களுக்குச் சிறந்த பகல் உணவாக ஒடியற் கூழ் சிபார்சு செய்யப்படுவதுண்டு.

பனை மக்களது அன்றாட எரிபொருள் தேவைகளையும் பூர்த்தி செய்ய வல்லதாக விளங்கியது. புகையிலைச் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்குப் பனம் ஊமல் கொட்டைகள் என்றும் அத்தியாவசிய எரிபொருளாயிற்று.

கடுங் கோடைகாலங்களில் பனை ஆண்களுக்குத் தாகசாந்தி அளிக்கவும் தவறியதில்லை. அது சோம பானத்தையும் கொடுத்தது.

முதியவர்கள் உபயோகித்ததும் வெள்ளிப் பூண் போட்ட பனம் ஊன்று கோல்களைத்தான்.

**செல்லப்பா நடராசா**

நாட்டிற் பஞ்சம், பசி, பட்டினி ஏற்பட்ட காலங்களில் எல்லாம் யாழ்ப்பாண மக்களுக்கு அஞ்சேல் எனத் தஞ்சம் அளித்தவையும் பனைகளே.

இப்புதிய நூற்றாண்டில் நாம் பனை வளத்தை அழியவிடாது பெருக்கி வாழ்ந்தால் அது பலவகைகளிலும் பொருளாதாரத் துறையிலும் ஆயம் அளிக்கும் வல்லமை மிக்கது என்று நம்புவோமாக! *

---

# அனிச்சம் பூக்கள்

எங்கு அந்தத் தவறு நிகழ்ந்தது? அன்பு மகளின் அறிவுக்கு அறியாமலே பெற்றதாயே காரணமாகி விட்டாளா என்ன? கேட்ட செய்தியை நம்ப முடியாமலிருந்தது. சகல உணர்வுகளும் மரத்துப் போய் விட்டதா? அழக்கூடத் தோன்றாமல் நடுக் கூடத்தில் உட்கார்ந்திருந்தாள் கண்ணம்மா. ஏற்றாலும் ஏற்காவிட்டாலும் அழுதாலும் அழாவிட்டாலும் நிகழ்ந்துவிட்டது என்னமோ இறப்புத்தான். ஆனாலும் அவளது அன்பு மகள் 'அது' ஆகப் போகப்படப் போவதில்லை. அழகான ஒரு பட்டுப் புடைவையில் அவளை நடுவீட்டு வாங்கில் எவரும் வளர்த்தி விடப் போவதில்லை. அதைப் பார்த்த கையோடு ஈஸ்வரி பாட்டி "கண்ணூறு பட்டெல்லோ... என்ரை கண்ணைம்மான்ர செல்ல மகள்.." என்று ஒப்பாரி தொடங்க இன்னொருத்தி 'காணாத தேசத்திலை... சாவோடை போனாளே..." என்று நீட்டி இழுக்கப் போவதில்லை. ஆனாலும் முடிந்து போயிற்று. எல்லாமே முடிந்து போயிற்று. எவ்வளவு கசப்பான உண்மை? ஆனாலும் உண்மை தான். இதோ விரித்துக் கிடக்கிற சிறுதுண்டில் கொஞ்சம் கிறுக்கலான கையெழுத்தில் அந்த டெலிபோன் மெசேஜ்...சாட்சி சொல்கிறதே அன்பு மகள் செத்துப் போனாள் என்று.

இதுவரைகாலமும் இவள் மட்டும் கூட்டித் துடைத்தும் பேணும் வீட்டில் இன்றுப் மூன்று பெண்கள் கூடியிருந்தார்கள். 'நல்லாய்த் தெரியுமாமே?' ஒருத்தி மற்றவளிடம் கிசுகிசுத்தது சகலர் காதிலும் விழுந்தது. நேரடியாய்க் கண்ணம்மாவிடம் கேட்கப் பயந்தார்கள். மௌனமாய் இறுகிப்போய் உட்கார்ந்திருக்கும் அவளின் மௌனத்தைக் குலைத்து அழச்செய்யும் துணிவு இல்லாமல் அமைதியாய் இருந்தார்கள்.

"ஓ தெரியுமாம்! அவன் பாடுண்ணை மோன் தானாம் 'தூர்க்கா' வில் சொல்லி விட்டவன். அவையள் அறிவிக்கயில்லையாம்" முதல் கேள்வியின் பதிலும் சகலருக்கும் கேட்டது.

அது ஏன்? இந்த இடைத்தர வயது தாண்டிய பெண்கள் அழுவதில் சரி, அழாதிருப்பதிலும் சரி. ஒரு விஷயம் கதைப்பதிலும் சரி இரகசியம் பேண முடியாதவர்களாய் இருக்கிறார்கள்?

"எவையள்?" மெல்லக் கதைக்குள் புகுந்த மூன்றாம் பெண்ணை அலட்சியப்படுத்தி மறுகதைக்குத் தாவினார்கள்.

"அதென்ன பூப்போல தாங்கி வளர்த்த ஒரேயொரு பெட்டையெல்லே...? ஒரு கஷ்டமும் தெரியாம வளர்த்து...கடைசியிலை..." இவளுக்கும் கேட்டது உண்மைதான். ஒரு சிறுகஷ்டமும் தெரியாமல் வளர்த்த மகள். கணவனை இழந்த பிறகு வறுமை வாசற் கதவைத் தட்டிய சத்தம் செல்ல மகளுக்குக் கேட்க இவள் விட்டதில்லை. துன்பங்களைத் தானே முழுதும் தாங்கிக் கொண்டு இன்பங்களை மட்டும் மகளின் வாழ்வுக்குள் அனுமதித்தவள். கசக்கும் மாத்திரைகள் மகளுக்குக் கொடுக்க வேண்டிய ஒரு பொழுதில் தான் கண்களில் கண்ணீர் பாய்ச்சிய நாள் ஞாபகத்தில் வந்தது. வெளியே பார்வை இலட்சியம் மற்றுத் தெறித்தது. மல்லிகைப் பந்தல் கண்ணில் பட்டது. மகள் வைத்தது. மல்லிகையாகத்தான் மகளும் இருந்தாள். முட்களோடான ஒரு ரோஜாவாக அல்லது நெருஞ்சியாகவேனும் வளர்ந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். சமூகம் முள்ளாய்க் கிடக்கும்போது பிள்ளையை மல்லிகைப் பாதங்களோடு வளர்த்தது தவறு. ஒரு மிருதுவான, அதிரத் தெரியாத சீதமாக, பலவீனமான பெண்ணாக, பாசங்களில் மூச்சடைத்துப் போகின்ற பெண்ணாக வளர்த்து விட்டதில்தான். 'இது' இன்று நிகழ்ந்ததா? மீண்டும் தன்னைத் தானே கேட்டுக் கொண்டாள்.

இந்த வாழ்வு கண்ணம்மாவோ அல்லது மகளோ எவரும் எதிர்பார்த்ததில்லை; வேண்டி வந்ததில்லை. ஒரு வேபிள் எரிக்கிற மதியம் விலகிய பொழுதில் தூரத்து உறவுக்கார மாமி வந்திருந்தா. 'சண்' அமெரிக்காவிலிருந்து ஏப்ரல் ஹொலிடேயில வருவதாயும், அமெரிக்காவில 'ஓயில் பக்றி' ஒண்டில் வேர்க் பண்ணுறதாயும், 'மரேஜ் செட்டில்' பண்ணி வைச்சா வந்து ஓகே பண்ணுவதாயும் சொல்ல... இவளுக்குள் மனவீணை அதிர்ச்சித் தந்தி மீட்டிற்று. கிராமப் புறத்தனம் முற்றுமாய்த் துடைக்கப்பட்டுவிட்ட மாமி.

இவள் கேட்காமலே மாமி சொன்னா "என்ர 'சண்' வந்து... அனேகமாய் இங்கிலிஷ் யூஸ் பண்ணுறதில...போய் இப்ப ஒம்பது வருஷமாகுது... தமிழ் வேர்ட்ஸ் மறந்து போச்சுதாம் அவனுக்கு...." மனித



பரிணாமத்தோடு இயந்திரங்களை இறுகப் பற்றியபடி முன்னேறுகின்ற மேலைத்தேசங்கள்...அரசியல் தீயில் கருகும் அருமையான எங்கள் தேசம்.. மகளாவது நிம்மதியாய் வாழ்ந்தாலென்ன? கண்ணம்மா சம்மதித்தாள். அவளுக்குத், தெரியும், அம்மா பேச்சு எப்போதுமே மகளாலும் சம்மதிக்கப்படும் என்று.

"வெள்ளையளைச் செய்திட்டு ஒரு கற்றின்...பைட்டான லைவ்வை எக்ஸ்பெற் பண்ண ஏலாதுதானே", மேலும் ஆங்கில தமிழ்க் கலப்பில் கொஞ்சம் கதைத்து மாமி விலகினா.

பிறகு வந்த சித்திரை மாதத்தில் வந்தார்கள். தோற்றம் பொருத்தத்தில் தாய்மனம் பூரித்தது. ஊர் மூக்கில் விரல் வைக்க அவன் மாங்கல்யம் சூட்டினான். சீதனம் பற்றிச் சிலர் கதைத்தபோது "டௌறியா... நோ டௌறி.." பின் கழுத்துத் தடவி கொஞ்சம் ஸ்ரைலாய் தோள் குலுக்கிச் சிரித்தான்.

திருமணத்தில் இவளது நாலு பவுண் சங்கிலி தொலைந்தபோது கூட "நாலுபவுணா...நோ ப்ரொப்ளம்" என்றான். மீண்டும் அதே தலை சாய்த்த சிரிப்பு, தோள் குலுக்கல். மாப்பிள்ளை சகலதையும் 'சிம்பிளாய்' எடுப்பவர் என்று பந்திக்கதை, பரிமாறப்பட்டது. வாழ்வையும் கூட 'சிம்பிளாய்' எடுப்பான் என்பது அப்போது புரியாமல் போயிற்று.

இருவரும் பறந்த பின்...ஒருவாறும் முடியா முரண்பாடுகள்தொடங்கின. இங்கு பழக்கப்பட்டபடி முழுமையாக எதற்கும் அம்மாவைக் கேட்க முடியவில்லை. பாசம் முழுதாய் அவளில் படிந்தும் அலசும் புரியும் நிலையில், அவ்வன் இல்லை. ஓயாத உழைப்பு, நாகரிக நுனி உதட்டுப் பேச்சுக்கள், அன்புத் தேடல்,அமைதியான வாழ்வு என அதிக வீதத்தில் மாப்பிள்ளையும் பெண்ணும் முரண்பட்டார்கள். மோப்பக்குழையும் அனிச்சம்பூ செயற்கையான பிளாஸ்ரிக் மலர்களிடையே விழுந்திருக்கிறது. மாற்றம் அல்லது மரணம்தான் தீர்வானது. இவள் - கண்ணம்மா - பயந்த நாள்களில் மாமி சொன்ன சேதி காதில் விழுந்தது.

"ஐடியல் வேர்ள்டுக்கும் றியல் வேர்ள்டுக்குமான முரண்பாட்டை மருமகளுக்கு 'மனேஜ்' பண்ணத் தெரியவில்லை.. 'சண்'ணின்றை லைவ்வே இதால 'டல்லாப்' போகிறது" என்றாள்...இப்போது தீர்வாக இறப்பு அமைந்திருக்கிறது.

"அம்மா" செல்லமகள் காதுக்குள் அழைப்பது போலிருந்தது. இவள் குரல் கேட்டால் அம்சத்வனி ராகம் ஏங்கும் நிச்சயமாய்.அத்தனை மிருதுவான மென்காற்றுச் சேர்க்கையாள... குரல் இனிமேல் கேட்கப் போவதில்லை.. இளநீலப் பூக்கள் சிதறிய சட்டையில், மார்போடணைத்துப் பாலூட்டிய பொழுதுக்கு மனம் போய் நின்றது; அங்கிருந்து ஞாபகச் சுவடுகளில் மிதித்து, மிதித்து நினைவு பாதையில் நடந்தது. பிரிவின் பிறகு ஒவ்வொரு சிறு சொல்லும் சிறுசெயலும் வலிமையாய் இதயங் கிழிப்பதேன்? அர்த்தமில்லாத மகளது செயல்களைக் கூட அர்த்தம் கண்டு பிடித்து அழ வேண்டும் போலிருந்தது. ஆனாலும் வெறித்த பார்வையோடு உறைந்து போயிருந்தாள்.

"ராட்ஸஸி! ஒரு துளிக் கண்ணீர் இல்லையடியப்பா..." நாளை இவளைப்பற்றி ஒருவேளை ஊர் கதைக்கும். சமூகம் கழுகாகக்காத் திருக்கிறது, - விமர்சனங்கள் என்கின்ற கொடிய நகங்களோடு. வயிறு கிழிந்த அணிற் குஞ்சாய் இந்த நகங்களுள் இவளும் நாளை சிக்கிக் கொள்ளலாம்.

**ச.சாரங்கா**

"எனக்குப் படுக்கோணும் போல இருக்கு" முதன்முதலாக வாய்திறந்தாள் கண்ணம்மா. எவரது பதிலும் வேண்டாது உள்ளே போய்ப் படுத்துக் கொண்டாள். மலர்ச்சியாய்ச் சிரிக்கிற மகளின் புகைப்படத்தைச் சேர்த்து அணைத்துக்கொண்டாள்.. உறவுகள் அல்லது உறவுகள் போன்றோர் இயல்பாய் வீட்டினுள் பிரவேசித்தார்கள். சோப், விளக்குத் திரி, சோப்பி, சகலதும் சொந்த வீடு போலப் பாவித்துத் தேடினார்கள்.

"அது வாய்ப்பில் இருக்கு அந்த நாள் தொட்டு பூட்டிப் பூட்டி வைச்ச வளர்த்திட்டு.." தேநீர் அல்லது

(XV ஆம் பக்கம் பார்க்க)

# வெள்ளை ரோஜா முள்

## பாகம் II

மு.சிவநேசன்

**10** மேவின் நிதி நெருக்கடியில் இருந்தான். டானியலை வைத்துப் பராமரிப்பது அவனைப் பொறுத்தவரை சுமையாகவே இருந்தது. மாதக்கணக்கில் பிரச்சினை இழுபடுகின்றது. மெல்லவும் முடியவில்லை; விழுங்கவும் இயலவில்லை.

கடன் கேட்டு மேனிடம் வந்தான் மேவின். மேன் அன்று மிகவும் பிஸியாகஇருந்தான். பாதாளத்தில் பழைய வங்கி அதிகாரி கிடக்கிறார். இரவுக் கடமைக்கோ வங்கிக்குப் போக வேண்டும். டெக்னிக்கல் நிலைமைகளைச் சரி பார்க்கவேண்டும். இடையில் இவன் வேறு தொல்லை என்று அலுத்தான்.

என்றாலும் ஆபத்துக்கு உதவியாக இருக்கும் என மேவினை ஆதரவுடன் அணுகினான் மேன். சில நிமிடங்களை அவனுக்காக ஒதுக்கி விசாரித்தான்.

தனது பிரச்சினை முழுவதையும் மேனிடம் கொட்டி விட்டால் ஏதும் விடிவு கிடைக்குமோ என்று சிந்தித்தான் மேவின். தயங்கித் தயங்கிச் சொல்லி முடித்தான்.

மேனின் நிலைமையைச் சொல்லவா வேண்டும்? டானியலை அவன் கேட்கும் இரண்டுலட்சத்துக்கு வாங்கி விடலாம். ஆனால் அவனது கணக்கில் இருக்கும் பணத்தைக் காசாக்க முடியாதே.

காணாமற் போனவனின் காசோலையுடன் எப்படி வங்கியை அணுக முடியும்?

மேவின் கெஞ்சினான்.

சரி சரி டானியல் எங்கே? விவரம் சொல்லித் தொலை. நாளை முடிவு சொல்கிறேன் என்றான் மேன். என்னிடம் இரண்டு லட்சம் டொலர்களைத் தந்துவிட்டு அதற்கான ரசீதுடன் ஜோனிடம் போய் டானியலை மீட்டுவா என்றான் மேவின்.

விறைத்து நின்றான் மேன்.

இவனுமா ஜோனிடம் போனான்?

இப்போது கரோலும் அங்கே, டானியலும் அங்கே, மைக்கும் அங்கே. மேவின் ஜோனிடம் போனால் என் கதி? எல்லாம் வெளிச்சப்போம்?

எதைச்செய்வது? எதைவிடுவது? தவித்தான் மேன்.

அதற்கிடையில் தொலைபேசி அலறியது.

ஹலோ!

பகீரென்றது. பொலீஸின்துப்பறியும் பிரிவினர் - நாளை காலை எட்டு மணிக்கு வரும்படி அவனுக்கு மரியாதையாக அழைப்பு விடுத்திருக்கின்றனர். கலந்துரையாடலாம்!

தொலைபேசியை வைத்ததும் மீண்டும் அது ஒலித்தது.

ஹலோ!

றொபேட் ஹியர்!

அப்பாடா! நீயா? என்னடாப்பா பரோ ஏதோ என்று பயந்துபோனேன். என்ன விடயம்? கட்டடத்தைச் சுற்றி நிறையக் கண்காணிப்பு இருக்கு. நீ நடவடிக்கைகளில் அவதானமாக இரு. எங்கும் பொலீஸ்.

பொலீஸா?

பொலீஸ் என்றதும் சுவடு தெரியாமல் மாறிவிட்டான்மேவின். காவல் போட்டு விட்டா நாளை வரச்சொல்லி மரியாதையாக அழைக்கிறார்கள். கலந்துரையாடலா? விசாரணையா?

இன்று இரவு இவன் திட்டத்தை அமுலாக்க இருந்தான். அதற்கிடையில் விதி மோசம் செய்கிறதா?

வாசலில் வெளிப்பட்ட மேவின் வசமாக அவர்களிடம் மாட்டிக்கொண்டான். மேனிடம் கடன் கேட்க வந்ததாகச் சொல்லித் தப்பிக்கொண்டான். அவனைப் போகவிட்டு விட்டார்கள். பதற்றத்துடன் வீடு போய்ச் சேர்ந்தான்.


சற்று நேரம் கழித்து வெளியே வந்து நோட்டமிட்டான் மேன். வித்தியாசமாகயாரும்கண்ணில்படவில்லை. பொலீஸோ, அவர்களின் வாகனங்களோ தென்படவில்லை. சற்றுநிம்மதி பிறந்தது.

இந்த இரவு ஒன்றே போதும் அவனுக்கு. விடிந்தால் அவனைப் பிடிக்க முடியாது.

அலுவலகக் காரில் புறப்பட்டான் மேன். அவனது பல்கலைக்கழக கால நண்பன் பிராங்லின் வீட்டுக்கு வந்து சேர்ந்தான். திடீர் விஜயம் வியப்பைக் கொடுத்தாலும் வரவேற்பு பிரமாதம்.

பிராங்லின்தான் அந்தப் பிரபல வங்கியின் எலக்ரோனிக் பொறிமுறையை வடிவமைத்தவன். அவனிடம் பல விடயங்களையும் பேசிய மேன் கடைசியில் தான் ஒரு வங்கிக்கான ஒப்பந்தத்தைப் பெற்றிருப்பதாகவும்அதற்கான பொறிமுறை ஆலோசனையை அறியவே வந்ததாகவும் கூறினான்.

சுமார் 5 நிமிடங்கள் மட்டும் பிராங்லின் தான் வடிவமைத்த கணனிக் கட்டுப்பாட்டுடனான எலக்ரோனிக் பூட்டு இயக்க முறைகளை மேலோட்டமாக மேனிடம் விளக்கினான். அத்தோடு கரோல் - டானியல் கடத்தலின் பின் வங்கிக்கு ஏற்படும் அச்சுறுத்தல் ஏதாவது உண்டா எனப் பொலீஸார் அறிய முற்பட்டதாயும் அப்படி ஏதும் கிடையாது எனத் திட்டவட்டமாகத் தான் மறுத்துவிட்டதாயும் பிராங்லின் கூறியது



மேனை நகைக்கவைத்தது.

நாளை விடிந்தால் எவர் முகத்திலும் ஈயாடாது! பிராங்லின் - பொலீஸ் - வங்கி அதிகாரிகள் - கரோல் - டானியல் எல்லோரும் திகைக்கட்டும்.

துவண்டு கிடந்த கரோலைப் போட்டபடி விட்டுவந்தவன் அவளின் நிலைமை பற்றிப் பின்பு அறிய முடியாமற் துடித்தான். இப்போது அதையெல்லாம் சிந்திக்க நேரமில்லை.

ஓ.கே. பை. பை. - பிராங்லினிடம் விடை பெற்றான் மேன்.

* * *

பணத்தை வாங்க முன்னமே டானியலின் இடத்தை மேனிடம் சொன்னது தப்பு என்று கருதினான் மேவின். இனி அவன் தந்தால்தான் உண்டு. இந்தத் தொழிலில் நண்பர்களை நம்பவே முடியாது. காலை வாரி விடுவார்கள்.

மேன் டானியலை வைத்து நிறையப்பிழைப்பான். அவனுக்குப் பலமும் நுணியும் உண்டு எனப் புழுங்கினான் மேவின்.

விடிந்ததும் பணம் கைக்கு வரா விட்டால் டானியலை இடமாற்றிவிட வேண்டியதுதான். தனது அனுமதி இன்றி ஜோன் டானியலைக் கையளிக்க மாட்டான் எனவும் மேவின் கருதினான்.

டானியலை ஒளித்து வைத்திருப்பதற்குக் கூலியாக வாராவாரம் தனக்கு மேவின் அனுப்பவேண்டிய பொருள்களின் பட்டியலைக் கொடுத்திருந்தான் ஜோன். விநியோகம் தடையின்றி வரவேண்டும் எனவும் தடைப்பட்டால் டானியலைத் தேடி வரத் தேவையில்லை என்றும் கண்டிப்புடன் கூறியவன் அவன்.

இப்போது பொருள்கள் அனுப்பிப் பத்து நாள்கள் ஆகிவிட்டன. கையிலோ சல்லிக் காசும் இல்லை. ஜோனின் முகத்திலா முழிக்க முடியும்?

எனவே திட்டம் பிசுபிசுத்துவிட்டதைத் தெளிவாக உணரத் தொடங்கினான் மேவின்.

* * *

ஏதேதோ கடிக்கிற உணர்வு. உடல் முழுவதும் தடித்து வீங்கிய உணர்வு. கண் விழித்த டானியலுக்கு ஏதும் விளங்கவில்லை.

எங்கும் இருள் கௌவி இருந்தது. நரிகள் ஊளையிடுவது கேட்கிறது. பலவகைக் காட்டொலிகளும் கேட்கின்றன. தன் பண்ணையில் எங்காவது மூலை முடுக்கில் அகப்பட்டுக் கிடப்பதாக நினைத்தான். உடல் முழுவதும் வேதனைதான் தெரிந்தது.

தரையைத் தடவிப் பார்த்தான். தடித்த இரும்பு வலைப்பின்னல் போல இருந்தது. எழமுயன்றும் முடியவில்லை. தவழ்ந்து பார்த்தான். நான்கு திசைகளிலும் அதே இரும்பு வலைதான் தட்டுப்பட்டது. ஏதோ வனவிலங்குப் பொறிக்குள் மாட்டுப்பட்ட உணர்வு.

பழைய நினைவுகள் வர மறுத்தன. மீன் பண்ணை ஞாபகம் கனவு போல வந்து போனது. கரோல் எங்கே? ஏதாவது ஆபத்து?...

நிமிடங்கள் யுகங்களாகக் கழிய ஒருவாறு விடியல் அறிகுறிகள் தென்பட்டன. எழுந்து கம்பிக் கூண்டைப் பிடித்தபடி நின்றான் டானியல். இது கனவாக இருக்கக் கூடாதா என்று கூட நினைத்தான்.

விடிந்ததும் ஜோன் கண்ணில் பட்டான். டானியலிடம் ஏதும் பேசவில்லை. நாய்க்கு வீசுவதுபோல ஏதோ சாப்பாட்டைப் போட்டுத் தண்ணீரும் ஊற்றிவிட்டுப் போய்விட்டான்.

மிருகங்களை அடைத்து வைக்கும் கூண்டிலேதான் தான் அடைபட்டுக் கிடப்பதைக் கண்டு கலங்கினான் டானியல். ஜோனிடம் அவன் கேட்ட கேள்விகளுக்கு விளக்கம் கிடைக்கவில்லை. ஜோன் ஓர் இந்தியன் போலவும் பட்டான். பாஷை விளங்கவில்லையோ என்று கூட



நினைத்தான் டானியல்.

ஆனால் அருகில் இருந்தவனைய கூண்டுகளைவிட இது வித்தியாசமாக இருந்தது. மேற்புறம் வலை அடைப்புக்கு மேலே தகட்டுக் கூரையும் இருந்தது.

இவனைக் கவனிக்க ஜோனுக்கு நேரம் கிடையாது. எப்போதாவது அவனின் ஆள்கள் வந்து திறந்து விடுவார்கள். அவர்களின் பாஷை இவனுக்குப் புரியாது - பின்பு அடைத்துவிட்டுப் போய்விடுவார்கள்.

காட்டு வாழ்க்கை டானியலுக்கு புதிது இல்லையே. சில மரக்கட்டைகள் குற்றிகளை அவ்வப்போது எடுத்து வந்து கூண்டுக்குள் பரப்பி வசதிகளைப் பெருக்க முனைவான். பொழுதுபோவது சுலபமாக இருக்காது. மனதைத் திடமாக வைத்துக் கொண்டான். கரோலின் நிலைமை தெரியாத துடிப்பு வாட்டும்.

மரங்கள் அடர்ந்து வளர்ந்து இருந்தன. பகலிலும் இருண்டே அப்பிரதேசம் இருந்தது. அருமையாக வெளிகளூடே ஆகாயம் வெளிப்படும். எறும்புகளின் தொல்லை தாங்கவில்லை.

ஆடைகள் அழுக்கேறிப் போயின. முகத்தில் தாடி அடர்ந்து வளர்ந்து இருந்தது. உடம்பு உருக்குலையத் தொடங்கிவிட்டது. எங்கும் கடி காயங்கள் பரவத்தொடங்கின.

அவனைப் பற்றிக் கவலைப்பட யாருமே இல்லாத உலகம் கண் முன்னே இருண்டு விரிந்து கிடந்தது.

* * *

ஜோனிடம் இல்லாத வசதிகளா?

அவனின் ஆள்கள் காட்டு வைத்தியத்தில் கில்லாடிகள். ஒரு வாரத்தில் கரோலையும் மைக்கையும் ஆளாக்கி விட்டார்கள். அடிதடிக்காரருக்கு இப்படிப்பட்ட காயங்களுக்கு வைத்தியம் செய்ய சொல்லித்தரவா வேண்டும்?

உலகப் பிரசித்தி பெற்ற மைக் தன்னிடம் வந்ததையிட்டு ஜோனுக்குத் திருப்தி. அவனை ஆழமான காட்டுப் பகுதியில் வசதியான ஒரு குடிலில் தங்கவைத்தான்.

சூழல் இதமாக இருந்தது. ஜோனும் பரிவாரங்களும் நன்கே கவனித்தார்கள். நிம்மதியாக இங்கே சாவுவரை நிலைக்கலாம் என நிம்மதிப் பெருமூச்சு விட்டான் மைக்.

கரோல் பற்றிய முழு விபரங்களையும் மைக் ஜோனிடம் சொல்லி இருந்தான். எனவே கரோலை கண்காணிப்பது ஜோனுக்கோ சிரமமாக இருந்தது. அப்பொறுப்பை ஜோனின் மனைவி ஜெசி எடுத்திருந்தாள்.

அவள் கரோலின் மீது அன்பைப் பொழிந்தது கரோலுக்குச் சற்று இதமாக இருந்தது. அவள் டானியலுக்காக ஏங்கிய ஏக்கத்தை ஜெசி உணர்ந்திருந்தாள்.

(தொடரும்)

## சங்கட மென்றால் சறுக்கு

'கங்குல் விலகியொரு காலை மலர்வதற்கு'
பாங்களிக்கும் வாய்ப்பைப் பயன்படுத்தும் - அங்கமிதோ!
சிங்கமுளி தோண்டுஞ் சிறுத்தை நகமாவோம்!
சங்கட மென்றால் சறுக்கு.

அங்க முயிர் யாவையு மர்ப்பணிக்கும் ஆர்வமுடன்
பொங்கி யெழுந்து; புலிவேட்டைக் - கேங்கிநிற்கும்
கொங்கணவர் கூட்டத்தின் கொட்ட மடக்கிடச்
சங்கு முழவோடு சாடு.

தென்னிலங்கை நாக்குகளைத் தீயிற் பொசுக்கிவரும்
கன்னித் தமிழீழக் காண்டமிதில் - மின்னலென
வன்னியை மீட்டோம்! வளைகுடா மண்ணிலது;
இன்னலெனச் சொன்னா லிழுக்கு.

வீச்சு வலையினில் வேங்கை விழாதெனப்
பேச்சு வலையொன்றைப் பீய்ச்சுகிறார் - ஆச்சியொரு
தாச்சியைத் தாண்டித் தணலிற் தவறிய
பூச்சியெனக் காணும் புவி.

எச்சில் சுவைக்கும் இழிகுல நாய்கள்சில
அச்சில் ஒளிதந்த அற்புதனை - அச்சத்தால்
'பிஸ்ரல்' கருவியால் பச்சடி போட்டதொரு
மச்சினி தந்த மது.

- அங்குசன் -

## குறள்வெள்ளம்

குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை. யாராவது எப்போதாவது உன்னைப்பற்றிக் குறைபாடிக்கொண்டே இருப்பார்கள். இதற்கெல்லாம் மல்லுக்கட்டப் போனால் ஊரில் எல்லாரையும் பகைப்பதுதான் மிச்சம். எனவே இகழ்வாரைக் கண்டு சினக்காமல் பொறுத்துக்கொள்வதே சிறந்தது.

உனது பொறுமை கண்டு, சீறாமை, சினக்காமை கண்டு அடுத்தவர்கள் வியக்கும்போது எவருக்காவது பழிக்க மனம் வருமா? எனவே அவர்கள் காலப்போக்கில் ஓய்ந்து விடுவார்கள்.

பொறுக்காமல் நீ பொங்கியெழுந்தால் வீண் விவாதமும் சண்டை சச்சரவும் பெருகி அமைதி குலைவதைத் தவிர வேறில்லை. எனவேதான் பொறுமை சிறப்பைத்தருகிறது. அதுவே தலையாய அறம்.

பூமியை மனிதன் படுத்துகிற பாட்டையும் அதைப் பொறுத்துக் கொண்டு அவனை அது தாங்குதலையும் பொறுமைக்கு உதாரணமாகக் காட்டுகிறார் வள்ளுவர்.

**அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை**
**இகழ்வார்ப் பொறுத்தல் தலை.** - 0151

- பொறையுடைமை -

*- அம்பிகைபாகன்*

# இந்த வார இராசி பலன்

**29-01-2000 இலிருந்து 04-02-2000 வரை**

| | | | |
|---|---|---|---|
| | வியா. சனி | | |
| செவ். புத. | இராசிச்சக்கரம் | | ராகு |
| சூ கேது | | | |
| வெள். | | சந். | |

*மாற்றம்: விசாக நட்சத்திரம் - சந்திரன் - துலாம் இராசியில் நிற்கும்.*

*01.02.2000 இல் செவ்வாய் மீனம் இராசியில் மாறும்.*

*அரசியலில் வெளிநாட்டுத் தலைவர்களின் பேச்சு, அழுத்தங்கள், அரசியல்வாதிகள் - மக்களின் மனமாற்றங்கள், நாட்டில் தொழிலாளர்கள், அரச உத்தியோகத்தர்கள், மாணவர்கள், சமயத் தலைவர்களின் மனக் கொதிப்பால் ஆர்ப்பாட்டங்கள் என்பன யுத்த அழுத்தங்களைத் தந்து சில திருப்பங்களை ஏற்படுத்தும். முக்கிய நாட்டுத் தலைவர்களுக்கும், அரசியல்வாதிகளுக்கும் நல்லதல்ல. இந்தியா சும்மா இருக்காது எனக்காட்டும். எதையும் சமாளிக்கும் எனச் சொல்லும். அணு ஆயுதங்களைப் பெருக்கும். பொருளாதார சாதக சூழ்நிலையை உருவாக்கும். மத்திய கிழக்கில் போராட்ட சூழ்நிலை. மேற்கு நாடுகளின் பொருளாதார அழுத்தங்கள், கிழக்கு நாடுகளில் அழிவுகள், மத்திய கிழக்கு நாடுகளின் போக்கில் ஒரு பதற்ற நிலை ஏற்படும் எனக் கிரக நிலைகள் காட்டுகின்றன.*

## சோதிட சஞ்சீவி

## மேடம்

மக்கள் தட்டிக் கேட்டால் சமயவாதிகளோ அரசியல்வாதிகளோ எதுவும் செய்துவிட முடியாது. அதற்குத் திடமான நம்பிக்கைவேண்டும். தொழில் ஸ்தானத்தில் ஒரே போட்டியாக இருக்கின்றதா? போட்டியும் - வேதனையும் இல்லாத உலகம் இல்லை. எனவே எதிர்நீச்சலடித்து வெற்றிபெறுங்கள். எதிர்ப்பாலருடன் நிதானமாக இருங்கள். திடீரென கோயில், சாஸ்திரமென ஓடி, ஓடித்திரிவீர்கள். சகோதரங்களுடன் கருத்து வேற்றுமை ஏற்படலாம். சிரித்துச் சிரித்துக் கருமமாற்றுவீர்கள். வாய்வு, வயிற்றுநோ, தலைப்பாரம், படபடப்பு, களைப்பு என்பன கொடுக்கும். எங்காவது ஓடி ஓடித் திரியவேண்டும் போல மனம் அலைபாய்ந்தபடி இக்காலத்தில் இருக்கும். செய்தித்துறை, நகை வியாபாரம், வியாபாரத்துறை, மருந்துத்துறை, அரசாங்க வேலைகள் தொடர்பானவர்களுக்கு அதிக நன்மைகளும் மாற்றங்களும் கொடுக்கும். பிரயாணங்களால் இலாப நஷ்டங்கள் சர்வசாதாரணமாகும்.

*அதிர்ஷ்டநாள்: வியாழன், வெள்ளி.*

## இடபம்

இனத்துவேசத்தில் அரசியல்ஆட்சி நடத்தும் அரசாங்கங்களால் யுத்தத்தை சமாதான வழிக்குத் திருப்ப முடியாது. நடுவழியில் நின்று தடுமாற நேரிடும் பலன் போல தொழில்ஸ்தானத்தில் காரியங்கள் இருக்கும். பெருந்தன்மையாக நடந்து சமாளியுங்கள். வாக்கு நாணயம், புதிய ஆடைஅணிகள்சிலருக்குக் கிடைக்கும். வீட்டில் கருத்து வேற்றுமை வராமல் விடாது. நெஞ்சுப் படபடப்பு, மனப்பயம், கைகால் உளைவு, காணிபூமி, வாகனச் செலவுகள் அதிகரிக்கும். வைத்தியச் செலவு அதிகரிக்கும். ஹோட்டல், கலைத்துறை, வைத்தியத்துறை, மின்சாரத்துறை, தொழில் நுட்பத்துறை, விவசாயத்துறை போன்றவற்றில் தொடர்பானவர்கள் நன்மைகளும் மாற்றங்களும் அடைவார்கள். செய்திகளால் பதற்றமடையாமல் இருந்து செயற்படுங்கள்.

*அதிர்ஷ்டநாள்: வியாழன், வெள்ளி.*

## மிதுனம்

என்ன அவசரம்? நேற்று வரை இருந்த பலம் மாற்றமாகும் காலமாகும். நல்லவர்களுக்கு மட்டும்தான் மக்கள் வோட்டுப் போடுகிறார்களா? எனவே நல்லவை - கெட்டவைகளை ஆராய்ந்தறிந்து நாட்டில் தலைவர்கள் செயற்படுவது போன்று நீங்களும் நிதானமாக தொழில்ஸ்தானத்தில் இருந்து செயற்படுங்கள். மேலதிகாரிகள் ஆதரவு தருவார்கள். இடமாற்றம், சிலருக்கு ஏற்படலாம். சத்துருக்களின்எதிர் தாக்கத்தை அலட்சியம் செய்யாதீர்கள். ஆடம்பரப்பொருள் செலவுகள் அதிகரிக்கும். குடும்பத்தினருக்காக கால நேரத்தைச் செலவு செய்வீர்கள். விவசாயத்துறை, குருத்துறை, மருந்துத்துறை, தபால்தந்தித்துறை, நகைத் துறையினர்கள் அதிக இலாபங்கள், மாற்றங்கள் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்: வியாழன், வெள்ளி, சனி.*

## கடகம்

நம்பிக்கை என்ற சொத்து மிக முக்கியமாகும். தெய்வபலம் கொண்டு பலர் அரும்பெரும் சாதனைகளை செய்துள்ளார்கள். நீங்களும் நம்பிக்கையுடன் உங்கள் தொழில் ஸ்தானத்தில் நல்லபுதிய திட்டங்களை நடைமுறைப்படுத்தவும். நண்பர்கள் உதவிகள் செய்வார்கள். ஆயினும் வருவாயில் கொஞ்சம் தடை ஏற்படத்தான் செய்யும். வீட்டில் இருந்து - புதியவர் வரவு மகிழ்வைக் கொடுக்கும். செலவுகள் கட்டுமீறும். வேதனை வராத உடம்பா? வேதனைப்படாத மனமா? எனச் சலிப்படையாதீர்கள். தெய்வபக்தியால் சமாளித்து வாருங்கள். சளி, முட்டு,நெஞ்சு படபடப்பு, கைகால் பிடிப்பு சர்வசாதாரணம். குருத்துறை, அரசியல்துறை, விவசாயத்துறை, வியாபாரத்துறை சம்பந்தப்பட்டவர்களுக்கு இலாபங்கள் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்டநாள்: வியாழன், வெள்ளி.*

## சிங்கம்

மக்களின் நம்பிக்கை ஒரு தனி மனிதருக்கு கிடைக்குமாயின் அவரது பலம் தெய்வபலமாக நிச்சயம் தொழிற்படும். தொழில்ஸ்தானத்தில் எல்லோரது ஆதரவும் பெருகிவரும். இருந்தாலும் எவரது ஆதரவையும் அதிக தூரம் எதிர்பார்க்கமாட்டீர்கள். எந்த விஷயத்திலும் எதிர்நீச்சல்தான். படிப்படியாகஉங்கள் செயற்பாடுகள் வெற்றி தரும். படபடப்பு, குளிர், உஷ்ணபீடைகள், வாயிற்றுநோ, சளி, கைகால் விறைப்பு என்பன வந்துபோகும். அடிக்கடி கோபப்படாதீர்கள். பிரயாணங்களைத் தவிர்த்து விடுங்கள். கம்பியூட்டர், பத்திரிகைத்துறை, குருத்துறை, ரீவி, வானொலித்துறை, மருந்துத்துறை தொடர்பானவர்கள் நன்மைகள் அடைவார்கள். எதையும் வெளிப்படையாகப் பேசி நல்லது, கெட்டதைக் காண விளையும் உங்களை சிலருக்குப் புரியாமல் இருப்பது சகஜமாகும்.

*அதிர்ஷ்டநாள்: வியாழன்,வெள்ளி.*

## மகாதேவா ஜோதிடம்

## கன்னி

நல்லவர்களுக்கு நல்ல பலன் நடக்கும் பொழுது பலர் பலவீனமானவர்களாக மாறிவிடுகின்றார்கள். அதற்காக நல்லவற்றை செயற்படுத்தாமல் விடமுடியுமா? உங்கள் தொழில்ஸ்தானத்தில் நன்மையான சில விஷயங்கள் நடக்கும். உங்களுக்கு உற்சாகம் ஏற்பட்டு மகிழ்ச்சி அடைவீர்கள். எதிர்ப்பாலார் புறுபுறுப்பர். குடும்பத்தில் நன்மைகள் நடக்கும். ஓடியாடித் திரிந்து கருமமாற்றியபடி இருப்பீர்கள். சளி, கைகால் பிடிப்பு, வாய்வுத் தொல்லை, இடமாற்றம் என்பன ஏற்படுவதனால் மனச்சஞ்சலம், சலவருத்தங்கள், அடி வயிற்றுநோ என்பன வருத்தலாம். இக்காலத்தில் எதையும் அர்த்தபுஷ்டியுடன் இலாபம் கருதிச் செய்யுங்கள். தூரதேசத்துச் செய்திகள் உங்களுக்கு நற்பலன்களைக் கொடுக்கும். சிலருக்கு வருவாய்கள் அதிகரிக்கப் பலன் உண்டு.

*அதிர்ஷ்டநாள்: சனி, வியாழன், வெள்ளி.*

## துலாம்

நீங்கள் எதையும் சட்டத் திட்டத்துடனும், ஆதாரத்துடனும்தான் ஏற்றுக்கொள்வீர்கள். காற்றடியாமல் மழை வராது. காரணம் இல்லாது காரியம் நடவாது. தொழில்ஸ்தானத்தில் எல்லாவற்றிற்கும் சட்டதிட்டங்களைப் பார்க்க முடியாது. சமாளித்து நடந்தால்தான் காரியம் செயற்படும் என்பதை அறிவீர்கள். வீட்டில் செலவுகள் அதிகரிக்கும். சகோதரங்களின் செய்திகளால் மனக்கலக்கம் அடையலாம். கொடுக்கல் வாங்கலில் அவதானமாக இருந்தால் நன்று. தொழில்ஸ்தானத்தில் ஏற்படும் கருத்துவேறுபாடுகள் உங்களைத் தாக்கலாம். வெளிக்காட்டாமல் இருக்கவும். ஏனெனில் உங்கள் செயற்பாடுகளைப் பலர் கவனித்தபடி இருப்பார்கள். சளி, நாரி நோ, தலையிடி, கவலை, கிருமித்தாக்கம் வருத்தலாம். விவசாயத்துறை, மருந்துத்துறை, ஆசிரியத் துறையினர் போன்றவர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்டநாள்: சனி, வியாழன், வெள்ளி.*

## விருச்சிகம்

மருந்து இல்லாத இடத்தில் மந்திரம் சொல்லக்கூடாது. கண்டபடி மந்திரம் சொல்வதால் -துன்பங்கள், சொல்பவர்களுக்கு ஏற்படும். எனவேதான் ஆலயங்களில் மந்திரங்களைச் சொல்லும் முறை வகுக்கப்பட்டுள்ளது. உங்கள் தொழில்ஸ்தானத்திலும் கருவி உள்ள இடத்தில் காரியமாற்றி வெற்றி பெறுங்கள். காற்றுள்ள பொழுதே தூற்றிக்கொள்ளுங்கள். பொருள் இழப்பு ஏற்படும். விருந்துகள் வைப்பீர்கள். கலகம் பிறந்து நியாயம் பிறக்கும். அரச ஆதரவு வரும். பணவரவு, நண்பர்கள் உதவிகள், அயலவர்கள் உதவிகள் என்பன கிடைக்கும். வயிற்றுநோ, வாய்வுத்தொல்லை,கைகால் விறைப்பு, தலைப்பாரம் என்பன வரலாம். நிர்வாகத்துறை, விவசாயத்துறை, வைத்தியத்துறை, ஆசிரியத்துறை சம்பந்த மானவர்களுக்கு மாற்றங்கள் ஏற்படும். இனஜனங்களில் ஒருவரின் பிரிவு ஏற்பட்டு வேதைப்படுவீர்கள்.

*அதிர்ஷ்டநாள்: வெள்ளி.*

## தனுசு

ஒவ்வொரு மனிதர்களுக்கும் ஏன்? ஒவ்வொரு உயிர்களுக்கும் விசேட சக்தி ஒன்று கொடுக்கப்பட்டிருக்கும். அதை அறிந்து செயற்படும் ஒரு சிலரே வாழ்க்கையில் வெற்றி அடைகின்றார்கள். நீங்களும் தொழில் ஸ்தானத்தில் சந்தர்ப்பமறிந்து செயற்பட்டு வெற்றி அடையுங்கள். போட்டிகள் சர்வசாதாரணமாகும். சகோதரங்கள், எதிர்ப்பாலருடன் வாக்குக்கலகம் வரலாம். காணி, வீடு, ஆடை, அணிகலங்களால் இலாபம் அடைவீர்கள். அடிவயிற்று நோ, வாய்வுத்தொல்லை, வாய்வு சளி, நெஞ்செரிப்பு என்பன அடிக்கடி கொடுக்க இடம் உண்டு. தூரதேசப் பிரயாணம் அல்லது இடமாற்றங்களைத் தவிர்த்து நடக்கவும். அல்லது இழப்புக்கள் கொடுக்கும். வியாபாரம், சட்டத்துறை, அரசியல் துறை, மின்சாரத்துறை, செய்தித் துறையினர்கள் அதிக நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்: வெள்ளி.*

## மகரம்

ஆதாரம் இல்லாமல் சட்டம் எதையும் ஏற்றுக் கொள்ளாது. அது ஒரு வரம்பிற்குட்பட்டது. சட்டத்தை ஏமாற்றி சிலர் கடமையைக் கட்டுப்படவைக்கிறார்கள். எனவே தொழில் ஸ்தானத்தில் கடமை, கட்டுப்பாடு எனச் செயற்படுங்கள். உங்கள் மதிப்புத் தானாக உயர்ந்தபடி இருக்கும். மேலதிகாரிகள் கண்டித்தாலும், சக நண்பர்கள் அதிக உற்சாகம் தந்தபடி இருப்பார்கள். வாகனச் செலவுகள் அதிகரிக்கும். இடமாற்றங்கள்நஷ்டங்களைக் கொடுக்கும். சளி, முட்டு, நரம்புச்சோர்வு, உரசல் அல்லது அடிகாயங்கள் அஜீரணம், அடிக்கடி ஒரு குழப்பநிலை ஏற்பட இடமுண்டு. தொழில் நிலையிலும், பொருள்நிலையிலும் அவதானமாக இருக்கவும். போக்குவரத்துத் துறை, வாகனத்துறை, சட்டத்துறை, ஆலயத்துறை, நிர்வாகத்துறை சம்பந்தப்பட்டவர்கள் அதிக நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்: சனி, வியாழன்.*

## கும்பம்

மக்களின் சிந்தனைகள் சமுதாயத்தில் பல மாறுதல்களை ஏற்படுத்தும். வாழ்க்கையில் போராடினால்தான் ஓரளவு தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியும். அதுபோன்று நீங்களும் தொழில் ஸ்தானத்தில் போராடி வெற்றி அடையமுயலுங்கள். அடிக்கடி மனச்சோர்வு கொடுக்கும். நண்பர்களால் கஷ்டங்கள் அல்லது வீண் பகைகள் வரலாம். வீட்டுச்செலவுகள் கட்டுமீறும். பொருள்கள் தவறலாம். புத்திரர் அல்லது சகோதரங்களால் அதிக கவலைப்படுவீர்கள். இடமாற்றம் செய்யாதீர்கள். இழப்பை அடைய வேண்டிவரும். தூரத்திலிருந்து நற்செய்திகள் வர இடமுண்டு. சளி, விறைப்பு, நரம்புச் சோர்வு, கைகால் வலி, படபடப்பு, சலவருத்தங்கள் என்பன கொடுக்க இடமுண்டு. வைத்திய சாலைக்குப் போகவேண்டி வரலாம். அரசியல்துறை, ஹோட்டல்துறை, மருந்துத்துறை, குருத்துறை, கலைத்துறை, மின்சாரத்துறை, விவசாயத் துறை, அரசதுறை சம்பந்தப்பட்டவர்களுக்கு இலாபங்கள் அதிகரிக்கும். சிலருக்கு இடமாற்றமும் வரலாம். முயற்சிக்குத் தகுந்த ஆதாயங்கள் ஏற்பட இடமுண்டு.

*அதிர்ஷ்டநாள்: சனி, வியாழன்.*

## மீனம்

என்ன பயங்கரச்சத்தம்? உலகம் அழிவை நோக்குகின்றதா? என அடிக்கடி சிந்திக்கிறீர்களே. அப்படிச் சிந்திப்பதில் பயன் ஏதும் இல்லை. இத்தகைய விடயங்களைப் பெரிதாக எடுக்காதீர்கள். இங்கு மாத்திரமல்ல: உலகெங்கும் ஒரு நிர்ப்பந்த நிலை ஏற்படப் போகின்றது என்று கிரக நிலைகள் காட்டுகின்றன. வேகமாகப் போனால் கட்டுபாடில்லாத நிலை ஏற்பட்டு அழிவுகள் ஏற்படத்தான் செய்யும் அதைத் தவிர்க்க முடியாது. தொழில் ஸ்தானத்தில் நிதானமாக இருங்கள். இலாபங்கள் அதிகரிக்கும். மேலதிகாரிகள் ஆதரவு தருவார்கள். அடிக்கடி அங்குமிங்கும் போய்க் கொண்டிருப்பீர்கள். குடும்பத்தவர்கள், இனஜனங்களுக்கு அல்லது பொதுத் தொண்டு செய்வீர்கள். மறதியால் இழப்புக்கள் கொடுக்கலாம். குடும்பத்தினர் மகிழ்ச்சி அடைவார்கள். சளி, காய்ச்சல், நரம்பு வருத்தம், வாய்வு, வாயிற்று வருத்தங்கள் என்பன வருத்தலாம். உணர்வுகளின் கொந்தளிப்பு, பணப்பிரச்சினை என்பன ஏற்படத்தான் செய்யும். பிரயாணங்களைத் தவிர்க்கவும்.

*அதிர்ஷ்டநாள்: சனி, வியாழன்.*

---

# தேடுதையா தேசமின்று!

(மறைந்த மாமனிதன் குமார் பொன்னம்பலம் நினைவாக)

நேசக் கரமொன்றை நீசக் கரமொன்று அழித்ததடா
தேச விளக்கின்று சுடர்விட்டு ஓய்ந்ததடா
பாச உறவொன்று பார்விட்டுப் பறந்ததடா-தமிழ்
தேசமின்று தேற்றுவாரின்றிக் கலங்குதடா

தனியாகத் தான் நின்று மரித்தாயோ தமிழன் என்று
குனியாத தலையின்று குண்டு பட்டு சாய்ந்ததுவோ!
செம்மணியைச் செகமறிய வைத்ததற்காய் குமாரே நீ
அம்மணியின் ஆட்சியில் பெற்ற பரிசன்றோ மரணம்?

பேதையர் கூட்டத்தை நசித்தாயே மேதை நீ
பேடியர் கூட்டத்தை மிதித்தாயே தலைவா நீ
தேடுதையா எம்மினம் உன் திருமுகத்தை இங்கு
வாடுதையா நிதம் நீர் ஊற்ற நீயின்றி

பூத்துக் குலுக்கிய புத்தாயிரமாண்டின் முதற் கொலையாய்,
கொலை மலிந்த நாட்டினிலே கொடுத்தாயோ உன்னுயிரை,
விலையாகக் கொடுத்தாயா இல்லை வீணாகத்
தொலைத்தாயா?இனி
நாளை நீ பிறக்காயோ நற்றமிழன் விடிவைக் காண!

- இந்திரஜித் -

# வயோதிபம் கேட்கும் வரம்

காற்றில் படபடக்கும் காவோலை; பலகாலம்
கூற்றுவனின் வரவிற்காய் குழிவிழுந்த விழியோடு
காத்துக்கிடக்கும் காலப்பசுவின் சாணம்
நேற்றைய விம்பம்; நினைவுகள்தான் என்சொந்தம்

ஆச்சரியக் குறியாக அன்றைக்கு நின்றவன்நான்
வீச்சிழந்து இன்றோ வினாவின் குறியானேன்

கடலை கொறித்துக் காடாகுகின்ற கோதினைப்போல
உடலை எறிந்துவிட உயிர்த்துடிக்கும் வேளையிலும்
சுடலையிலும் ஒருபரப்பைச் சொந்தமென நினைக்கின்ற
குடிலை நீங்காத குருட்டாத்மா பேசுகிறேன்.

விடலை வயதில் என் விசில்சத்தம் விண்வயிற்றுக்
குடலான முகில்களையே குலையவைத்த துண்மை
தான்
அடரமா! இப்போதென் கமக்கட்டில் இருக்கின்ற
குடைகூட என்னைக் குறும்பாகப் பார்க்கிறது

காற்றோடு சேர்ந்து கொண்டென் கரம்விட்டு அது
பறந்தென்
ஆற்றாமையைக் காட்டி ஆர்ப்பரிக்க அக்குறிப்பில்
வீட்டோடு சேர்ந்தென்னை வீதியிலே துப்பியவர்
கேட்டு விட்ட கேள்விகளே கிழமனதில் அரங்கேறும்

வெத்திலைக்கும் சுருட்டுக்கும் வீணாய்ச் செலவுசெய்யச்
சத்திரமா எனக்கேட்டுச் சாகமுன்னே சாகடித்த
புத்தி கெட்ட பிள்ளைகள் புகையடிக்கும் மருமகள்மார்
இத்தினைக்கும் பதலெடுத்துச்

சொல்ல வாய்துடிக்க 'சொய்ங்' என்று ஈவந்தென்
பல்லில்லாக் கடவாயில் பாய்போடத் தான்முயல
பொல்லாத நாயொன்று போகிழவா எனஊளைத்
தில்லானா பாட தெருவோரப் பண்டிதனாய்

மூன்று சீரொடு முடியும் முறைப்பான வெண்பாப்போல்
ஊன்று தடியோடென் உயிர்முடியும் வேளையிலும்
வேண்டுதல் ஒன்று தம்பி......

சந்திரனில் சென்றிறங்கும் சயன்ரிஸ்ற்றுத் தம்பிகளா
அங்கெல்லாம் மனிதஇன அடிச்சுவடே இல்லையென்று
சொன்னீர்களே தம்பி சுறுக்காக என்னையந்த
ஆளில்லாக் கிரகத்தில் ஆராய்ச்சிப் பொருளாக்கி
வாழவிட்டு வாருங்கோ; வசதியென்று என்னைச்
சேர்க்கும்
முதியோர் விடுதிகளின் முகங்களினை விட அந்த
எதுவுமற்ற சூனியமே
என்னுயிர்க்குச் சாந்திதரும்.

- ச.முகுந்தன் -

# உயிர் காக்கும் உன்னதப் பணி இரத்த தானம்

குண்டு வெடிப்பில், துப்பாக்கிச் சூட்டில், விபத்தில், பிரசவத்தில், கருச்சிதைவில், தீக்காயத்தில் என இரத்தமிழந்து உயிரிழந்து போகும் சோகங்களை நாளாந்தம் நாம் காண்கின்றோம்.

இரத்தம் கொடுத்து காப்பாற்றக் கூடிய உயிர்களை நாம் இழப்பதென்றால் அது நம் அறிவின்மையையும், அலட்சியத்தையும், தேவையற்ற அச்சத்தையுமே காட்டி நிற்கின்றது. இரத்ததானத்தைப் பற்றிய போதிய - தெளிவான - விளக்கங்களைத் தெரிந்திருப்பவர்கள் மிகச் சிலரே. தெரியாதவர்கள் தெரிந்து கொள்வதற்கும் தெரிந்தவர்கள் சிந்திப்பதற்கும் இக்கட்டுரை உதவும் என எதிர்பார்க்கிறேன்.

குருதி, 55 வீத குருதி முதலுருவையும் 45 வீதம் குருதிக் கலங்களையும் கொண்டுள்ளது. சம வயதுடைய ஆணையும் பெண்ணையும் ஒப்பிட்டுப் பார்த்தால் ஆண், பெண்ணைக் காட்டிலும் கூடிய அளவு குருதியைக் கொண்டவனாகக் காணப்படுகின்றான்.

சராசரியாக ஆணில் சுமார் 5.5 லீற்றர் குருதியும் சராசரியாக பெண்ணில் சுமார் 4.5 லீற்றர் குருதியும் காணப்படுகின்றது.

## குருதியின் தொழில்

மனித உடலில் ஒரு சீர்த்திட நிலையைப் பேணுவதில் குருதி பெரும்பங்கு வகிக்கின்றது. சுவாச மேற்பரப்பிலிருந்து பிராண வாயுவை (ஒட்சிசன்) கலங்களுக்கும், கலங்களின் சுவாசத்தினால் உருவாகும் கரியமில வாயுவை (காபனீரொட்சைட்) சுவாச மேற்பரப்பிற்கும் கொண்டுசெல்கின்றது. அத்துடன் கலங்களுக்குத் தேவையான போசணைப் பொருள்களை கலங்களுக்கு வழங்குவதற்கும் அவற்றின் அனுசேபத்தினால் உருவாகும் கழிவுப் பொருள்களை கழிவகற்றும் அங்கங்களுக்கு கடத்துவதற்கும் உதவுகிறது.

இதைவிட, மேலாகத் தனித்துவமான பாதுகாப்பையும், நிர்ப்பீடனத்தையும் ஏற்படுத்துகிறது.

மனிதனின் பல்வேறு செயற்பாடுகளுக்கு உறுதுணையாக நிற்கும் ஓமோன்கள் எடுத்துச் செல்லும் ஊடகமாகவும் இது விளங்குகிறது.

உடல் வெப்பநிலையைச் சீராகப் பேணுகின்றது.

இவ்வாறு பல்வேறு தொழில்களைச் செய்யும் குருதியின் முக்கியத்துவத்தை நாம் எல்லோருமே உணர்ந்திருக்கின்றோம். அதைவிட முக்கியமாக நாம் உணரவேண்டிய இன்னொருவிடயம் "குருதியை இழந்தால் அதற்குரிய மிகச்சிறந்த மருந்துவம் மீண்டும் குருதியை வழங்குவதேயாகும்" என்பதாகும்.

## இரத்தப் பிரயோகம்

இனி இரத்தப் பிரயோகம் செய்ய வேண்டிய சந்தர்ப்பங்களைப் பார்ப்போம்.

* விபத்தின்போது ஏற்படுகின்ற இரத்த இழப்பினை ஈடுசெய்வதற்கு.
* சத்திரசிகிச்சையின் போது ஏற்படும் இரத்த இழப்பிற்கு.
* சத்திர சிகிச்சைக்கு ஆயத்தம் செய்வதற்கும் சிலருக்கு இரத்தம் தேவைப்படலாம்.
* கர்ப்பச் சிதைவு காரணமாக ஏற்படும் இரத்தப்பெருக்கை ஈடுசெய்வதற்கு.
* பிரசவத்தை எதிர்கொள்ளப் போதிய இரத்தமில்லாத பெண்ணுக்கு வேறு முறைகள் மூலம் இரத்த உற்பத்தியை அதிகரிக்க முடியாத சந்தர்ப்பங்களில்.
* பிரசவத்தின்போது அதிக இரத்த இழப்பு ஏற்பட்டால் அதை ஈடுசெய்வதற்கு.
* பெரிய தீக்காயங்களின் பின் காயங்களிலிருந்து அதிக திரவம் வடிவதனால் அதை ஈடுசெய்ய.
* இரத்தச் சோகையினால் ஏற்படும் இரத்தக் குறைவை ஈடுசெய்வதற்கு.
* குண்டுவெடிப்பு, துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுக்கு இலக்காகி அதிகளவு இரத்தமிழந்தவர்களுக்கு.
* குருதியுறையா நோய் போன்ற சில குருதி சம்பந்தப்பட்ட நோயுள்ளவர்களுக்கு
* மற்றும் வேறு நோய் காரணங்களுக்காக.

இத்தகைய சந்தர்ப்பங்களில் உயிர்காக்கும் உரிய சிகிச்சை வழி இரத்தப் பிரயோகமேயாகும். உரிய நேரத்தில், உரிய குருதியை, உரியவருக்கு வழங்குவது முக்கியம்.

நாம் ஒவ்வொருவரும் எந்தகுருதி வகையைக் கொண்டுள்ளோம் என்பதைத் தெரிந்திருத்தல் அவசியமானதாகும். இதுவரை நானூறுக்கு மேற்பட்ட குருதி வகைகள் கண்டறியப்பட்டாலும் அதில் A,B,O வகையும் Rh வகையும் அதிமுக்கியமானவை. அனைவரது குருதியும் இவ்வகைகளுக்குள் அடங்கும்.

இரத்ததானத்தைப் பொறுத்தவரை எமக்கு முக்கியமாக மனதிலிருக்கவேண்டிய விடயம் என்னவெனில், இரத்ததானம் செய்வதனால் எமக்கு எதுவித தீங்கும் ஏற்படுவதில்லை; அதே நேரம் எமக்குப் பல நன்மைகள் ஏற்படுகின்றன.

இரத்ததானத்தினால் -

* எமது உடல் இழந்த இரத்தம் புதுப்பிக்கப்படுகின்றது.
* இரத்தத்தை உருவாக்கும் உறுப்புகளுக்கு அப்பியாசத்தை அது அளிக்கிறது.
* இதனால் உடலானது சீர்படுத்தப்படுகின்றது.
* இரத்ததானம் செய்ய வருகின்ற அனைவரும் இலவச வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகிறார்கள்.
* அப்பொழுது வைத்திய அதிகாரியினால் ஏதாவது நோய் அல்லது குறைபாடு இனங்காணப்பட்டால் அதற்குத் தகுந்த சிகிச்சை அளிக்கப்படுகின்றது.
* எத்தனையோ பெறுமதிமிக்க உயிர்களைக் காத்த மனநிறைவினால் எமக்கு மனச்சந்தோஷம் கிடைக்கிறது.

## கால இடைவெளி

ஒரு சராசரி மனிதன் ஆணாயின் 4 மாதத்திற்கு ஒரு முறையும் பெண்ணாயின் 6 மாதத்திற்கு ஒரு முறையும் இரத்ததானம் செய்யலாம். சாதாரண உணவு வகைகளை உட்கொள்ளும் ஒருவர் இரண்டு கிழமைகளுக்குள் தான் இழந்த இரத்தத்தை திரும்பவும் பெற்றுக் கொண்டு விடுகிறார். இரத்ததானம் செய்வதற்கு முன்னரோ பின்னரோ விசேட உணவு வகைகள் அவசியமற்றவை.

இரத்ததானம் செய்வதகான வயதெல்லையாக 18 முதல் 60 வயது ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.

வழங்கியின் குருதியில் 30 வீதத்துக்குக் கூடிய ஈமோகுளோபின் நிறப்பொருள் காணப்பட்டால்தான் அவர் குருதியை வழங்கமுடியும்.

யாழ். மருத்துவமனை இரத்த வங்கியில் -

12 கிராம் கன செ.மீற்றருக்கு மேற்பட்ட ஈமோகுளோபின் கொண்ட ஆணும் -

11 கிராம் கன செ.மீற்றருக்கு மேற்பட்ட ஈமோகுளோபின் கொண்ட பெண்ணும் -

இரத்ததானம் செய்ய அனுமதிக்கப்படுகின்றார்கள்.

ஒரு தடவை சாதாரண ஆள் வழங்கக் கூடிய இரத்தத்தின் அளவு பின்வருமாறு:-

90 - 110 இறாத்தல் நிறையுடைய ஆண் - 250 மி.லீற்றர் அலகு.

110 இறாத்தலுக்கு மேற்பட்ட ஆண் - 500 மி.லீற்றர் அலகு.

95 - 120 இறாத்தல் நிறையுடைய பெண் - 250 மி.லீற்றர் அலகு.

120 இறாத்தலுக்கு மேற்பட்ட பெண் - 500 மி.லீற்றர் அலகு.

பணத்தேவைக்காக அதிகாரிகளிடம் பொய் சொல்லி தமது இரத்தத்தை விற்கும் கூட்டங்களுக்கும் நம்மிடத்தில் குறைவில்லை. இவர்களால் நாம் கடுமையான நோய்களின் தாக்கத்துக்கு அநியாயமாக ஆட்பட நேரிடும். ஆகவே தரகர்களிடம் பணம் கொடுத்து இரத்தம் வாங்கும் முறைமை மாறவேண்டும். அதற்கு மக்கள் ஒவ்வொருவரிடமும் விழிப்புணர்வு ஏற்படவேண்டும். இரத்ததானம் பற்றிய அச்ச உணர்வு நீங்கினால் இரத்தத்துக்குத் தட்டுப்பாடு ஏற்படமாட்டாது. இங்கு நாம் இரத்த தானம் செய்தவற்குத் தகுதியற்றவர்கள் யார் என்பதையும் தெரிந்திருத்தல் இன்றியமையாததாகின்றது.

நிரந்தரமாக இரத்ததானம் செய்யக்கூடாதவர்கள்:-

-ஈரலழற்சிநோய்க்குட்பட்டவர்கள்.

-எந்தவகையான செங்கமாரி நோய்க்கேனும் உட்பட்டவர்கள்.

-எய்ட்ஸ் நோய்க்குட்பட்டவர்கள்.

- எய்ட்ஸ் நோய் வரக்கூடிய சந்தர்ப்பங்களை அதிகம் கொண்டிருப்பவர்கள்.(உதாரணமாக ஓரினச் சேர்க்கையில் ஈடுபடும் ஆண்கள், போதை வஸ்து பாவனையாளர்கள், விபச்சாரம் செய்வோர், மேற்குறிப்பிட்டவர்களுடன் உடலுறவுகொள்பவர்கள்.)

- இருதய நோய் உள்ளவர்கள்.

- குருதி சம்பந்தப்பட்ட நோயுள்ளவர்கள்.

- வலிப்பு நோயுள்ளவர்கள்.

இவைதவிர பரிசோதனையின் போது கண்டுபிடிக்கப்படும் சில தற்காலிகக் காரணங்களுக்காகவும் இரத்த வங்கியதிகாரியினால் இரத்தம் நிராகரிக்கப்படுவதுண்டு.

குருதி மாற்றீடு செய்யும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் முழுக்குருதியும் வழங்கப்படுவதில்லை. சந்தர்ப்பத்துக்கேற்ப முழுக்குருதி, குருதிச் சிறுதட்டுக்கள், செங்குழியங்கள், குருதி முதலுரு என இரத்த வங்கியில் சேகரித்து வைத்து வழங்கப்படும்.

செங்குழியங்களை 35 நாள்களுக்கு மாத்திரமே சேகரித்துவைத்து பாதுகாக்க முடியும். அதேபோல் குருதிச்சிறுதட்டுக்கள் 5 நாள்கள் வரையும் குருதிமுதலுரு 6 மாதங்கள் வரையும் பாதுகாக்கப்படலாம். இதன் மூலம் இரத்தவங்கிக்கு இரத்தம் ஏன் தொடர்ந்து தேவைப்படுகின்றது என்பதை நாம் இலகுவில் புரிந்துகொள்ளலாம்.

ஒரு வழங்கியிடமிருந்து எடுக்கப்படும் குருதியானது பைக்கட்டில் வழங்கியின் பெயர், விலாசம், பிறந்த திகதி, குருதிவகை, அதற்குரிய இலக்கம், திகதி, நேரம் என்பன குறிக்கப்பட்டே எடுக்கப்படுகின்றது.

அதேபோல் குருதியை வழங்கும் போதும் முடிவுத்திகதி, நிறமாற்றமுள்ளதா, ஒழுக்குள்ளதா, குருதி உறைந்துள்ளதா, சேதமுற்றுள்ளதா என்பன அவதானிக்கப்பட்டே வழங்கப்படுகின்றது.

ஆரோக்கியமாக வாழும் எவருக்கும் குருதி வழங்குவதென்பது ஒரு கடினமான காரியமல்ல. எமது வீணான மனப்பயத்தினால்தான் எத்தனையோ பேர் இரத்தமின்றி இறந்து கொண்டிருக்கின்றார்கள்.

யாழ். போதனாவைத்தியசாலையில் இரத்த வங்கியில் இரத்தம் எடுக்கும் முன் பரிசோதனைக்குட்படுத்தி மேற்குறிப்பிட்ட பின்னடைவுக் காரணங்கள் இல்லாதவர்கள் இரத்தம் வழங்க அனுமதிக்கப்படுகிறார்கள். ஒருமுறை பாவித்தவுடன் வீசிவிடும் ஊசியே ஒவ்வொரு முறையும் புதிது புதிதாய் பாவிக்கப்படுகின்றது. இதனால் இரத்ததானத்தின் போது எமக்கு எந்தவிதமான நோய் பரவுவதற்கான சந்தர்ப்பங்களும் இல்லாமற் போய்விடுகின்றது.

**வானதி வரதன்**
**(யாழ். மருத்துவபீட மாணவி)**

யாழ். வைத்தியசாலையில் தினமும் காலை 8.00 மணி முதல் 4.00 மணிவரை (ஞாயிற்றுக்கிழமைகளில் நண்பகல் 1.00 மணிவரை) இரத்த தானம் செய்வதற்கான வசதியுண்டு.

இருபதுக்கு மேற்பட்ட எண்ணிக்கையானோர் ஒரே இடத்தில் (உதாரணமாக கல்வி நிறுவனத்தில்) இரத்ததானம் செய்ய விரும்பி அறிவித்தால் இரத்தவங்கியினர் நேரில் வந்து எடுத்துச் செல்வார்கள்.

நாம் மனது வைத்தால் இலகுவில் செய்யக்கூடியதும் மகத்தான உயிர்காக்கும் உன்னத தானமாகவும் விளங்கும் இரத்ததானத்தை இன்றே செய்ய விரைவோம். எதுவித தயக்கமுமின்றி இந்த உயிர் காக்கும் உன்னத போராட்டத்தில் நாமும் இணைவோம். *

# "மடவை மன்ற வாழிய முருகே"

இராம காதையைச் செய்யுள் வடிவில் தந்தவர் கம்பநாடர். இராமகாதை ஆரணிய காண்டத்தில் சூர்ப்பனகை படலம் வருகின்றது. இராம இலக்குவர்கள் கோதாவரி ஆற்றைக் கடக்கும் செய்தி கூறப்படுகின்றது. பாடலைப் படியுங்கள்.

*புவியினுக்கு அணியாய் ஆன்றபொருள் தந்து புலத்திற்று ஆகி,*
*அவியகத் துறைகள் தாங்கி, ஐந்திணை நெறி அளாவிச்,*
*சவியுறத் தெளிந்து தண் என்று ஒழுக்கமும் தழுவிச் சான்றோர்*
*கவியெனக் கிடந்த கோதாவரியினை வீரர் கண்டார்.*

ஆறு, சான்றோர் கவியுடன் ஒப்பிடப்படுகின்றது. பாடல் சிலேடை நயம்கொண்டு விளங்குகின்றது.

ஆற்றினை எடுத்துக்கொள்வோம். ஆறு பூமிக்கு அணிகலம். மணியும் பொன்னும் ஆரமும் அகிலும் ஆம் பொருளகள் தந்து, விளை புலங்கள் வளர்த்து, புனித நீர்த்துறைகளை உடையதாகி, ஐவகை நிலங்களினூடு, தெளிவடைந்து, குளிர்ந்து ஒழுகி நடக்கின்றது.

**தேன்கூடு**

சான்றோர் கவியை - பாட்டினை - செய்யுளை எடுத்துக் கொள்வோம். கவிதையானது உவமை முதலிய பல்வேறு அணிகளை உடையதாகி, அறம், பொருள், இன்பமாம் பொருள்களைத் தந்து; அறிவை விளைத்து, அமிர் தொத்த அகப்பொருள் துறைகளை உடையதாகி, அன்பின் ஐந்திணைப்பாற்பட்டு, புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் எனும் ஒழுக்கங்களை இசைத்து, தண்ணென்று இனிய நடையுடன் நடக்கும்.

'பாம்பறியும் பாம்பின் கால்' என்பார்கள். கவிச்சக்கரவர்த்தி கம்பநாடர், உண்மைக் கவிகளை, ஆழம்கண்டு அறிய வல்லவர் அன்றோ! அவரால் சான்றோர் என்று குறிப்பிடப் பட்டோர், 'நுண்மாண் நுழைபுலம் மிக்க மேலவர் அன்றோ! அவரிடம் சான்றாண்மைக் குணம் குடிகொண்டிருக்கும். சங்க காலப் புலவோர் எல்லாம் அத்தகையர் ஆவார். அவர்களைக் குறிக்கும் போது சங்கச் சான்றோர் என்றே அறிஞர்கள் வழங்குகின்றனர்.

கடந்த வாரம் சங்க இலக்கியங்களுள் ஒன்றாய நற்றிணை நாற்பது என்னும் நூலில் இடம்பெற்ற ஒரு செய்யுள் பற்றித் தெரிந்துகொண்டோம். இவ்வாரம் மற்றும் ஒரு செய்யுளைப் பற்றிச் சிந்திப்போம்.

பிறப்பு, குடிமை, அன்பு, அழகு முதலிய நற்குணங்கள் அமைந்த நங்கை நல்லாளைக் காண்கின்றோம். அவள், தன்னேரில்லாத் தலைவன் ஒருவனைக் காதலித்தாள். இருவரும் அன்புடன் பழகிவருகின்றனர்.

அவனும்தான், மலைவாணர் மகன். அம்மலைச் சாரலில் தெய்வத் தன்மை வாய்ந்த நீர்ச்சுனை ஒன்று உண்டு. அச்சுனையில் குவளை மலர்கள், இலைகளை விலக்கி மேலெழுந்து நிற்கின்றன. அப்பூக்களை யாரும் பறிப்பதில்லை. அங்கு செங்காந்தள் மலர்களும் உண்டு. மலைச்சாரலில் அருவி ஒலி எழுப்பி வீழ்கின்றது. அவ்வொலிக்கு இயைய அங்கு வதியும் சூரரமகளிர் ஆடுவர்.

**சிந்திப்போம் செயற்படுவோம்**

ஆம். தன்னேர் இல்லாத் தலைவன் சிலநாள்களாக அங்கு வராதொழிந்தான். கற்புக்கடம்பூண்ட தலைவி அவனைக் காணாமையால் மெலிவுற்றாள். பாலும் உண்ணாள்; பழமும் உண்ணாள்; மெலிவெய்தினாள்.

இந்நிலை கண்டாள் அன்னை. ஈன்ற வயிறு பொறுக்குமா? இல்லை! இல்லை!! அந்த முருகன் - அழகன் - இவளை அணங்செய்தனனோ - வருத்தம் இழைத்தனனோ - என வாடுகிறாள். பண்டையோர் வழக்கப்படி வேலனுக்கு வெறியாட்டயர்ந்தால் நோய் தீரும் என்று எண்ணினாள். வெறியாட்டு விழாவும் தொடங்கிவிட்டது. படிமத்தான் உருவேறி ஆடுகிறான். இந்நாள் வழக்கில் கூறுவதாயின் சன்னதம் ஆடுகிறான். ஆருயிர்த்தோழி ஓடோடி வருகின்றாள். என்ன துணிச்சல்! நேராகப் படிமத்தானைப் பார்க்கின்றாள். துணிச்சலுடன் தொடருகிறாள். 'ஐய! முருகு! எம்தலைவிக்கு, நும்மால் வருத்தம் ஏற்படவில்லை. அதனையான் நன்கனம் அறிவேன். எந்தலைவன் வருகை தாழ்த்ததனாலேயே அவளுக்கு நோய் உண்டாயிற்று. இவ்வெறியாட்டயர் களத்துக்கு வந்த நீ, கடவுளாயினும் ஆகுக. நிச்சயமாக நீ மடவன் - அறிவிலி - வாழிய' என்று இகழ்ச்சிக் குறிப்புடன் கூறிவைக்கின்றாள்.

இனி நற்றிணைச் செய்யுளைப் படிப்போம்.

கடவுட் கற்சுனை அடையிறந்(து) அவிழ்ந்த
பறியாக் குவளை மலரோடு காந்தள்
குருதி ஒண்பூ உருகெழக் கட்டிப்
பெருவரை அடுக்கம் பொற்பச் சூர்மகள்
அருவி இன்னியத்(து) ஆடும் நாடன்
மார்புதர வந்த படர்மலி அருநோய்
நின்அணங்(கு) அன்மை அறிந்தும் அண்ணாந்து
கார்நறுங் கடம்பின் கண்ணி சூடி,
வேலன் வேண்ட வெறிமனை வந்தோய்!
கடவுள் ஆயினும் ஆக
மடவை மன்ற வாழிய முருகே.

(கல் - மலை; சுனை - நீர்நிலை; அடை-இலை; பறியா - பிடுங்கப்படாத(கடவுட்சுனை ஆதலின் பிறர் அதில் தீண்டார் என்க); வரை - மலை; அடுக்கம் - சாரல்; சூர்மகள் - அச்சம் தரும் தெய்வப் பெண்; அருநோய் - காமநோய்; அணங்கு - வருத்தம்)

படிமத்தான் வேலேந்தி ஆடுதலின் வேலன் எனப்பட்டான். 'வெறியாட்டு என்பது, தெய்வம் ஆவேசித்து ஆடும் கூத்தாகும். இளம் மகளிர் நோயுற்றபோது அது தெய்வந்தர வந்ததென்று கருதி அன்னையர் விழாவெடுத்துப் படிமத்தான் வாயிலாக அதனைத் தீர்ப்பித்தல் பண்டை நாள் வழக்கம் என்பர். இனி, இப்பாடல் ஒரு குட்டி நாடகம் போன்று இருப்பதையும் நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. இதில் வரும் கதை மாந்தர், தலைவன், தலைவி, நற்றாய், தோழி முதலியவர்களாகும். பாத்திரப்பண்புகள் நாம் உணர்ந்து இன்புறற்கு உரியனவாகும். தோழியின் ஆற்றலே ஆற்றல்!

(தொடரும்)

- சிகண்டியார்

# தாய்க்கு அஞ்சாதவன் கூட தாரத்துக்கு அஞ்சுகிறானே ?


**உடுவில். சதீஸ்.**
மின்சாரம் - சம்சாரம் ஒப்பிடுக?
☺**ஒன்று ஒளி கொடுக்கும். மற்றையது வம்சாவளி கொடுக்கும்.**

❀ ❀ ❀

**நல்லூர். ரகு.**
தமிழ் 'கல்ச்சர்' (Culture) யாரிடம் முழுமையாக உள்ளது?
☺**அக்றிகல்ச்சரில் ஈடுபடும் தமிழ் விவசாயிகளிடம் உள்ளதே!**

❀ ❀ ❀

**மட்டுவில். சுசி.**
யானையைப் பூனையாக்குவது எது?



☺**திருமணம்தான். பல யானைகள் திருமணமானதும் மதம் அடங்கி சுளகால் அடி வாங்குகின்றனவே!**

❀ ❀ ❀

**கோப்பாய். ஜெயா.**
என் அயல்வீட்டுக்காரர் மனைவியைக் கொழும்பில் விட்டுவிட்டு வந்து இங்கு கூத்தடிக்கின்றாரே?
☺**சில கூத்துக்களை மனைவிக்குத் தணிக்கை செய்கின்றார்.**

❀ ❀ ❀

**கோப்பாய். சுதா.**
மூன்று மாதத்தில் தீர்வு என்கின்றாரே அம்மணி?
☺**உது பிள்ளையார் கலியாணம் போன்ற கதைதான். மூன்று தசாப்தங்களாக உதைத்தானே சொல்லி வருகினம்...!**

❀ ❀ ❀

**சங்குவேலி. வரதன்.**
கட்சி தாவிய ஐவரின் நிலைமை என்ன?
☺**அரசனை நம்பிப் புருஷனைக் கைவிட்ட கதைதான். அண்மையில் வந்த அமைச்சர் பதவியோடை எம்.பிப் பதவியும் எல்லோ அள்ளுண்டு போகப்போகுது!**

❀ ❀ ❀

**சில்லாலை. சுமிதா.**
நான் போன பிறப்பில் நாயாகப் பிறந்ததாகச் சோதிடர் சொல்கின்றாரே?
☺Take it easy. **இதற்குப் போய் சோதிடருடன் கொழுவுவதா?**

❀ ❀ ❀

**சங்கானை. சபேசன்.**
தண்ணியில் மிதந்த அனுபவம் உண்டா?



☺**தண்ணீரில் மிதந்ததுண்டு. ஆனால் 'தண்ணி'யில் மிதந்ததைப் பார்த்ததோடு சரி.**

❀ ❀ ❀

**அல்லைப்பிட்டி. ரகு.**
சந்தேகம் கொண்ட கணவனுடன் வாழ்வது எப்படிப்பட்டது?
☺**காந்தோண்டிச் செடியை மடியில் கட்டி வைத்திருப்பது போன்றது.**

❀ ❀ ❀

**உடுவில். சிறி.**
கவலைப்படாதவர் யார்?
☺**ஞானியும் குழந்தையும். எல்லாம் தெரிந்ததால் ஞானிக்குக் கவலையில்லை. எதுவும் தெரியாததால் குழந்தைக்குக் கவலை இல்லை.**

❀ ❀ ❀

**தெல்லிப்பளை. மோகன்.**
என் காதலியின் நடை பிழை அதனால் கைவிட்டுவிட்டேன். தப்பா?
☺**நீர் கைவிட்டதால் நடை பிழைத்ததா? அல்லது நடைபிழைத்ததால் கைவிட்டீரா?**

❀ ❀ ❀

**பளை. வாகீசன்.**
ஆடுகள் எந்நேரமும் மேய்ந்து கொண்டிருப்பது ஏன்?
☺**போன பிறப்பில் ஆண்களாகப் பிறந்து, புரிந்த குற்றத்திற்காக...!**

❀ ❀ ❀

**இணுவில். இராஜா.**
கிரகப்படி, மூன்று வருடங்களுக்கு திருமணம் என்ற பேச்சே கூடாது என்கின்றாரே என் சோதிடர்?
☺**'நாக்கைப் பிடுங்கிற தாகத்துக்கு, நாள் பார்த்தானாம் கிணறு வெட்ட' என்ற கதை அல்லவா இது?**

❀ ❀ ❀

**வேலணை. வரன்.**
தவறுக்கு என்னைக் குற்றம் சுமத்துகின்றாளே என் காதலி...!
☺**ஒரு கைதட்டி ஓசை வந்திருக்குமா?**

❀ ❀ ❀

**விளான். நிஷா.**
உடலில் பலமான உறுப்பு எது?
☺**பிளவும் நீட்டமும்! (வாய்ப்பிளவையும் அதனுள் இருக்கும் நீண்ட நாக்கையும் கூறினேன். பலம் வாய்ந்த அரசையே கவிழ்க்கக் கூடியது வாய் வீச்சு!)**

❀ ❀ ❀

**சாவகச்சேரி. விதுரன்.**
நான் பிடித்த முயலுக்கு மூன்று கால் என்கின்றாளே என் மனைவி......!



☺**என்ன செய்வது? ஆழம்றியாமல் காலை விட்டு விட்டீர்! இனி சாண் போனால் என்ன, முழம் போனால் என்ன? வாங்கிய சீதனத்துக்காக ஆமாம் போட வேண்டியது தானே!**

❀ ❀ ❀

**மட்டுவில். என்.மௌலீ.**
வாழ்க்கையில் ருசி தெரியவருவது எப்போது?
☺**பசி எழும்போது...!**

## பிடிவாதம் பிடிக்கும் பெண்கள் குறித்து.....?

**மண்டைதீவு. பாவி.**
திருவாளர் திருகுதாளத்தின் திருவிளையாடல்கள், திருக்கூத்துக்கள் எல்லை மீறுகின்றனவே...?
☺**தங்கள் சுயநலம் கருதி இங்கு சிலர் அவர் திருகுவதற்கு வசதியாக வலக்கையாக இருந்து புரி வெட்டிக் கொடுக்கின்றார்களே!**

❀ ❀ ❀

**வேலணை. சரோ.**
உயிர் எங்கே தோன்றுகின்றது?
☺**உணர்ச்சியின் சங்கமத்தில்!**

❀ ❀ ❀

**சுதுமலை. சுரேஷ்.**
நாட்டைப் பீடித்துள்ள சனி எது?
☺**சனீஸ்வரனின் தோற்றத்தைப் பாரும். ஒற்றைக் கண் குருடு. காலில் முடம். இவைதானே இன்று நாட்டை வழிநடத்துகின்றன. ஆட்சிப் பீடமே இன்று சனிதான்.**

❀ ❀ ❀

**இளவாலை. ஜஸ்மின்.**
உங்கள் வீட்டில் இல்லாள் வைப்பாட்டியாமே! உண்மையா?
☺**ஆம். எனக்கு வீட்டில் இல்லாத ஆள் வைப்பாட்டிதான்!**

❀ ❀ ❀

**மந்துவில். விவேக்.**
குடும்ப வாழ்வில் மேலிடம் யாருக்கு? கணவனுக்கா? மனைவிக்கா?

## குடும்ப வாழ்வில் மேலிடம் ஆணுக்கா? பெண்ணுக்கா?

☺**ஓடமும் ஒரு நாள் வண்டியில் ஏறும். வண்டியும் ஒரு நாள் ஓடத்தில் ஏறும்.**

❀ ❀ ❀

**கொக்குவில். நாதன்.**
வெளிநாடுகள் எல்லாம் போய் ஒழுக்கத்தோடு வந்த நான் உள்நாட்டில் - ஊரில் - கெட்டு விடுவேனோ என்று பயமாக இருக்கின்றதே?
☺**கிணறுக்குத் தப்பி துரவில் விழலாமா தம்பி?**

❀ ❀ ❀

**கொட்டடி. ஜெனா.**
தாய்க்கு அஞ்சாதவன் இடையில் வந்த தாரத்துக்கு அஞ்சுகிறானே......!

# வித்துவான் பதில்கள்

☺**முன்னே பிறந்த காதை விட பின்னே வந்த காது பலம்தானே! அது மாதிரித் தான் இதுவும்!**

❀ ❀ ❀

**மல்லாகம். வரதன்.**
என் நண்பன் கலியாணத்துக்குப் பின்னடிக்கின்றான். வெளிநாட்டுக்கு அனுப்பினால் அங்கேயாவது மனம் மாறுமா?
☺**உள்ளூரில் ஓணான் பிடிக்க முடியாதவன் உடையார்பாளையம் போய் உடும்பு பிடிப்பானா?**

❀ ❀ ❀

**நாவலர்மடம். தோழன்.**
'கப்'(CAP) இல்லாத பென் (PEN) உதவாது என்கின்றாரே என் ஆசிரியர்?
☺**'கப்' இல்லாத 'பென்' மட்டுமல்ல; 'கற்பு' இல்லாத 'பெண்' கூட அப்படித் தான்!**

❀ ❀ ❀

**மானிப்பாய். முரளி.**
பெரியண்ணாக்கள் வந்தால் இங்குள்ள சின்னண்மார் கதி...?
☺**அதோகதி...!**

❀ ❀ ❀

**முடமாவடி. ராகுலன்.**
உருத்திராட்சப் பூனைகளாக நடிக்கும் சாமிமார் குறித்து.....!
☺**அகோர தபசி - விபரீத சோரன்!**

❀ ❀ ❀

**கந்தரோடை. வேலவன்.**
பிடிவாதம் பிடிக்கும் பெண்கள் குறித்து?
☺**பிடிவாதம் குடிநாசம்!**

❀ ❀ ❀

**கரவெட்டி. ரூபா.**
படிக்காமல் சுற்றும் இளைஞனைக் காதலிக்கலாமா?
☺**உம்மையும் சுத்தி விட மாட்டார் என்பதற்கு என்ன உத்தரவாதம்?**

❀ ❀ ❀

**விளான். வசந்த்.**
சமையல், துவையல், பெருக்குதல் உட்பட எல்லா வீட்டு வேலைகளையும் செய்யும் கணவன்மார் குறித்து....?



☺**கூலியை (சீதனத்தை) முதலில் வாங்கிக் கொண்டால் வேலை செய்து தானே ஆக வேண்டும்!**

❀ ❀ ❀

**நல்லூர். ப்ரியா.**
'வேள்வித் தீ' பார்த்தீர்களா?
☺**நெஞ்சை (சு/தொ)ட்டது**

❀ ❀ ❀

**நவாலி. இரா.**
அண்மைக் காலத்தில் உங்கள் நெஞ்சை அதிரவைத்த சம்பவம் எது?
☺**மூன்று மாதக் குழந்தையை சுவருடன் மோதுவித்த போதைத் தந்தை; வேலைக்காரச் சிறுமியை கொடுமைப்படுத்திய பேதைப் பெண்!**

❀ ❀ ❀

**சங்குவேலி. சுகி.**
வித்து! நீங்கள் அடிமைப் பெண்ணாமே....?
☺**இல்லை. பெண்(ணின்) அடிமை!**

❀ ❀ ❀

**வேரவில். வினோ.**
ராமன் ஏகபத்தினி விரதன். ஆனால் அவன் தந்தையார் தசரதனுக்கு மட்டும் பதினாறாயிரம் மனைவிமாராமே.......!
☺**தந்தை பட்ட அவலத்தைக் கண்டு தானோ என்னவோ 'ஒன்றே போதும்!' என்று ஒ(து/டு)ங்கிக் கொண்டான் இராமன்!**

❀ ❀ ❀

**கோண்டாவில். சுயர்சன்.**
வித்தா! நீ எம் சொத்து! சஞ்சீவியின் முத்து! நீ புரிவது சித்து! பெண்களுக்கு மட்டும் ஏன் நீயொரு பித்து?



☺**என் சுத்துமாத்து - அங்கு வெத்து வேட்டு! அதனால்தான்.**

❀ ❀ ❀

**பெருங்காடு. பூமகள்.**
கலியானம் ஆயிரம் காலத்துப் பயிர் என்றால் காதல்.....?
☺**அந்தப் பயிருக்குப் போடும் உரம். ஆனால் சில சமயம் அது பயிர்கொல்லியாகவும் மாறிவிடுகிறதே!**

❀ ❀ ❀

**சுண்டிக்குளி. வேரன்.**
பெற்றோர் நெருக்குகின்றார்கள் என்பதற்காகப் பொருந்தா மணம் செய்யலாமா?
☺**தகப்பன் வெட்டிய கிணறு என்பதற்காக அதற்குள் தலைகீழாக விழலாமா?**

❀ ❀ ❀

**மானிப்பாய். தாஜ்.**
ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?
☺**'ஐம்பதிலும் ஆசைவரும்' என்பது நீர் கேள்விப்பட்டதில்லையா?**

❀ ❀ ❀

**வங்களாவடி. தங்கன்.**
எமது சித்திர ஆசிரியர், புரியாத படங்களை வரைகின்றாரே?
☺**அவர் வி"சித்திர' ஆசிரியர் போலும்!**

❀ ❀ ❀

**ஊரெழு. தீபன்.**
வீட்டில் கிளிபோல மனைவி இருக்க குரங்கு போன்ற சின்னவீடுகளை நாடுவோரின் எண்ணம்தான் என்னவோ?
☺**'கோழி முடமானாலும் குழம்பு ருசியானால் சரி' என்ற அபிப்பிராயம் உள்ளவர்கள் போலும்!**

❀ ❀ ❀

**அராலி. ருமேஷ்.**
வீதிகளில் சுழன்றாலும் கெட்டுப்போகாமல் இருக்கின்றார்களே நம் குமரிகள்.....!
☺**அவர்களில் பலர் இடவசதி இல்லாததால் பதிவிரதைகள்!**

❀ ❀ ❀

**கொழும்பு. சீலன்.**
வாலைக்குமரி என்றால் வயது என்ன?
☺**சீறுகிற பாம்பைப் பிடித்து அடக்குகின்ற பருவ வயது!**

### இவ்வார ஜோக்

பிரசவ வார்ட்டின் வாசலில் கணவன் காத்திருந்தான். 'துவா..... துவா....!' சத்தம். பிள்ளை சுகமாகப் பிறந்த நிம்மதி கணவனுக்கு. அடுத்து, என்ன குழந்தை என்று அறியும் ஆவல்.

பிரசவ அறைக்குள் இருந்து, நேர்ஸ் பிள்ளையைத் துணியால் மூடித் தூக்கி வருவதைக் கண்ட கணவன் ஓடிச் சென்றான்.

"உங்களுக்குப் பெண்பிள்ளை" என்றாள் நேர்ஸ்.

கணவனுக்கு அவளின்பதிலில் திருப்தியில்லை. சந்தேகம். பிள்ளையை மூடியிருந்த துணிக்குள் கையைவிட்டுத் தடவிப் பார்த்தான்.

"இல்லை! இல்லை!! ஆண் குழந்தை" என்று கத்தினான் அவன்.

நேர்ஸ்"ஐயோ..... விடுங்க..... அது என் விரல்!" என்றாள் எரிச்சலுடன்!

# அப்பாவிகளை பலி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சீழ்க்கட்டிகள்.

* பக்டீரியாக்களினால் இதய அகச்சவ்வில் ஏற்படுத்தப்படும் அழற்சி.

* நியூமோனியாவும் மூளை மென் சவ்வழற்சியும்.

## நிலையான பாதிப்புக்கள்

மேற்குறிப்பிட்ட உயிராபத்தை ஏற்படுத்தக் கூடிய விளைவுகளிலிருந்து தப்பித்துக் கொண்டாலும் கருக்கலைப்பின் பாதிப்புக்கள் முற்றாக நீங்கிவிடுவதில்லை.

மலட்டுத் தன்மை:- கருப்பை, பலோப்பியன் குழாய்களில் ஏற்படும் கிருமித் தொற்று மற்றும் கருப்பைச் சுவரில் ஏற்படும் காயங்களினாலும் கருத்தரிக்கும் வாய்ப்புக்கள் பெருமளவில் குறைகின்றன. கருக்கலைப்பு செய்பவர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் பின்னாளில் கருத்தரிப்பதேயில்லை என்று அறியப்பட்டுள்ளது.

* சுயமான கருச்சிதைவு (SPO - NTANEOUR ABORTION:- கருக்கலைப்பின் போது கருப்பைக் கழுத்தானது அதிகளவில் விரிவடையைச் செய்யபடுவதனால் மீண்டும் மீண்டும் சுயமான கருச் சிதைவு ஏற்படுகின்றது.

* நிறை குறைந்த - முழுமையாக வளர்ச்சியடையாத - குழந்தைகள் பிறத்தல்.

* மாதவிடாய் ஒழுங்கீனங்கள் ஏற்படல்.

* கருப்பைக்கு வெளியேயான கருக்கட்டல் நிகழல்.

* கருப்பைச் சுவர் வெடித்தல்.

* உளரீதியான பாதிப்புக்கள்.

கருக்கலைப்புக்கு உள்ளான பெண்கள் குற்றஉணர்வினாலும், பச்சாதபத்தினாலும், சமூகத்திலிருந்து ஒதுக்கப்படுவதனாலும் பல உளரீதியான பாதிப்புக்களுக்கு தள்ளப்படுகின்றனர். இவ்வாறான உளரீதியான பாதிப்புக்களுக்கு தாய் மட்டுமல்ல, முழுக் குடும்பமே உட்பட வேண்டியிருக்கின்றது.

## குருதி ஒவ்வாமை ஏற்படுதல்

கருக்கலைப்பால் குருதி ஒவ்வாமை (Rh iso immunisation) ஏற்படுகிறது. கருக்கலைப்பு - மேற்கூறப்பட்ட மிகவும் பாரதூரமான - பின் விளைவுகளை ஏற்படுத்தினாலும் அதன் பாதிப்புக்கள் பின்வரும் பல்வேறுபட்ட காரணிகளில் தங்கியுள்ளது:-

* *செய்பவரின் தகுதியும் அனுபவமும்.* கருக்கலைப்பானது தகுதியில்லாத, அனுபவமில்லாதவர்களினால் நடத்தப்படும்போது பாதிப்பு அதிகமாகின்றது.

* *பயன்படுத்தப்படும் முறை.*

* *கருக்கலைப்பு செய்யப்படும் காலம்.* கருக்கலைப்பின் பாதகமான விளைவுகள் கருவின் வயதுடன் அதிகரிக்கிறது. 3 முதல் 6ஆம் மாதங்களில் செய்யப்படும் கருக்கலைப்பானது முதல் மூன்று மாதத்தில் செய்யப்படும் கருக் கலைப்பை விட நான்கு மடங்கு கூடுதலான பாதிப்பை ஏற்படுத்துகின்றது.

* *பெண்ணின் வயதும் உடல் நிலையும்.* பதினாறு வயதிற்குட்பட்ட சிறுமிகளில் இதன் பாதிப்பானது மற்றைய தாய்மார்களை விட மூன்று மடங்கு அதிகமானது.

* *மருத்துவ வசதிகள்.* கருக்கலைப்பினால் ஆபத்தான நிலை ஏற்படும் காலத்தில் உடனடியாக கிடைக்ககூடிய மருத்துவ வசதிகளையும்வாய்ப்புக்களையும் பொறுத்து அதன் பாதிப்பு அமையும்.

## சிகிச்சை ரீதியான கருக்கலைப்பு

சில சமயங்களில் கருக்கலைப்பானது சட்டபூர்வமாக அங்கீகரிக்கப்படுகின்றது. இதனால் சிகிச்சை ரீதியான கருக்கலைப்பு (Thrapcutic Abortion) செய்யப்படுகிறது.

கருவுற்றிருக்கும் தாய் அக் கருவைத் தொடர்ந்து தாங்குவதில் உயிராபத்து ஏற்படும் பட்சத்தில் தகுதியும் அனுபவமும் உள்ள வைத்தியர்களினால் கருக்கலைப்பு செய்யப்படுவதை இலங்கைச் சட்டம் அனுமதிக்கிறது.

இதனை மேற்கொள்ளும் வைத்தியர்கள் இலங்கை மருத்துவச் சங்கத்தில் இலங்கைச் சட்டக்கோவை 303 - 307 பிரிவுகளின் கீழ் பதிவு செய்யப்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

## சட்டம் என்ன சொல்கின்றது?

இலங்கையின் தண்டனைச் சட்டக்கோவை சட்டவிரோதமான கருக்கலைப்புத் தொடர்பாகக் கூறுவது என்ன?

* ஒருவர் கருவுற்றுள்ள பெண்ணொருத்தியின் கருவை அப்பெண்ணின் உயிரைக் காப்பாற்றும் நோக்கமல்லாது சிதையைச் செய்யின் அவர் மூன்று ஆண்டுகள் வரை மறியல் அல்லது குற்றப்பணம் அல்லது இரண்டிற்குமுள்ளாக்கப்படலாம்.

அப்பெண் உயிருடன் துடிக்கும் கருவை உடையவளாய் இருந்திருந்தால் செய்பவருக்கு ஏழு ஆண்டுகள் மறியலுடன் குற்றப்பணத்திற்கும் ஆளாக வேண்டும்.

இக்கருக்கலைப்பு தமக்கு தாமே செய்யப்படும் பொழுது அத்தாயே குற்றவாளியாகக் கருதப்படுகிறாள்.

* தாயின் சம்மதமின்றி கருக்கலைப்பு செய்யப்படும் பொழுது செய்பவர் இருபது வருட மறியலுடன் குற்றப்பணத்திற்கும் ஆளாதல் வேண்டும்.

* கருச்சிதைவை ஏற்படுத்தும் கருத்துடன் செய்யப்பட்ட ஒரு செயலினால் அப்பெண்ணிற்கு மரணம் ஏற்படுத்தும் ஒருவர் இருபது வருடங்கள் மறியல் தண்டனையுடன் குற்றப்பணத்திற்கும் ஆளாதல் வேண்டும்.

* பிள்ளை பிறப்பதற்கு முன் ஏதாவது ஒரு செயலினால் அப்பிள்ளை உயிருடன் பிறப்பதை தடுக்கின்ற அல்லது பிறந்தபின் இறக்கச் செய்கின்ற எவரும் அது தாயின் உயிரைக் காப்பதற்காகவன்றி இருக்கும் பட்சத்தில், பத்து ஆண்டுகள் மறியல் தண்டனையினால் அல்லது குற்றப் பணத்தினால் அல்லது இவை இரண்டிலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

* ஒருவர் குற்றத்திற்கு இடமான - மனிதவுயிர் போக்கலாகக் கூடிய - செயல் ஒன்றினால் உயிர்ப்புள்ள, பிறக்காத பிள்ளையின் மரணத்தினை ஏற்படுத்தினால் அவர் பத்து ஆண்டுகள் மறியல் தண்டனையுடன் குற்றப்பணத்திற்கும் ஆளாக வேண்டியேற்படும்.

இவ்வாறான சட்டவிரோதமான கருக்கலைப்பினால் ஏற்படும் உயிராபத்துக்கள் போன்ற பாதகமான விளைவுகளைக் குறைப்பதற்கு பின்வரும் சில வழிமுறைகளை நாடலாம்.

* கருத்தடை சம்பந்தமான அறிவை மக்களிடையே புகுத்துதல்
- வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை போன்ற தொடர்பு சாதனங்கள் மூலம்
- பாடசாலைகளில் பாலியற் கல்வியைப் புகுத்துதல்
- பெண்களிற்கான சிகிச்சை நிலையங்களில் (மகப்பேற்று, பெண் நோயியல்) கருத்தடை பற்றிய அறிவுரைகளை வழங்குதல்

* கருத்தடை சாதனங்களை இலகுவாகவும் எளிதாகவும் பெறக் கூடியதாக இருத்தல். எமது நாட்டில் பலரும் கருத்தடைச் சாதனங்களை பொது இடங்களில் வாங்குவதற்கு வெட்கம் காரணமாகப் பின் நிற்கிறார்கள். இதற்கு தற்பொழுது வெளிநாடுகளில் அறிமுகப்படுத்தியுள்ளது போன்று தானியங்கி இயந்திரமுறை விற்பனை நிலையங்களை ஏற்படுத்தலாம்.

* பெண்கள் எமது கலாசாரம், பண்பாடு போன்றவற்றிற்கேற்ப தமது வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டும். அந்நிலையில் இருந்து தவறி ஒரு கரு ஏற்படும் பட்சத்தில் அதைப் பெற்று வளர்க்கின்ற மனத்துணிவை வளர்க்க வேண்டும்.

* சட்டவிரோதமாகக் கருக்கலைப்பு செய்பவர்களை இனம் கண்டு அவர்களை சட்டத்தின் முன் நிறுத்துதல்.

கருக்கலைப்பானது வெளிநாடுகள் பலவற்றில் சட்டபூர்வமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. எமது நாட்டிலும் சில முக்கியமான - மிக அவசியமான - சந்தர்ப்பங்களில் கருக்கலைப்பை சட்டபூர்வமாக அங்கீகரித்து தகுதிவாய்ந்த மருத்துவர்களினால் கருக்கலைப்பை மேற்கொள்ளச் செய்யலாம்.

---

## அனிச்சம் பூ.....

(X ஆம் பக்கத் தொடர்ச்சி)

கோப்பி குடித்தபடியே விமர்சித்தார்கள். பெரும்பாலானவர்கள் விலகிப் போனார்கள். அமைதியான இரவில் மூச்சடைப்புக்கு, நெஞ்சுப் படபடப்புக்கு என வைத்தியர் கொடுத்திருந்த வீரியமான மாத்திரைகளை ஒவ்வொன்றாக விழுங்கத் தொடங்குகின்றாள் கண்ணம்மா.

நாளை விடியலில் மீண்டும் ஊர் கதைக்கும். மகள் மட்டுமல்ல தாயும் கூட அனிச்சம்பூ மாதிரி... பிரச்சினைகளைத் தாங்கமாட்டாமல்.... வளர்க்கப்பட்டு விட்டதாகவும்...ஒரு பிள்ளை செத்ததுக்காக இவளும் செத்துப் போனாளே... ச்சே... என்றும் சொல்லிச் சலித்துக்கொள்ளும்.

ஆனால் சமூகத்தில் தொடர்ந்தும் அனிச்சம்பூக்கள் மலர்ந்து கொண்டும் மடிந்து கொண்டுந்தானிருக்கும்.

**கரு:** முரண்பாடுகளுக்கு முகங்கொடுக்கத்தெரியாது வளர்கின்ற அல்லது வளர்க்கப்படுகின்ற பிள்ளைகளும் முள் முகங்காட்டும் சமூகமும்.

---

## இரு நாடுகளுக்கு.....

(II ஆம் பக்கத் தொடர்ச்சி)

செய்து வருகின்றனர்.

பூர்வாங்க தேர்தலில் போட்டியிடவுள்ள சட்டமா அதிபர் ஜேனெட் ரெனோ குடிவரவு, வெளிநாட்டவர் குடிவரவு சேவைகள் ஆணையாளரின் தீர்ப்புக்கு ஆதரவு தெரிவித்து வருகிறார். எலியனை திருப்பி அனுப்புவதற்கும் எதிர்ப்புத் தெரிவித்து வருகிறார். எலியன் விவகாரம் அமெரிக்காவில் பெரும் சர்ச்சைக்குரிய தொன்றாகிவிட்டது.

கியூபாவில் இருந்து வெளியேறி அமெரிக்காவில் வாழும் கியூபா நாட்டவர்கள், காஸ்ரோவுக்கு எதிராகப் பிரசாரம் செய்வதற்கு எலியன் விவகாரம் கைகொடுத்துள்ளது. ஆனால் கிளின்ரன் நிர்வாகத்துக்கு இது பெரும் ராஜீய நெருக்கடியைக் கொடுத்து வருகிறது.

சமீபத்தில் கியூப அரசும் அமெரிக்க அரசும் அகதிகள் பிரச்சினை தொடர்பாகப் பேச்சுவார்த்தை நடத்தி இருந்தன. உடன்பாடும் காணப்பட்டது. எலியன் விவகாரம் இதனை எல்லாம் குழப்பிவிடப் போகிறது.

தேர்தல் நடைபெற உள்ள நேரமாதலால் எலியன் விவகாரத்தை மிகவும் கவனமாகக் கையாள்வதற்கே கிளின்ரன் விரும்புகிறார். ஆனால் மியாமியில் நடைபெறும் காஸ்ரோ எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களும், ஹவானாவில் நடைபெறும் அமெரிக்க எதிர்ப்பு ஆர்ப்பட்டங்களும் கியூபாவின் நடவடிக்கைக்கு நியாயம் தேடி கியூபா வெளிவிவகார அமைச்சர் மேற்கொண்ட வெளிநாட்டுப் பயணங்களும், அமெரிக்காவில் இந்தப் பிரச்சினை அரசியல் மயப்படுத்தப்பட்டுவருவதும் கிளின்ரன் நிர்வாகத்தை நெருக்கடிக்குள் தள்ளிவிட்டுள்ளது என்பது இப்போது குறிப்பிடத்தக்கது.

---

## 'சிறுவர்சுடர்' விடைகள்

XVI ஆம் பக்கத்தில் பிரசுரமாகியுள்ள 'சிறுவர் சுடர்' பகுதிக்கான விடைகள் வருமாறு:-

### வித்தியாசம் தெரிகிறதா?

தலைமுடி, காப்பு, சப்பாத்து, தோடு, இடைபெல்ட், பாம்பின்உடல், வண்ணத்துப்பூச்சி, பூ, மரத்தின் இலை.


### பொருத்தமற்றது

B(Aயும் Dயும் மற்றும் Cயும் Eயும் மறுதலைச் சோடிகள்.

### வட்டத்தை நிரப்புங்கள்

B.

### மாயச் சதுரம்





### பாலைவனத்தில் முல்லா

இரண்டு உதவியாளர்கள்.(முதல் நாள் இரண்டு உதவியாளரிடமிருந்த உணவு, நீரை மூவரும் உண்டனர். மறுநாள் அந்த உதவியாளரிடம் மிகுதியாக இருந்த ஒருநாள் உணவு, நீருடன் அவரைத் திருப்பி அனுப்பிவிட்டார் முல்லா.

இரண்டாம் நாள் மற்றைய உதவியாளரிடமிருந்த உணவை இருவரும் உண்டனர். இரண்டாம் நாள் முடிவில் அந்த உதவியாளரிடம் இருநாள்களுக்கான உணவு, நீரும், முல்லாவிடம் நான்கு நாள்களுக்கான உணவு, நீரும் இருந்தன. உதவியாளரைத் திருப்பி அனுப்பிவிட்டு மேலும் நான்கு நாள் பயணத்தில் ஊர் போய்ச் சேர்ந்தார் முல்லா).


### முக்கோணப் புதிர்




---

# சொற்சிலம்பம்

## புதிர்ப் போட்டி இல.139




**சொற்சிலம்பம் இல. 139**

சஞ்சீவி,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

பெயர்: ..............................................................................

விலாசம்: ..........................................................................

..............................................................................

..............................இங்கே வெட்டுக..................................

முடிவுத் திகதி:- 04 - 02 - 2000

### இடமிருந்து வலம்

1. உடம்பை விட்டு உயிர் பிரிதல். 7. உள் கூடு. 8. பற்றித் தூக்கு. 9. வற்ற/திரவப் பொருள் வெளியேற. 10. ஓர் செடி. துணி நூற்க உதவும். 11. அன்பு கொண்டவன். 13. விளையாடும் இடம். 15. எலும்பு. 17. பிள்ளைகளின் விளையாட்டுக் கருவி. 19. கூட்டல் குறி. 20. பிரி. 21. இரண்டு/தலைமயிரிலும் இருக்கும். 22. ஒன்றிலும் குறைவு/ஓர் எண்ணின் பங்கு. 23. வஞ்சகம்/களவு.

### மேலிருந்து கீழ்

1. யாழ்ப்பாணத்தவருக்குப் பொதுவான சட்டம். 2. திரண்ட பதார்த்தம். 3. பத்திரிகை/சஞ்சிகை அச்சிடுவதற்கு முதல் தேவை. 4. தியான. 5. கவிச்சக்கரவர்த்தி இவன். 6. தங்குமிடம். 8. ஏமாற்றுக்காரன். 12.நிகழ்ச்சி. 14. நிறுவியவன். 15. எங்களின். 16. இணைவு. 18. சூரியன். 19. சாபமபோடு. 21. நனைந்த.

## சொற்சிலம்பம் 137 இன் விடைகள்

### இடமிருந்து வலம்

1. அவமரியாதை. 7. கன்னி. 8. துப்பல். 10. தலை. 11. பொங்கு. 12.பாகன். 14. அங்கம். 15. வரி. 16. சிங்கம். 17. எரிகல். 19. பருத்த. 20. மதி. 21. காணி. 22. துன்புறல்.

### மேலிருந்து கீழ்

1. அகம்பாவம். 2. வன். 3. மனிதன். 4. யாது. 5. தைப்பொங்கல். 6.நல்கும். 9. பங்கம். 13. கரி. 14. அங்கதன். 16. சிரித்து. 17. எரு. 18.பதில். 19. பணி. 20. மற.

பல நூற்றுக்கணக்கான வாசக நேயர்கள் இப்போட்டியில் ஆர்வத்துடன் பங்குபற்றி விடைகளை எழுதி அனுப்பியுள்ளனர். அவர்களில் அதிர்ஷ்ட சீட்டிழுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகள் வருமாறு:-

**முதலாம் பரிசு:-** செல்வி.அ.டோறா பான்சி(ஆசிரியை)
'அன்ரனி வாசா', 514/1 டச்சு றோட்,
உடுவில், சுன்னாகம்.

**இரண்டாம் பரிசு:-** க. பாலச்சந்திரன்,
பிள்ளையார் கோயிலடி,
கோப்பாய் மத்தி, கோப்பாய்.

**மூன்றாம் பரிசு:-** ப.யோகச்சந்திரன்,
4ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு.

புதிர்ப்போட்டிக்கு விடைகள் அனுப்பும்போது கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் போட்டியின் இலக்கத்தை தவறாது குறிப்பிடவும்.


சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசில்கள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன் - சஞ்சீவி ஊழியர்கள், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் போட்டியில் கலந்துகொள்ள முடியாது.

| | |
|---|---|
| முதற் பரிசு: | ரூபா 150.00 |
| இரண்டாம் பரிசு: | ரூபா 100.00 |
| மூன்றாம் பரிசு: | ரூபா 50.00 |

புதிர்ப்போட்டி இலக்கம் 138 இன் முடிவுகள் அடுத்தவார சஞ்சீவியில்.

# மாயச் சதுரம்




இங்குள்ள சதுரத்தின் மூலைகளிலும், அதன் பக்கங்களின் நடுப்புள்ளிகளிலும் சில இலக்கங்கள் உள்ளன. சதுரத்தின் நடுவிலுள்ள வட்டத்தினுள் 36 எனும் இலக்கம் உள்ளது.

சதுரத்தின் ஒவ்வொரு பக்கத்திலுமுள்ள ஒவ்வொரு மூன்று இலக்கங்களினதும் கூட்டுத்தொகை 36 ஆகும். அதுவே வட்டத்தினுள் காட்டப்பட்டுள்ளது.


நடுவிலுள்ள வட்டத்தினுள் 37 என்ற இலக்கத்தைப் போட்டுக் கொள்ளுங்கள். சதுரத்தின் பக்கங்களிலுள்ள எண்களை இடம்மாற்றி வைப்பதன்மூலம் அதன் ஒவ்வொரு பக்கத்திலுமுள்ள இலக்கங்களினதும் கூட்டுத்தொகைகள் 37 ஆக வரும்படி செய்து மாயச் சதுரத்தின் மகிமையை வெளிப்படுத்துங்கள்.

(விடை XV ஆம் பக்கத்தில்)

# பாரினைக் காக்கும் விதி

தந்தையும் தாயும் இறையென்போம்
~ இவரே
தூய மறை என்போம்
எண்ணும் எழுத்தும் கண்ணென்போம்
~ இவையே
எமக்குப் பண் என்போம்
உறுதியும் உழைப்பும் விழியென்போம்
~ இவையே
உயர வழி என்போம்
பொறுமையும் உண்மையும் ஒளியென்போம்
~ இவையே
பெருமை நெறி என்போம்
அமைதியும் அடக்கமும் பாதையென்போம்
~ இவையே
ஆன்றோர் மொழி என்போம்
ஈகையும் இசையும் குணமென்போம்
~ இவையே
இணைஇலா இன்பம் என்போம்
எளிமையும் இனிமையும் ஏணியென்போம்
~ இவையே
ஏற்றத்தின் தோணி என்போம்
பணிவும் துணிவும் துணையென்போம்
~ இவையே
பாரினைக் காக்கும் விதி என்போம்.

# முக்கோணப் புதிர்




இங்கே 10 சிறிய முக்கோணங்களைக் கொண்டு உருவமொன்று ஆக்கப்பட்டுள்ளது. அச்சிறிய முக்கோணங்களினுள் சில இலக்கங்களும் தரப்பட்டுள்ளன.

தலா 4 முக்கோணங்களை உள்ளடக்கிய 4 பெரிய முக்கோணங்களும் இங்குள்ள உருவத்தினுள் இருப்பதைச் சற்று உற்றுப்பார்த்தீர்களேயானால் தெரிந்து கொள்வீர்கள்.

நீங்கள் செய்ய வேண்டியது இதுதான், பெரிய முக்கோணம் ஒவ்வொன்றினுள்ளும் உள்ள நான்கு இலக்கங்களினதும் கூட்டுத்தொகை 50ஆக வரும்படி சிறிய முக்கோணங்களை இடம்மாற்றிவைக்க வேண்டும்.

எங்கே உங்கள் திறமையைக் காட்டுங்கள் பார்க்கலாம்.

(விடை XV ஆம் பக்கத்தில்)




# பாலைவனத்தில் முல்லா

ஒரு நாள் முல்லா அடுத்தநாட்டு அரண்மனைக்குச் சென்றார். முல்லாவின் புத்திசாலித்தனத்தை அறிந்திருந்த அந்நாட்டு மன்னன், 'என் மகளை மணந்துகொள் அல்லது கடும் தண்டனையைச் சந்திக்க வேண்டும்' என்று கூறினான்.



அழகு, புத்திசாலித்தனம் போன்ற எந்த அம்சமும் இல்லாத அந்த அரசகுமாரியை மணப்பதை விடவேறு கடும் தண்டனை இருக்க முடியாது என்று தீர்மானித்த முல்லா அதனை வாய்விட்டு அரசனுக்கும் கூறிவிட்டார். அரசனின் முகம் கோபத்தால் சிவந்தது.

'எதிரே தெரியும் நீண்ட பாலைவனத்தினூடாக உனது நாட்டை அடைந்துகொள். உனக்கோ உன்னுடன் வருபவர்களுக்கோ நான்கு நாள்களுக்கு மட்டும் போதுமான உணவு, நீர் வழங்கப்படும். பிரயாணம் கால் நடையாகவே செல்லவேண்டும். ஆனால் கால் நடையாகச் செல்வதானால் ஆறு நாள்கள் பிரயாணம் செய்துதான் பாலைவனத்தைக் கடக்க முடியும். இப்படி அனுப்புவதுதான் என்வழக்கம்' என்றான் அரசன்.



அதாவது நாலாம் நாள்முடிவில் பாலைவனத்தில் முல்லா இறந்து விடுவார் என்பது அரசனின் கணிப்பு.

'என்னுடன் சில உதவியாளர்களை அனுப்பவேண்டும்' என்றார் முல்லா.

'அதனால் என்ன பயன்? ஒவ்வொரு உதவியாளரும் நான்கு நாள்களுக்குத் தேவையான உணவு மற்றும் நீரைத்தானே கொண்டுவர முடியும், உன்னேடு சேர்ந்து அவர்களையும் இறக்கச் சொல்கிறாயா?' என்று கேட்டான் மன்னன்.

'நிச்சயம் அவர்களைச் சாகவிடமாட்டேன். நான் எனது நாட்டிற்குச் செல்லுமுன்பு உதவியாள்களைத் திரும்ப இங்கே அனுப்பி வைப்பேன்' என்று முல்லா உறுதி கூறினார்.

முல்லா தன் உறுதி மொழியைக் காப்பாற்றியதோடு மட்டுமல்ல, தானும் பத்திரமாகப் பாலைவனத்தைக் கடந்துவிட்டார். அப்படியானால் முல்லா தன்னுடன் குறைந்த பட்சம் எவ்வளவு உதவியாளர்களை அழைத்துச் சென்றிருப்பார் என்பதனைக் கூறுங்கள் பார்க்கலாம்!

(விடை XV ஆம் பக்கத்தில்)

# விடுகதைகள் பல - விடை ஒன்றே

1) கையளவே உருவம்; கணக்கு எல்லாம் கச்சிதம்
அவன் யார்?

2) கூடைக்காரி முதல் கோடீஸ்வரர் வரை வியாபாரம் என்றவுடன் முதலில் தேடுவது அவனையே.
அவன் யார்?

3) தட்டுத் தடுமாறும் நெட்டையர் நடுவில் பட்டெனக் கூறிடும் குட்டிக் கணக்கன்.
அவன் யார்?

4) உள்ளங்கைக்குள் இருந்திடுவான் உலகையே கணக்கிடுவான்.
அவன் யார்?

5) கூட்டுவான்; பெருக்குவான்; வேலைக்காரன் அல்லன்.
அவன் யார்?

விடை

(புழேழீஉஓஇஎஷ) டியாாூ௲ஷ

# தெரிந்து கொள்ளுங்கள்

## இரத்தப் புற்றுநோய்

மருத்துவர்கள் இதனை 'லூக்கேமியா' (LEUKAEMIA) என்கிறார்கள். இந்த நோய்க்கான காரணத்தை இன்னமும் முழுமையாகக் கண்டுபிடிக்கவில்லை. வைரஸ் கிருமிகள், அணுக் கதிர் வீச்சு மூலமும் இரத்தப்புற்றுநோய் உண்டாகலாம். இந்த நோய் இரத்த அணுக்களைப் பெரிதும் பாதிக்கின்றது. இதன் காரணமாக இரத்த அணுக்கள் முழு வளர்ச்சி அடையாமல் அரைகுறை வளர்ச்சியுடன் இரத்தத்தில் பணி செய்கின்றன. இரத்தச் சோகை, இரத்தம் இழப்பு, நீடித்த காய்ச்சல் போன்ற நிலைமை தொடர்ந்து தொல்லை கொடுக்கும். நோயின் இறுதிக் கட்டத்தில் மரணம் ஏற்படும்.

# கற்றுக் கொள்!




உலகம் பரந்தது உணர்ந்து கொள்
உண்மை பேசக் கற்றுக் கொள்

பண்பு என்பதை அறிந்து கொள்
பணிவாய் இருக்கக் கற்றுக் கொள்

சுத்தம் எதுவெனக் கற்றுக் கொள்
சுறுசுறுப்புடனே இருந்து கொள்

ஒழுக்கம் உயர்வு புரிந்து கொள்
உயர்வாய் வாழ்ந்திடக் கற்றுக்கொள்!


# பொருத்தமற்றது எது?




இங்கே 5 உருவங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றில் ஓர் உருவம் இந்தத்தொகுதிக்குப் பொருத்தமில்லாதது. அந்தப் பொருத்தமில்லாத உருவம் எது என்று உங்களால் கண்டுபிடிக்க முடிகிறதா?

முடியாவிட்டால் XV ஆம் பக்கத்திலுள்ள விடையைப் பார்த்துக் கொள்ளுங்கள்

# வட்டத்தை நிரப்புங்கள்



தரப்பட்டுள்ள வட்டத்தில் ஒரு கால் பாகம் துண்டித்து எடுக்கப்பட்டுள்ளது. கீழே தரப்பட்டுள்ள நான்கு துண்டுகளில் எந்தத்துண்டு வட்டத்திலிருந்து துண்டித்து எடுக்கப்பட்டிருக்கும் என்பதைக் கண்டுபிடித்து வட்டத்திலுள்ள துண்டித்த பாகத்தை நிரப்புங்கள்.




(விடை XV ஆம் பக்கத்தில்)

# வித்தியாசம் தெரிகிறதா?





இங்குள்ள இரு படங்களுக்குமிடையில் குறைந்தபட்சம் ஒன்பது வித்தியாசங்கள் உள்ளன. அவற்றைக் கண்டுபிடியுங்கள்.

(விடை XV ஆம் பக்கத்தில்)